

# அசோகவாசகம்

ஆறும் வகுப்பு

130
130
3-64
MADRAS RECORD OFFICE
TB
031 (62)
N64
135629.

# அசோக வாசகம்

## ஆரும் வகுப்பு

[1957ஆம் ஆண்டில் வெளிவந்த இணைக்கப் பெற்ற ஆரம்பக் கல்விப் பாடத் திட்டப்படி எழுதப்பெற்றது.]

சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை அவர்களும்
மதுரை, நிர்மலா பெண்கள் உயர்பள்ளித்
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான், மு. இராமகிருட்டிணன், B. A., B. T.,
அவர்களும் எழுதியது.

MADRAS RECORD
MADRAS

பதிப்பாளர்
வி. சூ. சுவாமிநாதன்
14, மேலக்கோபுரத் தெரு, மதுரை-1.
☎ 4206

3/27, பிராட்வே,
சென்னை-1.

128, வெரைட்டி ஹால் ரோடு,
கோயமுத்தூர்-1.

பதிப்புரிமை]

[விலை ரூ. 1-50.

முதல் பதிப்பு—1960
மூன்றும் பதிப்பு—1964

சென்னை-600 008.
135629

பாரதி பிரஸ், மதுரை :—'64.

# முன்னுரை

1957இல் சென்னை அரசின் கல்வித் துறையினரால் வெளியிடப்பெற்ற திருத்தமமைந்த தமிழ்ப் பாடத் திட்டத்திற்கிணங்க, இந்நூல் ஆறும் வகுப்பு மாணவர்களுக்கென யாக்கப் பெற்றுள்ளது.

பாடத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட நூல்களிலிருந்தும், பிறவற்றிலிருந்தும் மாணவர்கள் விரும்பிக் கற்கக்கூடிய சுவைமிக்க செய்யுட்களைத் தேர்ந்தெடுத்து, வாழ்த்து, நீதிப் பகுதி, கதைப் பகுதி, பல்சுவைப் பகுதி என்ற தலைப்புகளில் அமைத்துக் கொடுத்துள்ளோம். செய்யுள் அடிக் கணக்கும் திட்டத்தில் கண்டவாறு கொடுக்கப் பெற்றுள்ளது. மாணவர்கள் மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற செய்யுட்களை (*) உடுக்குறியில் காட்டியுள்ளோம்.

உரைநடைப் பகுதியில் நூற்றுக்குப் பத்து விழுக்காடு தற்கால எழுத்தாளர்களின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பிற கட்டுரைகள் இலக்கியத் தொடர்புடையனவாக இருத்தலோடு மாணவர்களின் மொழி அறிவும், கலை அறிவும் ஒருங்கே வளருமாறு எழுதப் பெற்றுள்ளன. செய்யுட்பகுதி, உரைநடைப்பகுதி ஆகிய இரண்டிலும் மாணவர்களுக்கு உறுதுணையாயிருக்க வேண்டிய அருஞ்சொற்பொருள்கள், வினாக்கள், பயிற்சிகள் ஆகியவையும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆக்கியோர்

# பொருளடக்கம்

## உரைநடைப் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நாவலந் தண்பொழில் நறுமலர் | ... | 7 |
| 2. | புத்துலகம் கண்ட பெரியார் | ... | 12 |
| 3. | மைசூர் பெற்ற மாணிக்கம் | ... | 17 |
| 4. | கவி தாகூர் | ... | 23 |
| | (வித்துவான் ஈ. சுப்பிரமணியம்) | | |
| 5. | சண்டையை மறந்த சிறுமியர் | ... | 29 |
| 6. | காவிரி | ... | 34 |
| 7. | தென்னாட்டுக் காந்தியார் | ... | 39 |
| | (வித்துவான் அம்பை, இரா. சங்கரனார்) | | |
| 8. | இறவாத புலமை | ... | 45 |
| 9. | நாவாய் ஊர்ந்த நற்றமிழ் வல்லார் | ... | 49 |
| 10. | மார்க்கோ போலோ | ... | 54 |
| 11. | இருபெருங் காப்பியங்கள் | ... | 61 |
| 12. | நாட்டைக் காத்த சிறுவன் | ... | 67 |
| 13. | உறவினர்க்கு முடங்கல் எழுதும் முறை | ... | 71 |
| 14. | அடிமைகட்கு இரங்கிய அண்ணல் | ... | 75 |
| 15. | நோபெல் பரிசு ஏற்படுத்திய வள்ளல் | ... | 79 |
| 16. | ஐந்தாண்டுத் திட்டம் | ... | 84 |
| 17. | ஐக்கிய நாடுகளின் அமைப்பு | ... | 90 |
| 18. | யுவான் சுவாங் | ... | 96 |
| 19. | ஐயம் தீர்த்த ஆசான் | ... | 100 |
| 20. | தமிழ் மாணவரான ஆங்கிலேயர் | ... | 105 |
| 21. | நானிலம் | ... | 110 |
| 22. | வானூர்தி தந்த வல்லுநர் | ... | 116 |
| 23. | வேதநாயகம் பிள்ளை | ... | 120 |
| | (பண்டித மீ. கந்தசாமிப் புலவர்) | | |
| 24. | நெறிமுறை பிழையா மன்னவன் | ... | 126 |
| 25. | வள்ளலைக் காத்த வள்ளல் (நாடகம்) | ... | 130 |

# செய்யுட் பகுதி


| | | | |
|---|---|---|---|
| I | வாழ்த்து | ... | 141 |
| II | நீதிப் பகுதி | | |
| | 1. நீதிநெறி விளக்கம் | ... | 145 |
| | 2. நன்னெறி | ... | 147 |
| | 3. திருக்குறள் | ... | 149 |
| | 4. நான்மணிக் கடிகை | ... | 152 |
| | 5. ஆசாரக் கோவை | ... | 154 |
| III | கதைப் பகுதி | | |
| | 1. குசேலோபாக்கியானம் | ... | 157 |
| | 2. காகம் நாகத்தைக் கொன்ற கதை | ... | 160 |
| IV | பல்சுவைப் பகுதி | | |
| | 1. முக்கூடற் பள்ளு | ... | 162 |
| | 2. திருக்குற்றுலக் குறவஞ்சி | ... | 163 |
| | 3. பாரத தேசம் | ... | 164 |
| | 4. கடமை யுணர்ச்சி | ... | 165 |
| | 5. புத்தகசாலே | ... | 167 |
| | 6. குடியரசு வாழ்த்து | ... | 167 |


## மனப்பாடத்திற்கு உரியன

(அந்தந்தச் செய்யுட்களில் உடுக்குறி (*) இட்டுக் காட்டப் பெற்றுள்ளன.)

| | | | |
|---|---|---|---|
| வாழ்த்து | ... | 28 | வரிகள் |
| நீதிநெறி விளக்கம் | ... | 8 | ,, |
| நன்னெறி | ... | 12 | ,, |
| திருக்குறள் | ... | 20 | ,, |
| நான்மணிக் கடிகை | ... | 4 | ,, |
| குசேலோபாக்கியானம் | ... | 16 | ,, |
| திருக்குற்றுலக் குறவஞ்சி | ... | 8 | ,, |
| பாரத தேசம் | ... | 16 | ,, |
| கடமை யுணர்ச்சி | ... | 8 | ,, |
| | | 120 | ,, |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா,
விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா,
தவசுப நாமே ஜாகே,
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா,
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய, ஜய ஹே!

—இரவீந்திரநாத தாகூர்

## பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.
நின் திருநாமம், பஞ்சாப்பையும், ஸிந்துவையும்,
குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும்,
திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

Correct Version used. Vide R.C. No. 33/TBC/56 dated 12-7-'56.

# அசோக வாசகம்

## ஆரும் வகுப்பு

### 1. நாவலந் தண்பொழில் நறுமலர்

இமய முதல் குமரி வரை பரந்துபட்ட பெரு நிலத்தை நம் முன்னோர் நாவலந் தண்பொழில் என நவின்றனர். இந் நாவலந் தண்பொழில் தொன்று தொட்டு ஓர் அறிவுப் பூங்காவாக விளங்கி வருகின்றது. இப்பூங்காவிலே பூத்த இலக்கிய மலர்கள் பலவாகும். அம்மலர்கள் பலவற்றுள்ளும் காலத்தையும் இடத்தையும் கடந்துநிற்கும் நறுமலர் திருக்குறளே யாகும். இந் நறுமலர் தமிழ்த் திருநிலத்திலே பூத்தது; எனினும், இந் நாவலந் தண்பொழில் முழுவதற்கும் உரியதாய், உலக முழுவதும் தன் நறுமணம் கமழும்படி ஒப்பற்றுத் திகழ்கின்றது.

இத்தனிமலர் 133 அடுக்குகளாகக் காட்சி தருகின்றது. ஒவ்வோரடுக்கினும் பப்பத்தாக 1330 குறுமையான இதழ்கள் விரிந்துள்ளன. இம்மலரின் புறவிதழ்கள் இருபாலாக அமைந்துள்ளன. அப் புறவிதழ்கள் தனி வாழ்வாகிய அறமாகவும் பொது வாழ்வாகிய பொருளாகவும் கமழ்கின்றன. இப்பூவின் அகமாகிய பொகுட்டினிடத்தே இன்பமாகிய தேன் துளிக்கின்றது. எனவே இம்மலர் முப்பால் என்னும் பெயர் பெற்றது. அறமும் பொருளுமாகிய புறவாழ்வும் இன்பமாகிய அகவாழ்வும் உலகத்து மக்கள் யாவருக்கும் பொதுவாகும். எனினும், இம்மலரின் தண்

மணம் நாவலந் தண்பொழிற்கண் தோன்றிய நன்மலர் களின் மணம் யாவற்றையும் ஒருங்கு திரட்டித் தனி மணமாக விளங்குகின்றது.

தமிழ்ப் பொழிலிலே தோன்றித் தமிழ்த் தென்றலை உயிர்த்து, தமிழ் இன்னீர் பருகித் தளிர்த்துத் தழைத்த திருவள்ளுவர் என்னும் பூங்கொம்பர்தான் இத்தனி மலரைப் பூத்தது. எனினும், இதன் தண்ணிழலும் நறுமணமும் நாவலந் தண்பொழில் முழுவதும் பரவின.

ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இந்தியப் பெரு நிலத்தில் குடியேறிய ஆரியர், இந்திரன் முதலாகிய பல தேவர்களை நோக்கி வேள்வி செய்தனர். அப்பொழுது அவர்கள் பாடிய பாடல்களே வடமொழி வேதங்களாம். ஆடு, மாடு, குதிரை முதலிய விலங்கினங்களை அவ்வேள்வித் தீயிலிட்டுத் தேவர்களுக்கு அவர்கள் ஆவுதி கொடுத்து அவற்றின் புலாலை உண்டனர். இவ்வுயிர்க் கொலை தகாது என அறிஞர் பலர் மறுத்து வந்தனர். அவ்வறிஞர்கள், எல்லாம் வல்ல இறைப்பொருள் ஒன்றுகவே இருக்க வேண்டுமெனக் கருதினர். மற்றும் மக்களுக்குள்ளே பிறப்பினுலேயே உயர்வு தாழ்வு கற்பித்தலும் தவறு எனக் கண்டனர்.

இவ் வறிவுவழியைக் கண்டவர்களிலே வடமொழிப் புலவரும் உண்டு; தென்மொழிப் புலவரும் உண்டு. அந்நாட்களில் வடமொழியும் தென்மொழியும் இமய முதல் குமரிவரை பொது மொழிகளாகக் கற்கப் பட்டுவந்தன. தமிழ்ப்பெருமக்கள் வடவேங்கடம்

முதல் தென்குமரிவரையுள்ள நிலத்தைத் தமிழ் கூறு நல்லுலகம் என்றனர்; ஆயினும், இமயம்வரை, தமிழ் அறவோர் வாழ்ந்து அறத்தைப் போற்றிப் பரப்பி வந்தனர். அவர்கள் வடமொழியிலும் வல்லுநராயிருந்தனர். தமிழ்ப் பேரிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தை எழுதியவர் தொல்காப்பிய ரென்னும் தமிழ்ச் சான்றோர்; எனினும், அவர் அந்நாட்களில் சிறப்புடன் விளங்கிய வடமொழி இலக்கணமாகிய ஐந்திரத்தைக் கற்று நிறைந்த அறிவோடு விளங்கினர். வடமொழிப் புலவர் தென்னாடு போந்து தமிழ் அமுதைப் பருகித் திளைத்தனர். இந்த உறவு மிக்க காலத்திலேதான் வடமொழியிலே உபநிடதங்கள் தோன்றின. தமிழ் மொழியிலே திருக்குறளும் பிற அறநூல்களும் தோன்றின.

திருவள்ளுவர் தமிழ்மொழிக் கடலோடு வடமொழிக் கடலையும் அள்ளிப் பருகியவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. எத்தகையவரோடும் இன்சொல் பேசி, எளிமையோடு பழகி, கொள்ளுவன கொண்டு, தள்ளுவன தள்ளி, வாழ்க்கை என்னும் கலத்திற்குக் கலங்கரை விளக்கமாக அமைந்தவர் நம் வள்ளுவப் பெருந்தகையே யாவர். எனவே, அவர் இயற்றிய திருக்குறள் இந்தியப் பெருநிலத்தின் உயிர்நாடியாகிய பொறையுடைமை, புலான் மறுத்தல், அன்புடைமை, அருளுடைமை, செங்கோன்மை முதலிய பொதுக் கருத்துக்களையே தன் உட்கிடக்கையாகக் கொண்டுள்ளது. காந்தியடிகளின் வாழ்க்கையிலும் இவ்வுண்மைகள் விளங்கித் தோன்றின வென்பதையும் நாம் அறிவோம்.

திருவள்ளுவர்பால் பூத்த நன்மலரின் அடித் தளத்தில் நான்கு பசிய இதழ்கள் விரியப்பெற் றுள்ளன. அவை கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்பனவாம். இவையே அந்நூலின் முன்னுரையாகவும் அடித் தளமாகவும் அமைவன.

வள்ளுவர் பெருமான் எல்லாம் வல்ல இறைப் பொருளினிடத்து உறுதியான நம்பிக்கை கொண்டவர். அம் முழுமுதலை இடைவிடாது நினைத்தலாலேயே உயிர்கள் பிறவி என்னும் பெருங்கடலை நீந்தும் என் பார். மழையானது உயிர்களுக்கு அமிழ்தமாக உதவு கின்றது. அதுவே இறைவனுடைய அருளாகும். அவ்வருளையே துணையாகக் கொண்டு உலகப்பற்றை நீத்தவர்களே நீத்தார் எனப்படுவர். அவ்வாறு நீத்த வர்கள் தெளிந்து ஓதிய உண்மைகளே அறம். அந்த அறநெறியிலே வாழ்ந்து குற்றமற்ற வகையில் பொருளைத் தேடி, இன்பம் நுகர்வதே திருக்குறளின் நோக்கம். இத்தகைய நோக்க முடையவர் பிறரையும் தம்மைப்போல் கருதும் பெற்றியுடையவர் ஆவர். அவர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக விளங்குவர். அவர்களே உண்மையான பண்புடைய வர்கள். அவர்களுடைய ஆணை வழியிலேயே உலகம் செல்லுதலால்தான் அது இன்னும் நிலைபெற்று நிற்கின்றது. ஆகவே, இவ்வரிய நறுமலராகிய திருக்குறளின் நறுமணம் நாவலந் தண்பொழில் முழு வதும் பரவினல் யாவரும் தருக்கு ஒழிந்து ஒன்றுபடு வர். அதற்கு ஆவன செய்வது நம் ஒவ்வொருவரது கடமையுமாகும்.

## அருஞ்சொற்பொருள்

தண்பொழில் - குளிர்ந்த சோலை. பூங்கா - பூஞ்சோலை. குறுமையான - சிறிய. பொகுட்டு - தாமரை மலரின் கொட்டை. பொழில்-சோலை. இன்னீர் - இனிமையான நீர். பூங்கொம்பர் - பூக்கள் மலர்ந்துள்ள கிளை. வேள்வி-யாகம். ஆவுதி-வேள்வித் தீயில் இடும் உணவுப் பொருள்கள்; நெய், இறைச்சி முதலியன. கலம் - கப்பல். கலங்கரை விளக்கம் - கப்பல்களுக்குத் திசைகாட்டும் விளக்கு. பசிய - பசுமையான. உட்கிடக்கை - கருத்து. ஆணை - கட்டளை. தருக்கு - செருக்கு. ஐந்திரம் - இந்திரனால் செய்யப்பட்ட வடமொழி இலக்கணம். பெற்றி - தன்மை.

## வினாக்கள்

1. நாவலந் தண்பொழில் நறுமலர் என்பது யாது? அது எவ்வாறு திகழ்கின்றது?
2. இந்நறுமலர் எவ்வாறு அமைந்துள்ளது?
3. அறிஞர்கள் எதனை மறுத்து வந்தனர்? அவர்கள் கொண்ட கருத்துக்கள் யாவை?
4. திருக்குறள் தோன்றிய காலம் எத்தகையது?
5. திருக்குறள் எவ்வெக் கருத்துக்களை உட்கிடக்கையாகக் கொண்டுள்ளது?
6. திருக்குறளின் அடித்தளமாக அமைவன யாவை?
7. திருக்குறளின் நோக்கம் யாது?
8. நம் ஒவ்வொருவரது கடமையும் யாது? ஏன்?

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக :—

பூங்கா, பொழில், கலங்கரை விளக்கம், உட்கிடக்கை, ஆணை, கலம்.

(2) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக:—

அகவாழ்வு, நாலாயிரம், நல்லுலகம், தென்னாடு, உலகப்பற்று.

(3) பின்வரும் சொற்களிலிருந்து சுட்டெழுத்துக்கும் வினு வெழுத்துக்கும் எடுத்துக்காட்டுகள் தருக :—

அணிகலன், அவன், எப்புத்தகம், இவ்வீடம், இலே, இந்தறுமலர், யார், யாடு, வந்தானு, அட்டை, இடம், அவ்விடம், எவன்.

---

## 2. புத்துலகம் கண்ட பெரியார்

இம் மாபெரும் உலகத்தின்கண் ஐந்து பெருநிலப் பரப்புகள் உள்ளன. இப் பெருநிலங்களிலே செல்வச் சிறப்புடன் விளங்கும் அமெரிக்காவை வரலாற்று வல்லுநர் 'புத்துலகம்' என அழைக்கின்றனர். கி. பி. பதினைந்தாம் நூற்ருண்டிற்கு முன் இம் மாபெரு நிலத்தை உலக மக்கள் யாவரும் அறிந்திலர். இப் பெருநிலத்தைக் கண்டறிந்து, உலகிற்கு அறிவித்த பெருமை **கொலம்பஸ்** என்னும் பெரியாரைச் சார்ந்தது.

இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜெனேவா என்னும் நகரில் கி. பி. பதினைந்தாம் நூற்ருண்டில் தோன்றினர். இவர் இளம் பருவத்திலேயே அஞ்சாமையும், சுறுசுறுப்பும், கூர்த்தமதியும் உடையவராய் இருந்தார். இவர் புதிய பொருட்களை ஆராய்வதில் ஆர்வமும் விருப்பமும் கொண்டிருந்தார். இவர் ஒரு மீகாமன் ஆகிவிடவேண்டும் என்னும் பேரவாக் கொண்டிருந்தார். இவர் அடிக்கடி மாலுமிகளைக் கண்டு பேசி இன்புறுவார். அம்மாலுமிகள் தாம் கண்டறிந்த நாடுகளின் வீட்டுக் கூரைகள் தங்கத் தகடுகளால் வேயப்பட்டிருந்தன வென்றும், யானைகளின் தந்தங்கள் தங்கத்தால் போர்த்தப்பட்டிருந்தன வென்றும்

கூறினர்கள். இவ்வுரைகள் கொலம்பஸை ஊக்குவிப்பனவாயின.

பிள்ளைப் பருவத்தில் இருக்குங் காலத்திலேயே இவர் கப்பலில் பணியாற்றிக் கலஞ்செலுத்துவதில் கைவன்மை யுடையவரானர். ஒருபொழுது, இவர்



கப்பலில் சென்று கொண்டிருந்தார். போர்த்துகல் நாட்டிலிருந்து ஐந்து கல் தொலைவிலே இவருடைய கலனைக் கடற்கொள்ளையிடுவோரின் கலன் ஒன்று தாக்கி மூழ்கடித்து விட்டது. இவர் நீந்துவதில் வல்லுநர்; ஆதலின், ஐந்து கல் தொலைவையும் நீந்திப் போர்த்துகல் நாட்டை அடைந்தார். அந் நாட்டு மாலுமிகள் இவரை மகிழ்வுடன் வரவேற்ருர்கள். இவர் போர்த்துகலிலேயே வாழ உறுதி பூண்டார்.

உலகம் தட்டை வடிவமன்று; உருண்டை வடிவத்தையுடையது என அக்கால ஐரோப்பிய அறிஞர்கள் அறிந்தனர். தாலமி என்னும் பேரறிஞர் இயற்றிய ஆய்வு நூலையும், மார்க்கோ போலோ வரைந்த வாழ்க்கைக் குறிப்புக்களையும் கற்றறிந்ததன் விளைவாகப் போர்த்துகலிலிருந்து நேர் மேற்காக 3000 கல் தொலைவு சென்றால், கிழக்கு ஆசியாவை அடையலாம் என்று கொலம்பஸ் கருதினர். தாலமியின் தவறான குறிப்பினாலேயே கொலம்பஸ் ஆசியாவின் தொலைவை இவ்வாறாகக் கணக்கிட்டு விட்டார்.

இவர் பல புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க எண்ணங் கொண்டார். ஆதலால் இவர் பல பெருஞ் செல்வர்களை நாடி மரக் கலன்களையும் மீகாமன்களையும் உதவுமாறு வேண்டினர். அவர்களுட் சிலர், இவரைப் பேதையென்றும், பித்தம் தலைக்கேறியவர் என்றும் எள்ளினர். ஆயினும் இவர் உறுதியைக் கைவிடவில்லை. ஒரு நாள் போர்த்துகல் மன்னரிடத்து உதவியை நாடினர். கொலம்பஸ் வைத்திருந்த வரைப் படங்களையும் குறிப்புக்களையுங் கொண்டு அவர்களாகவே ஆசியாவிற்குப் புது வழி கண்டுபிடிக்க முற்பட்டனர். இவ்வாறாகக் கொலம்பஸை ஏமாற்ற நினைத்தனர் அக்கீழறுப்போர். இதுவுமன்றி அவர்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றி ஆசியாவை அடைவதில் வெற்றிபெறுந் தறுவாயில் இருந்தனர்.

கொலம்பஸ், இறுதியாக, ஸ்பெயின் நாட்டின் அரசியாகிய இசபெல்லாவை நாடித் தன்னுள்ளக் கருத்தை வெளியிட்டார். இசபெல்லா கொலம்பஸின் உறுதியையும் ஊக்கத்தையும் உண்மையையும் கண்டு

உதவியளிப்பதாக உறுதியளித்தார். ஆனல் அரசின் பொருள் நிலே அதற்கு இடந்தரவில்லே. ஆதலின் இசபெல்லா அம்மையார் தம் அணிகலன்கள் சிலவற்றைக் கொடுத்து, அவற்றை அடகுவைத்து மரக்கலன்களேப் பெறுமாறு கூறினர்.

கொலம்பஸ் 1492ஆம் ஆண்டில் பெருங்கடலேக் கடக்கத் தக்க சான்டோ மேரீயா என்னும் கலனேயும், பிண்டா, நீஞ என்னும் சிறு கலன்களேயும் கொண்டு பாலோசு என்னும் துறைவாயிலிருந்து தம் கடற் செலவைத் தொடங்கினர். அப்பொழுது அவருக்கு யாண்டு நாற்பத்திரண்டு நிறைவுற்றிருந்தது. இவர் இருபத்தொரு நாட்களில் ஆசியாவை அடைந்து விடலாம் என எண்ணினர். ஆனல் 21 நாட்கள் சென்றும் கரை தென்படவில்லே. கப்பலில் இருந்தவர்களில் பெரும்பான்மையோர் சிறைப்பட்டவர்களாகையால் கிளர்ச்சி செய்தனர்; ஸ்பெயினுக்குத் திரும்புமாறு கூறினர். ஆனல் கொலம்பஸ் அவர்களே அச்சுறுத்தியும், அணேத்துப் பேசியும் மேற்கு நோக்கியே செல்ல விடுத்தார்.

எழுபத்தொரு நாட்கள் சென்று கொலம்பஸ் கரையைக் கண்டார். உடனே கலன்களில் இருந்தோர் ஆடினர், பாடினர். மறுநாட்காலேயில் கதிரவன் தோன்றவும் கொலம்பஸும் அவரது தோழர்களும் கரையை அடைந்தனர். கொலம்பஸ் அத்தீவு ஸ்பானிய நாட்டு மன்னருக்கு உரிமை உடையது எனப் புகன்ருர். அந்நாட்டு மக்கள் இவர்களே வியப்புடன் நோக்கினர். கொலம்பஸ் அவர்களே அருகழைத்துப் பரிசில்கள் வழங்கி அவர்களேத் தம்பாற் படுத்தினர். கொலம்பஸ்

சென்றிறங்கிய தீவு பஹாமாஸ் தீவுக் கூட்டத்தி லொன்று. சில நாட்கள் சென்றபின் அதனை யடுத்துள்ள கியூபாவெனும் தீவையடைந்தார். கொலம்பஸ் கியூபாவினையே சீனு என்று தவருக எண்ணினுர். தாம் கண்டுபிடித்த நாட்டினை உலக மக்கள் யாவரும் அறிந்திருப்பர் என்றே எண்ணினுர்.

இத்துணைப் பெருநிலத்தை உலக மக்கள் யாவருக்கும் அளித்த பெரியாராகிய கொலம்பஸ் தம் இறுதிக் காலத்தில் துன்புற்ருர். பொது நன்மைக்கு உண்மையாகப் பாடுபடுகின்ற பலரை அவர்தம் வாழ்நாளிலேயே உலகம் அறியாது போகின்றது. அது அவர்களுடைய குற்றமன்று; உலகத்தின் அறியாமையேயாம். இத்துணை அஞ்சா நெஞ்சமும் உறுதியும் கொண்ட மாலுமிகளும், பிறரும் ஐரோப்பிய நாட்டில் தோன்றியுள்ளதனுலேயே இன்று வரலாற்றில் அவர்கள் பெரும் பங்கு கொள்ளலாயினர்.

## அருஞ்சொற்பொருள்

பெருநிலப் பரப்பு – கண்டம். புத்துலகம் – புதிய உலகம். கூர்த்த மதி - கூரிய அறிவு. மீகாமன் - கப்பலோட்டி. பேரவா – மிகுந்த ஆவல். பணியாற்றி – வேலைசெய்து. கைவன்மை - கைத்திறமை. கலன் – கப்பல். ஆய்வு நூல் – ஆராய்ச்சி நூல். கல் - ஒரு மைல் தொலைவு. பேதை – அறிவிலான். எள்ளினர் - இகழ்ந்தனர். கீழறுப்போர் – வஞ்சகர். அணிகலன் – ஆபரணம். கடற்செலவு - கடற்பயணம். அச்சுறுத்தி - பயமுறுத்தி.

## வினுக்கள்

1. கொலம்பஸ் இளமையிலே கொண்டிருந்த விருப்பம் யாது?

2. கொலம்பஸ் எவ்வாறு போர்த்துகல் நாட்டை அடைந்தார்?

3. கொலம்பஸ் ஆசியாவின் தொலைவை எவ்வாறு கணக்கிட்டார்?

4 கொலம்பஸின் திட்டம் யாது? அது எவ்வாறு நிறைவேறியது?

5. கொலம்பஸ் சென்றடைந்த தீவு யாது? அதனை அவர் எவ்வாறு சென்றடைந்தார்?

6. உலகத்தின் அறியாமை எத்தகையது?

### பயிற்சி

(1) தொடர்களில் அமைத்தெழுதுக :—

கூர்த்தமதி, மீகாமன், பேரவா, பணியாற்று, கைவன்மை, எள்ளினுன், அச்சுறுத்து.

(2) சொற்களைப் பிரித்தெழுதுக :—

நூற்ருண்டு, வடிவமன்று, இடந்தரவில்லை, மரக்கலன்.

(3) பின்வரும் சொற்களிலுள்ள உயிர்மெய்யெழுத்துக்கள் ஒவ்வொன்றையும் வல்லின உயிர்மெய், மெல்லின உயிர்மெய், இடையின உயிர்மெய் என்ற வகைகளாகப் பிரிக்கவும் :—

மறுநாள், கூட்டத்தில், ஒன்று, கியூபா, இத்துணை.

---

## 3. மைசூர் பெற்ற மாணிக்கம்

1960 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாளன்று நம் இந்திய நாடு முழுவதும், நூருண்டு வாழும் பெரியார் ஒருவரின் பிறந்தநாளைக் கொண்டாடியது. இதைச் செய்தித்தாள்களில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவருடைய உருவத்தை அஞ்சல் தலைகளில் அச்சிட்டும் வெளியிட்டுள்ளார்கள். அப்பெரியாரே 'மைசூர் பெற்ற மாணிக்கம்' என்னும் திரு. விசுவேசுவரய்யா அவர்கள் ஆவார். அப்பெரியாரின் வாழ்க்கையையும்

அவர் ஆற்றிய அருந்தொண்டுகளையும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்பெரியாரின் முழுப்பெயர் மோட்சகுண்டம் விசுவேசுவரய்யா என்பதாகும். 1861ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் நாளன்று முத்தன ஹல்லி



என்ற சிற்றூரில் பிறந்தார். இவ்வூர் பெங்களூரி லிருந்து முப்பத்தெட்டுக் கல் தொலைவில் இருக்கிறது. மோட்சகுண்டம் என்பது இப்பெரியாரின் மூதாதையர் வாழ்ந்த சிற்றூரைக் குறிப்பதாகும். இவருடைய தந்தையார் ஸ்ரீனிவாச சாஸ்திரி என்பவர்; தாயார் வெங்கச்சம்மா என்பவராவார்.

வெங்கச்சம்மா தம் மகனைச் சிறுபருவம் முதலே ஒழுங்கு, கட்டுப்பாடு, கடமைகளைச் செய்வதில் கருத்தாயிருத்தல் ஆகிய பண்புகளைக் கொள்ளுமாறு பயிற்றுவித்தார். சிக்பல்லபூர் என்ற அவ்வூர்ப் பள்ளிக்கூடத்தில் விசுவேசுவரய்யா கல்வி கற்றார். நாதமுனி நாயுடு என்னும் பள்ளி ஆசிரியர், இவருடைய அரிய பண்புகளை அறிந்து மிக மகிழ்ந்தார். நாள்தோறும் மாலையில் தம் வீட்டிற்கு இவரை வரச்செய்தார். அதனால் இவர் அரிய நூல்களைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

விசுவேசுவரய்யாவின் வாழ்க்கை மிக ஒளியோடு திகழ இவருடைய தாய்மாமனை இராமையா என்பவர் முதல் காரணமாக இருந்தார்.

இவருக்குப் பதினைந்து யாண்டு நிறைவுற்றபோது தந்தையார் ரெய்ச்சூரில் காலமானார். பிறகு இவர் பெங்களூருக்குப் போய் மத்தியக் கல்லூரியில் பயின்றார்; பி. ஏ. பட்டத்தைப் பெற்றார். பிறகு புனவிலுள்ள பொறியியல் கல்லூரியில் உதவிச் சம்பளம் பெற்று 1883ஆம் ஆண்டு பொறியியல் பட்டம் பெற்றார்; பம்பாய் மாநிலத்திலேயே இவர் முதலாவதாகத் தேர்ந்தார்!

பட்டம் பெற்ற விசுவேசுவரய்யா பொது மராமத்துத் துறையில் பணியாற்றத் தொடங்கினார். அந்நாளில் கோகலே, திலகர், இரானடே ஆகிய தேசியத் தலைவர்களின் நட்பைப் பெற்றார். சில ஆண்டுகள் பம்பாயில் பணியாற்றிய இவர், மேலை நாடுகளில் சுற்றுச் செலவு செய்யும் வாய்ப்பைப் பெற்றார். தாய்நாடு

திரும்பியதும் ஆனந்தா ராவ் என்ற மைசூர்த் திவானல் மைசூர் மாநிலத்தின் தலைமைப் பொறியியல் வல்லுந ராக நியமிக்கப்பட்டார். அதையடுத்து மைசூர்த் திவான் பதவியும் அளிக்கப்பட்டார்.

ஆருண்டுகள் மைசூர்த் திவானகப் பணியாற்றி ஞர்; அரிய பல பொதுநலத் திட்டங்களை நிறைவேற் றினர். காவிரியின் குறுக்கே கிருஷ்ணராஜசாகர் என்ற அணையை இவரே கட்டினர். ஒரு பல்கலைக்கழகம், மாநில பாங்கு, வாணிகச் சங்கம் ஆகியவற்றை நிறுவி ஞர். மைசூரில் முதன் முதலில் இருப்புப் பாதையை அமைத்தவரும் இவரே! இன்னும் பற்பல திட்டங்களை யும் உருவாக்கினர். இவர் செய்த அரிய முயற்சியால் பத்ராவதியில் ஓர் இரும்பு உருக்குத் தொழிற்சாலையும், லக்காவல்லி என்னும் இடத்தில் மின்னுற்றல் நிலைய மும் நிறுவப்பட்டன. இவ்வாறு மைசூர் மன்னர் அளித்த மிகப் பெரிய உதவியினல் மைசூரை ஒரு வள மான மாநிலமாக விசுவேசுவரய்யா ஆக்கிவிட்டார்.

1957ஆம் ஆண்டு நிலக்கொடை இயக்கத்தைத் தொடங்கிய விநோபா பாவே பெங்களூருக்கு வந்திருந் தார். அப்போது விசுவேசுவரய்யா நோய்வாய்ப்பட் டிருந்தார். இதையறிந்த விநோபா ஒருநாள் காலை 5–30 மணிக்கு விசுவேசுவரய்யாவைப் பார்க்க அவர் வீட்டுக் குப் போனர். இதைப்பற்றி விசுவேசுவரய்யாவுக்கு எதுவும் தெரியாதாகையால் அவரை வரவேற்கத் தக்க ஏற்பாடுகள் செய்யவில்லை. அந்த நேரத்தில் யாரும் விழிக்கவில்லை என்பதை விநோபா கண்டார். சிறிது நேரம் காத்திருந்த அவர் ஒரு சிறிய காகிதத்தில் "விசு வேசுவரய்யா அவர்கள் மிக விரைவில் நோய்நீங்கி

நலம்பெற வேண்டும்'' என்று எழுதி வீட்டுத் திண்ணையில் வைத்துவிட்டுப் போய்விட்டார். விடிந்தபின் அவரிடம் அக்காகிதக் குறிப்பை இல்லத்தினர் காட்டினர். படித்துப் பார்த்த அவர், வினேபா பாவேயைத் தாம் வரவேற்றுச் சிறப்பிக்க இயலாமல் போயிற்றே என்று மிகவும் வருந்தினர். உடனே தம் மருமக்களிடம் ஒரு கூடை நிறையப் பழங்களை நிரப்பி வினேபாவிடம் கொடுக்கச் சொன்னர். தம்மை வினேபா மன்னிக்க வேண்டும் என்று கேட்டதாகவும் சொல்லியனுப்பினர்.

இதைப்போல ஒருநாள் ராஜாஜி அவர்கள் இரவில் விசுவேசுவரய்யாவைப் பார்த்து, "நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குக்கூடத் தங்களைப் புகைப்படம் எடுக்கலாம் போலிருக்கிறதே!'' என்று கூறினர். ஏனெனில் எந்த நேரத்திலும் இவர் தூய்மையான ஆடைகளையே அணிந்திருப்பார்.

விசுவேசுவரய்யா குறித்த நேரத்தில் கடமைகளைச் செய்வதில் கருத்துள்ளவர். ஒழுக்கம் மிகுந்த பழக்கங்களைப்பெற்று எப்போதும் மிக்க மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் இருப்பார். தம்மைத் தேடிவந்தவர்களை நெடுநேரம் நிற்கச் செய்யாமல் அன்போடு உசாவி அனுப்புவார். வீண்பேச்சுக்களில் ஈடுபடுவதையும், குறிக்கோளில்லாத வாழ்க்கைப் போக்கையும் இவர் வெறுப்பார். செய்த வேலையின் மதிப்பைத்தான் இவர் பெரிதும் போற்றுவார். அதற்காகத் தரும் பணத்தைப் பொருட்படுத்தவே மாட்டார். இவர், மேல் நாடு சென்று திரும்பியவரானலும் நம் நாட்டுப் பண்பாடுகளை மறக்கவில்லை. தம் குடிக்கேற்ற கடமைகளைச் செய்வதில் இவர் மிக்க கருத்துடனிருந்தார்.

ஒவ்வொரு மனிதனும் தனக்குரியவற்றைச் செய்வதில் கடிய உழைப்பும் இடைவிடா முயற்சியும் கொள்ளவேண்டும் என்பது இவர் நாட்டுமக்களுக்குக் கூறும் செய்தியாகும்.

இந்தியத் தாயின் அருந்தவப் புதல்வர் பலரில் 'நூருண்டு வாழ்ந்த பெருமை' விசுவேசுவரய்யாவுக்கே உரியதாகும். அவர் அரிய பல தொண்டுகளைச் செய்து உயர்ந்தவர். ஆகவேதான் அவருடைய நூருண்டுப் பிறந்த நாள் விழாவை நாடெங்கும் மிக்க மகிழ்ச்சியோடும் பெருமையோடும் கொண்டாடினுர்கள்.

மாணவர்களாகிய நீங்களும் இவரைப்போல் விளங்கவேண்டும் என்று உறுதிபூண்டு அதற்கேற்ப ஒழுகவேண்டும்.

## அருஞ்சொற்பொருள்

மூதாதையர் – முன்னேர். பண்பு – குணம். பொறியியல்– எஞ்சினியரிங் படிப்பு. மாநிலம்–மாகாணம். உசாவி நலம் வினவி; அளவளாவி. குறிக்கோள்–வாழ்க்கையின் நோக்கம்.

## வினுக்கள்

1. அண்மையில் இந்திய அரசாங்கத்தார் விசுவேசுவரய்யாவின் உருவத்தைத் தபால் தலைகளில் ஏன் அச்சிட்டார்கள்?

2. விசுவேசுவரய்யா கல்வி கற்பதில் எவ்வாறு சிறந்து விளங்கினுர்?

3. இவர் மைசூர்த் திவானுக இருந்தபொழுது அந்த மாநிலத்தின் செல்வ நிலையைப் பெருக்க என்ன திட்டங்களை நிறைவேற்றினுர்?

4. வினேபா பாவே விசுவேசுவரய்யாவைக் காணச் சென்றபொழுது நடந்ததென்ன?

5. விசுவேசுவரய்யாவின் சிறப்பியல்புகளைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக.

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—

மூதாதையர், பொறியியல், மாநிலம், உசாவு, குறிக்கோள்.

(2) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக:—

நூறு + ஆண்டு. பணி + ஆற்று. தொழில் + சாலை. தெரியாது + ஆகையால். குறிக்கோள் + இல்லாத. இந்தியா + தாய்.

(3) பின்வரும் சொற்களிலிருந்து உயிர்மெய்க் குற்றெழுத்து, உயிர்மெய் நெட்டெழுத்து ஆகிய இரண்டுக்கும் எடுத்துக் காட்டுகள் தருக —

நூறுண்டு; செய்தித்தாள்.

(4) பின்வரும் பெயர்ச் சொற்களை இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என்று பிரித்துக் காட்டுக:—

மரம், முக்காலி, பாம்பு, வளையல், கல், தேள், கூட்டம்.

# 4. கவி தாகூர்

(வித்துவான் ஈ. சுப்பிரமணியம்,
சேதுபதி உயர்பள்ளி, மதுரை.)

நமது இந்தியா நாடு இருபதாம் நூற்றுண்டிலிருந்து இலக்கியம், அறிவியல், தொழில் முதலிய துறைகளில் முன்னேறி வருகின்றது. தூங்கிக் கிடந்த இந்நாட்டைப் பல பேரறிஞர்களும், நாட்டுப்பற்றுடையவர்களும் விழித்தெழச் செய்துள்ளனர். தமிழ் நாட்டுப் பாரதியாரும் வங்காளத்து இரவீந்திரநாத் தாகூரும், இலக்கியங்களை எழுதி மாந்தரின் நாட்டுப் பற்றை வளர்த்த பெரும்புலவர்களாவார்கள்.

கவி தாகூர் 1861ஆம் ஆண்டு கல்கத்தா நகரில் பிறந்தார். அவருடைய தந்தையான தேவேந்திர

நாத் தாகூர் சிறந்த அறிஞராவார். அவர் பண்டைக் கால முனிவர்களைப் போன்றவர். தாகூரின் குடியோ செல்வக் குடியாகும். ஆதலால் இரவீந்திர நாதருக்குத்



தம் இளமைப் பருவம் இன்பமாகவே சென்றது. இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்க அவருக்கு வசதி இருந்தது. கங்கைக் கரையிலும் இமயமலைச் சாரலிலும் இருந்த பல இடங்களுக்குப் போகும்போது

தேவேந்திரநாத் தாகூர், தம் மகனையும் அழைத்துப் போவார். இதனுல் இரவீந்திரரின் கவிதை உணர்ச்சி வளர்ந்தது.

இளமையிலேயே தாகூர் தம் தாயாரை இழந்து விட்டார். வீட்டு வேலையாட்களே தாகூரைப் பேணி வந்தார்கள். அவர்களின் கட்டுப்பாடும், பள்ளிப் படிப்பும், வீட்டில் தமக்குக் கற்பிக்கும் ஆசிரியரின் கண்காணிப்பும் தாகூருக்கு அறவே பிடிக்கவில்லை. அவர் தன்னுரிமையோடு வாழ விரும்பினுர். தமக்கு விருப்பமான நூல்களை ஆர்வத்தோடு படிப்பார். இசையிலும், பாக்கள் இயற்றுவதிலும் அவருக்கு நல்ல திறமை இருந்தது.

தாகூரின் இல்லத்தார் 'பாரதி' என்ற இதழை நடத்தி வந்தனர். இரவீந்திரரின் செய்யுட்கள் அதில் வெளிவந்தன. இவ்வாறு வெளிவந்த செய்யுட்களின் தொகுதியான 'ஸந்தியா கீதம்' என்ற நூலிலேதான் நமது "ஜன கண மன" என்ற நாட்டுப் பாடல் அடங்கியுள்ளது.

1877ஆம் ஆண்டு கவி தாகூர் இங்கிலாந்து சென்று இலண்டன் பல்கலைக் கழகத்தில் மூன்று ஆண்டுகள் ஆங்கிலமும் இசையும் பயின்ருர். இது முடிந்ததும் தாயகம்திரும்பினுர். இருபத்து மூன்ருண்டு நிறைவுற்ற இரவீந்திரருக்கும் மிருணுளினி தேவிக்கும் திருமணம் நடந்தது. இல்லற வாழ்வில் மிருணுளினி யின் அன்பும் பணிவிடையும் தாகூருக்கு இன்றியமை யாதனவாய் இருந்தன. 1902இல் மிருணுளினி தேவியார் காலமானபொழுது தாகூர் துன்பக் கடலிலே ஆழ்ந்தார். 'ஸ்மரன்' (நினைவு) என்ற

கையறுநிலைச் செய்யுளில் அவருடைய துயரம் பொங்கி வருவதைக் காணலாம்.

நமது நாட்டுக் கல்விமுறையைப் பின்பற்றி இலக்கியம், ஓவியம், இசை முதலிய கலைகளைத் தாகூர் வளர்க்க எண்ணினார். 1901ஆம் ஆண்டில் சாந்தி நிகேதனம் என்ற கல்வி நிலையத்தைத் தொடங்கினார். இது போல்பூரிலிருந்து இரண்டு கல் தொலைவில் விரிந்த வெளியிடத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மாணவர்கள் இயற்கையோடியைந்து வாழ்கிறார்கள். ஆடல், பாடல் முதலிய கலைகள் இங்கு முதன்மை இடம் பெறுகின்றன. வகுப்புக்கள் சோலை நிழலிலே நடைபெறுகின்றன.

சாந்தி நிகேதனத்தில் மாணவர்கள் சாதிசமய வேறுபாடின்றி ஒரே இல்லத்தினர்போல உள்ளனர். இந்தக் கல்வி நிலையத்தை நடத்துவதில் மாணவர் கட்குப் பொறுப்பு உள்ளது. அவர்கள் நாட்டுப்புற மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கிறார்கள்.

1922இல் பெண் கல்விக்காக 'நாரீபவனம்' அமைக்கப்பட்டது. பிறகு நாட்டுப்புற முன்னேற்றப் பயிற்சிச் சாலையான 'ஸ்ரீ நிகேதனம்' என்பது தொடங்கப்பட்டது. பின்பு கலா பவனம், சங்கீத பவனம், சீன பவனம் முதலியனவும் ஏற்பட்டன. இவையனைத்தும் சேர்ந்து 'விசுவ பாரதி' எனப்படுகின்றன. மாணவர்கள் தங்கள் மனச் சார்புக்கும் விருப்பத்துக்கும் ஏற்ற பாடங்களைப் பயிலவேண்டும் என்பதும், கல்வி, கலைகளைக் கற்றல் கசப்பானது எனக் கருதலாகாது என்பதும் சாந்தி நிகேதனத்தை அமைத்த தாகூரின்

நோக்கங்களாகும். அங்குப் பல்வேறு நாட்டு மாணவர்களும் பயில்கின்றனர்.

செய்யுட்கள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் ஆகிய இலக்கியத் துறைகளில் தாகூர் எழுதியவை உலக அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தன. 1913இல் 'கீதாஞ்சலி' என்ற அவரது நூலுக்கு நோபெல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 6000 பவுன் பெறுமானமுள்ள இப்பரிசுத் தொகையைத் தாகூர் சாந்தி நிகேதனத்திற்கே கொடுத்துவிட்டார்.

தாகூர் தமது தாய்மொழியாகிய வங்காளியில் தான் தம் நூலை முதலில் எழுதினர். பிறகு அவை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. 'கர்ணனும் குந்தியும்,' 'காந்தாரியின் சபதம்,' 'மாலினி,' முதலிய நாடகங்களும், 'மாசி,' 'எலும்புக் கூடு,' 'ஆசாபங்கம்' முதலிய சிறுகதைகளும், 'கோரா,' 'கவிழ்ந்த கப்பல்' முதலிய புதினங்களும் தாகூரால் இயற்றப் பட்டவை. அவருடைய செய்யுட்களில் சிறந்தது 'கீதாஞ்சலி' என்ற தொகுதி. அவர் இயற்றிய இந்த இலக்கியங்கள் எல்லாம் நம் நாட்டின் பண்பாட்டோடு மிளிர்கின்றன.

நோபெல் பரிசுபெற்ற உலகப் பெரும்புலவரான தாகூர், பல நாட்டு அறிஞர்களின் அழைப்பிற் கிணங்கி இங்கிலாந்து, அமெரிக்கா, சீனு முதலிய நாடுகளுக்குச் சென்று, நம் பாரத நாட்டின் பெருமையை விளக்கிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

காந்தியடிகள் நம் தாகூரை எப்பொழுதும் 'குரு தேவ்' என்று அழைப்பார். காந்தியடிகளைப் போன்று,

தாகூர் நம் நாட்டின் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபடவில்லை. எனினும், ஆங்கில அரசாங்கத்தைக் கண்டித்து அவ்வப்போது எழுதியுள்ளார். மேலும் அவரது இலக்கியங்கள் நம் நாட்டிற்கே உரிய பண்பாட்டின் பெருமையை விளக்குகின்றன. நமது நாட்டு வணக்கம் அவரால் இயற்றப்பட்ட தல்லவா? எனவே தாகூரை நாட்டுப்பற்று மிகுந்த ஒரு பெரும் புலவர் எனக் கூறலாம்.

இப்பெரும் புலவர் 1941ஆம் ஆண்டு, தம் 81ஆம் வயதில் இறைவன் திருவடி நிழலை எய்தினார். உலக அறிஞர்கள் பலரும் இவரது பிரிவாற்றாது வருந்தினர்.

## அருஞ்சொற்பொருள்

கண்காணிப்பு-மேற்பார்வை. சாரல்-மலைப் பக்கம் பேணி-பாதுகாத்து. ஓவியம்-படம் எழுதும் கலை. இசை-சங்கீதம். பண்பாடு-சீர்பட்ட உள்ள நிலை. மனச்சார்பு-மனம் பற்றுதல். புதினங்கள்-புதுமுறைக் கதைகள். கையறு நிலை-செயலற்று நிற்கும் நிலை.

## வினாக்கள்

1. நம் நாட்டு மக்களின் நாட்டுப் பற்றை வளர்த்த பெரும்புலவர்கள் யாவர்?
2. இரவீந்திரரின் கவிதை உணர்ச்சி எதனால்வளர்ந்தது?
3. ஸந்தியா கீதம், கீதாஞ்சலி என்ற நூல்களைப்பற்றிக் குறிப்பெழுதுக.
4. சாந்தி நிகேதனத்தைப் பற்றி நீ அறிந்தவற்றை வரைக.
5. விசுவ பாரதி—சிறு குறிப்பெழுதுக.
6. சாந்தி நிகேதனத்தை அமைத்த தாகூரின் நோக்கங்கள் யாவை?
7. தாகூரின் தாய்மொழிப் பற்றை விளக்குக.
8. தாகூர் எழுதிய நூல்கள் சிலவற்றை எழுதுக.

9. தாகூரை நாட்டுப்பற்று மிகுந்த ஒரு பெரும் புலவர் என எதனுல் கூறலாம் ?

### பயிற்சி

(1) பொருள் கூறுக :—
ஓவியம். இசை, பேணி, பண்பாடு, சாரல்.

(2) தொடர்களில் அமைத்து எழுதுக —
கண்காணிப்பு, பேணினுர், ஓவியம், இசை. பண்பாடு.

(3) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக –
பண்டை + காலம். மனம் + சார்பு. பிரிவு + ஆற்ருது. நாடு + பற்று.

(4) உன் சூழ்நிலையிலுள்ள பத்துப் பொருள்களின் பெயர்களை எழுதி, அவை இடுகுறிப் பெயரா, காரணப் பெயரா என்பதையும் குறிப்பிடுக.

(5) அவன், இவன், அவள், இவள், அது, இது—இந்தச் சுட்டுப் பெயர்களைப் பயன்படுத்தித் தொடர்கள் அமை.

(6) எவன், எவள், எது, யாவன், யாது—இந்த வினுப் பெயர்களைத் தொடர்களில் அமை.

---

## 5. சண்டையை மறந்த சிறுமியர்

அந்த ஆண்டு பொங்கல் விழாவின் பொழுது நல்ல மழை பொழிந்துவிட்டது. சிறுவயல் என்னும் சிற்றூரைச் சுற்றிப் பல ஓடைகளிலும் கால்வாய்களிலும் நீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. பள்ளமான இடங்களிலெல்லாம் நீர் தேங்கிச் சிறுசிறு குட்டைகளாகிவிட்டன. சிற்றூர்ச் சிருர் ஆங்காங்கு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு குட்டையினருகே இரண்டு சிறுமியர் விளையாட வந்தார்கள். இருவரும் புத்தாடைகளை அணிந்

திருந்தனர். மாலதி நீலப் பாவாடையும் சட்டையும் உடுத்தியிருந்தாள். வள்ளி அழகிய சீட்டித் துணியில் தைத்த நீண்ட அங்கி அணிந்திருந்தாள். இருவரும் ஒரு குட்டையருகில் வந்தார்கள். தத்தம் புது உடுப்புக்களைக் காட்டிக் கொண்டார்கள்.

மாலதிக்கு எட்டு வயதிருக்கும். வள்ளி இரண்டு வயது இளையவள். பொங்கல் விழாவின் பொழுது தத்தம் வீடுகளில் வாங்கிய ஆடைகள், செய்யப்பட்ட தின்பண்டங்கள் முதலியவற்றைக் குறித்துப் பெருமை பேசியபிறகு, இருவரும் குட்டை நீரில் இறங்கி விளையாடத் தொடங்கினர்கள். முதலில் மாலதி பாவாடையைச் சிறிது உயர்த்திக்கொண்டு கணுக்காலளவு ஆழத்துக்குச் சென்ருள்; வள்ளி அவளைப் பின்பற்றினுள்.

வள்ளி, "மாலதி, எனக்கு அச்சமாயிருக்கிறது. ஆழமாயிருக்கும் போலிருக்கிறதே," என்ருள்.

மாலதி, "போடீ, போ! என்ன அச்சம்? மழை நீர் கொஞ்சம் தேங்கி யிருக்கிறது. நடுவில்கூட முழங்கால் ஆழமிராது. நான் அக்கரைக்குப் போகிறேன் பார்க்கிருயா? என் பின்ளுலேயே, வா," என்று கூறினுள்.

வள்ளி கால்களைத் தூக்கித் தூக்கி வைத்து நீரை நாலா பக்கங்களிலும் தெறிக்கச் செய்தாள்.

மாலதி, "வள்ளி, இப்படி நீரை வாரி இறைக்காதே. என் பாவாடை மேல் விழப்போகிறது," என்ருள்.

அந்நேரத்தில் வள்ளி ஒரு காலைத் தூக்கித் 'துடும்' என நீரில் வைத்தாள். திடீரென்று கிளம்

பிய வண்டல் நீர் மாலதியின் நீலப் பாவாடையிலும் சட்டையிலும் தாரையாக விழுந்து அவற்றை நனைத்து விட்டது. மாலதி கடுஞ்சினங்கொண்டு, வள்ளியைத் திட்டிக்கொண்டே அடிக்கவந்தாள். வள்ளி அஞ்சித் தன் வீட்டை நோக்கி ஓடினுள்.

மாலதியின் தாய் அப்பொழுதுதான் குடிசையி லிருந்து வெளியே வந்து தன் பெண்ணின் அலங் கோலத்தைக் கண்டாள். புதுப் பாவாடை அழுக்கு நீரால் நனைந்திருப்பதைப் பார்த்ததும் சினமுற்ற அவள், "ஏனடி, பாவாடையை அழுக்காக்கிவிட்டாய்?" என்று கேட்டாள்.

மாலதி, "நானில்லையம்மா. வள்ளி வேண்டு மென்றே இப்படிச் செய்து விட்டாள்," என்று அழுதாள்.

மாலதியின் தாய் ஆத்திரமடைந்து வள்ளியின் பின்னே ஓடி அவளைப் பிடித்து இரண்டடி வைத்தாள். அச்சிறுமியின் கூக்குரல் ஊர் முழுவதும் கேட்டது. ஆங்காங்குக் குடிசைகளிலிருந்து பலர் வெளியே வந்தார்கள்.

வள்ளியின் தாய் தன் மகளை அடித்தவளிடம் சென்று, "என் மகளை அடிக்க உனக்கென்ன உரிமை இருக்கிறது? அதுவும் இப்படியா முதுகு சிவக்க அடிக்கிறது? உன் கையை முறித்தால் என்ன?" என்று கேட்டாள்.

மாலதியின் தாய் எதிராகக் கூச்சலிட்டாள். இரண்டு தாய்மாரும் ஒருவரை யொருவர் மனமாரத் திட்டிக்கொண்டனர். இந்த வேடிக்கையைப் பார்க்க

ஊர் திரண்டுவிட்டது. சிறிது நேரத்தில் மாலதியின் தாய் சார்பில் சிலரும் வள்ளியின் தாய் பக்கம் சிலரும் கட்சி சேர்ந்து கூச்சலிட்டனர். ஒருவர் பேசுவதை மற்ருெருவர் கேட்காமல் எல்லோரும் ஒரே நேரத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். பெரியவர்களுக்குள் வாய்ச் சண்டை முற்றியதும் அடிதடியும் தொடங்கி விட்டது.

இவ்வேளையில், அந்தச் சிற்றூரிலேயே யாண்டு முதிர்ந்த பாட்டி யொருத்தி, கோலூன்றிக்கொண்டு அங்கு வந்தாள். அவள், "நன்ருயிருக்கிறது உங்கள் சண்டை! அதுவும் பொங்கலன்று சண்டை போட நாள் பார்த்தீர்களா?" என்று சொல்லி, சண்டை போடுகிறவர்களை அமைதிப் படுத்த முயன்ருள். ஆனல் சச்சரவு நிற்கவில்லை. பாட்டி சொல்லைக் கேளாமல் அவர்கள் கூச்சலிட்டவண்ண மிருந்தார்கள்.

மாலதியையும் வள்ளியையும் இப்பொழுது யாரும் கவனிக்கவில்லை. அச் சிறுமிகள் மறுபடியும் அந்தக் குட்டைக்குச் சென்றுவிட்டார்கள். மாலதி கூர்மை யான ஒரு கல்லை எடுத்து, ஒரு சிறு வாய்க்கால் தோண்டினள்; குட்டைநீர் வாய்க்காலில் ஓடும்படி வள்ளி நீரை இறைத்துவிட்டாள். சிறுமியர் தம் சண்டையை மறந்து, வாய்க்காலில் நீர் ஓடுவதைப் பார்த்து மகிழ்ந்தனர். வாய்க்காலைச் சிறிது சிறிதாக நீட்டிக்கொண்டு பெரியவர்கள் சண்டையிடும் இடத் திற்கே வந்து விட்டார்கள்.

"வள்ளி, அந்தக் குச்சி தண்ணீரில் எப்படி ஓடு கிறது பார்! அதைப் பிடி," என்று கூறிக் குதித்தாள்

மாலதி. வள்ளி சிரித்துக்கொண்டே நீரோட்டத்தில் மிதந்து சென்ற குச்சியைப் பிடிக்க ஓடினுள்.

பாட்டி இச்சிறுமிகளைப் பார்த்ததும் மற்ருெரு முறை ஒற்றுமை முயற்சியில் இறங்கினுள். "உங்களுக்கு இப்படிச் சண்டை போடுவது வெட்கமாக இல்லையா? இதோ பாருங்கள். இந்தச் சிறுமிகளுக்காக நீங்கள் ஒருவரையொருவர் திட்டி அடித்துக் கொள்கிறீர்கள். இவர்களோ தங்களது சண்டையை அப்பொழுதே மறந்துவிட்டு மகிழ்ச்சியோடு விளையாடுகிருர்கள்," என்று சுட்டிக் காட்டினுள் அம்மூதாட்டி.

சண்டையில் ஈடுபட்டிருந்தவர்கள் சிறிது ஓய்ந்து, அச் சிறுமிகளைப் பார்த்தார்கள். தமது சச்சரவு பயனற்றது என்பதை யறிந்தவுடன், அவர்கள் நாணமடைந்தனர்; தங்களுடைய மடமைக்காக நகைத்துக் கொண்டே தத்தம் வீட்டை நோக்கி நடந்தனர்.

## அருஞ்சொற்பொருள்

கரை புரண்டு – கரைமீது வழிந்து. சிருர் – சிறுவர்கள். புத்தாடை - புதிய ஆடை. அங்கி – சட்டை. உடுப்பு – உடை. கடுஞ்சினம் - மிகுந்த கோபம். அலங்கோலம் – சீர்கேடு; தாறுமாறு. சார்பு - பக்கம். மூதாட்டி – முதியவள்.

## விஞக்கள்

1. மழை பொழிந்தபின் சிறுவயல் எவ்வாறு காட்சியளித்தது?

2. மாலதியும் வள்ளியும் விழாவைப் பற்றி என்ன பேசிக்கொண்டார்கள்?

3. மாலதியின் உடை எவ்வாறு அழுக்காயிற்று?

4. பெரியோரின் சண்டை எவ்வாறு தொடங்கி முற்றியது?

5. சிறுமியர் தம் சண்டையை மறந்தபின் யாது செய்தனர்?

6. சண்டையிட்ட பெரியோர்களுக்கு மூதாட்டி எவ்வாறு அறிவூட்டினுள்?

### பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—
கரை புரண்டு, சிருர், அலங்கோலம், சார்பு, மூதாட்டி.

(2) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக:—
நீலம்+சட்டை. எனக்கு+அச்சம். கால்களை+தூக்கி. புதுமை+பெண்.

(3) சொற்களைப் பிரித்தெழுதுக:—
பயனற்றது, நாணமடைந்தனர், யாண்டிருக்கும், கணுக்காலளவு, நீரோட்டம்.

(4) அறுவகைப் பெயர்கள் யாவை? வகைக்கு இரண்டிரண்டு எழுதுக.

(5) பின் வருவன என்ன வகைப் பெயர்?
மரம், மலை, கிளை, வால், உலகம், சிற்றூர், வாரம், தீமை, ஓட்டம்.

---

## 6. காவிரி

வானில் ஒளிர்வதாய்க் குற்றமற்றதாய் வெள்ளியென்னும் விண்மீன் விளங்கும். அவ்விண்மீன் வடதிசையில் தோன்றும். அதனுல் இயற்கை நிகழ்ச்சிகள் யாவும் இன்பம் பயப்பனவாய் இருக்கும். மழை நன்கு பொழியும். ஆறுகள் நீர் நிரம்பிக் கவினுடன் காட்சியளிக்கும். அவ்விண்மீன் வடபால் தோன்ருமல் தென்திசைக்கண் தோன்றின் மழையும் பெய்யாது. பசும் புல்லும் தளிர்க்காது. உழவர்களும் ஏரினுல் உழுது

விளைப்பயன் காணமுடியாது. வானில் பாடித்திரியும் வானம்பாடி யென்னும் பறவைக்கும் நீர்த்துளிகளாகிய உணவும் கிடைக்காது. இத்தகைய கொடிய நிலையில் வையகம் வாடும் பொழுதும் காவிரி யாற்றில் நீர் குறைந்து வாடும் நிலைமை ஏற்படாது. சான்றோர் உள்ளம்போல் அது அழகும் வளமும் நிறைந்து காட்சி யளிக்கும்.

பூத்துக் குலுங்கும் மலர்களையும், படர்ந்து தவழும் கொடிகளையும், காய்த்துத் தொங்கும் காய்கனிகளையும் தனக்கு அணிகலனாகக் கொண்டு, காவிரியாறு ஆடிப் பாடித் தன் இருமருங்குகளிலும் சோலைகளை அமைக்கின்றது. கா என்பது சோலை யாகும். அத்தகைய காக்களை விரியச் செய்வதனால் அதனைக் காவிரி யென்றழைத்தனர்.

காவிரி யாறு குடகு நாட்டில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த சையமலையில் தோன்றுகிறது. இங்ஙனம் உருக்கொள்ளும் காவிரிக்குத் தலைக் காவிரி என்று பெயர். பற்பல குன்றுகளைக் கடந்து கனகா என்னும் துணையாற்றைப் பெறுகின்றது. அப்பொழுது ஆற்றின் உருவத்தைப் பெற்று மலைகளின் இடையே வளைந்து நெளிந்து பேரழகுடன் விளங்குகின்றது. இவ் யாறு குடகு நாடு கடந்து மைசூர் நாட்டின் மலைப் பகுதியில் குறுகிய பாறைகளுக் கிடையில் ஓடியபின் ஏமாவதி, இலட்சுமண தீர்த்தம் என்னும் சிற்றாறுகள் கலக்கப் பெரிதாகின்றது. இம் மூன்று ஆறுகளின் கூடலுக்கு மறுமுனையிலே கண்ணம்பாடி யென்னும் அணை கட்டப்பட்டுள்ளது. இவ் வணைக்கட்டை யடுத்துக் கிருஷ்ணராஜ சாகர நீர்த்

தேக்கம் அமைந்துள்ளது. இந் நீர்த் தேக்கத்தால் மைசூர் மாநிலம் பெறும் பயன்கள் அளவிடற்கரியன.

கண்ணம்பாடிக்கப்பால் சில சிற்ருறுகள் கலந்து நீர்ப்பெருக்குடன் விரைந்து பாய்கின்றது. உயர்ந்த நிலப் பகுதி காவிரியைத் தடுக்கவும் இரு பிரிவுகளாகப் பிரிந்து, அப் பிரிவுகள் அருவிகளாகக் கீழ் நோக்கி விழுகின்றன. இங்கு விழும் அருவிகளின் தொகுப்பினையே சிவசமுத்திர அருவி என்பர். இவ்வருவிகளின் நீர்ப்படலம் கண்கவரும் எழிலுடன் விழிகட்கு நல் விருந்தாகும்.

இவ்வாறு அருவியாகப் பாயும் காவிரி குறுகிய மலை இடுக்குகளிலே நுழைந்து எருமை நாட்டினை விடுத்துக் கொங்கு நாடாகிய சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களின் எல்லையாக வளைந்து வளைந்து பாய்ந்து சின்ளுறும் தோப்பூர் ஆறுகளும் தன்னுடன் சேரப் பெருமிதத்துடன் வருகிறது. இங்குத்தான் மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. அணையைக் கடந்தவுடன் இவ் யாற்றில் பவானி, நொய்யல், திருமணிமுத்தாறு முதலிய ஊட்டாறுகள் சேர்கின்றன. இதன் பின்னர்க் காவிரி பெரிய ஆருய்ச் சோழ நாட்டில் நுழைகின்றது. எனவே அகண்ட காவிரியெனப் பெயர் பெறுகின்றது. கொள்ளிடம் என்ற கிளையாறு உருவாகியதால் ஆற்றிடைக் குறையில் திருவரங்கம், திருவானைக்கா என்னும் பாடல் பெற்ற ஊர்கள் அமைந்துள்ளன. காவிரியும் கொள்ளிடமும் இணையும் இடத்தில் கல்லணை யென்னும் பெயரையுடைய அணை எழுப்பப்பட்டுள்ளது. இவ் யாறு இதற்கப்பால் பல சிறு ஆறுகளாகத் தஞ்சை மாவட்டத்தில் பாய்கின்றது.

அம் மாவட்டத்தை வளங்கெழுமிய எழில் நிலமாய் ஆக்குகின்றது. தஞ்சை, தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்று கூறும் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளது. வற்ருத நீர் வளத்தால் காவிரி சோழ நாட்டைச் செவிலித் தாய்போல் வளர்த்து வருகின்றது.

காவிரி, கடலில் கலக்கும் இடத்தில் தன் பெயர் அமைந்த பெரும் நகரையே உருவாக்கியிருந்தது. அதுவே காவிரிப்பூம் பட்டினம். இன்று அது ஒரு சிற்றூராகக் காட்சி அளிக்கின்றது. கரிகாலன் காவிரிக்குக் கரைகட்டி அது கடலொடு கலக்கும் இடத்தில் பட்டினமும் அமைத்தான். அப் புகார் கலம் பல கூடும் கடற்கரை நகராகவும், எழில் மனை அமைந்த தலை நகராகவும் திகழ்ந்தது. அக்காலத்தேதான் பூம்புகார் நகரையும், பொன் துகழ் தாங்கி வரும் காவிரி யாற்றையும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒருமித்துப் புகழ்ந்தன.

“காவிரியில் புதுவெள்ளம் பொங்கி வருகின்றது. உழவர்கள் மகிழ்வுடன் வயல் வேலைகளில் ஈடுபடுகின்றனர். நீர் இன்னிசையை எழுப்புகின்றது. சில இடங்களில் பெருமுழக்கம் இடுகின்றது. ஆடவரும் பெண்டிரும் புதுப்புனல் ஆடுகின்றனர். இவ்வாறு எங்கும் இன்ப ஓசை எழும்ப, காவிரித் தாய் நடக்கின்ருள்,” என்று இளங்கோவடிகள் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

“எங்கு நோக்கினும் பசுமையான மரகதக் கம்பளம் விரித்தாற்போல் வயல் வெளிகளும், அழகிய விளக்கம் ஏந்திய தாமரை மலர்களும், வானுற

நிமிர்ந்து வெண்மதி தீண்டும் உயர் மரங்களும் உடையது சோழநாடு. இச் சோணாட்டின் வளப்பம் நல்கும் குலக்கொடியே காவிரி,'' என்று மணிமேகலை ஆசிரியர் விளக்கம் தந்துள்ளார்.

காவிரியாறு வேளாண்மைக்கு நீர்வளம் நல்கி, தொழில் வளத்துக்கு மின்னாற்றல் தந்து, இயற்கை எழிலுக்கு நல்வண்ணம் ஈந்து, தமிழர் தம் நாகரிகச் சிறப்புக்குப் பேராக்கம் ஊட்டி, 'வான்பொய்ப்பினும் தான் பொய்யா' வண்மையுடன் இசை யெழுப்பு கின்றது.

## அருஞ்சொற்பொருள்

கவினுடன் - அழகுடன். வையகம் - உலகம்; உலகத்து உயிர்கள். மருங்கு - பக்கம். கூடல்—சந்திப்பு எழில் – அழகு. பெருமிதம்-பெருமை. அகண்ட-அகலமான. வளங்கெழுமிய-வளம்மிகுந்த. கலம் பல கூடும்-பல கப்பல்கள் வந்துசேரும். ஒருமித்து - ஒன்று சேர்ந்து. புதுப்புனல் - புதுவெள்ளநீர். நல்கி-கொடுத்து. மின்னாற்றல்-மின்சார சக்தி. வண்மை-கொடைப் பண்பு. இசை எழுப்புகின்றது-புகழ்பெற்றுள்ளது.

## வினாக்கள்

1. வெள்ளி யென்னும் விண்மீன் வடபால் விளங்காவிடின் உலகம் எத்தகைய நிலையை அடையும்? அப்பொழுது காவிரி எப்படிக் காட்சி யளிக்கும்?

2. காவிரி யென்றழைக்கப்பட்டது ஏன்?

3. எருமை நாட்டில் காவிரியின் போக்கினை எழுதுக.

4. சோழநாட்டின் செவிலித் தாய் காவிரி என்பது எவ்வாறு பொருந்தும்?

5. சிலப்பதிகார ஆசிரியர், காவிரியில் புதுப்புனல் வரும் காட்சியினை எவ்வாறு விவரித்துள்ளார்?

6. மணிமேகலை ஆசிரியர் காவிரியைப் பற்றிக் கூறுவதென்ன?

### பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—
மருங்கு; ஒருமித்து; நல்கு; வண்மை; எழில்; பெருமிதம்.

(2) சொற்களைச் சேர்த்தெழுதுக:—
வெண்மை + மதி. தெற்கு + திசை. துணை + ஆறு. அணை + கட்டு. காடு + ஆறு.

(3) உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள்—இவற்றில் வகைக்கு ஐந்தைந்து எழுதுக.

(4) பின்வரும் பெயர்களின் திணைகளை எழுதுக:—
உழவர், காவிரி, ஆடவர், பெண்டிர், கம்பளம், சோழ நாடு, பவானியாறு, பவானிதேவி.

---

## 7. தென்னாட்டுக் காந்தியார்

(வித்துவான் அம்பை. இரா. சங்கரனார்,
தலைமைத் தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி
உயர்பள்ளி, சென்னை-1)

நம் நாட்டுக்கு உரிமை வாங்கித் தந்தவர்களுள் முதலிடத்தில் வைக்கத் தக்கவர் காந்தியாரே யாவார். அவர் வாழ்க்கைத் தூய்மை, சிறந்த பழக்க வழக்கங்கள், ஏழைகளுக்கு இரங்கும்நிலை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, பேச்சாற்றல், எழுத்தாற்றல், எளிமை வாழ்வு, அஞ்சாநெஞ்சம் முதலியவைகளில் சிறந்து விளங்கினார். இப்பண்புகளை அப்படியே தம்பாற் கொண்டு தமிழ் நாட்டில் வாழ்ந்த பெரியாரே நம் திரு. வி. கலியாண சுந்தரனார் ஆவர். இவர் தோற்றமும் காந்தியாரை ஒத்தேயிருந்தது. அதனாலேயே அறிஞர்கள் இவரைத் 'தென்னாட்டுக் காந்தியார்' என்று அழைத்தார்கள். இனி இத் தென்னாட்டுக் காந்தியாரின் வாழ்க்கைச் சிறப்பை நோக்குவோமாக.

நம் திரு. வி. க. அவர்கள் முன்னோர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாரூரில் வாழ்ந்து வந்தனர். ஆனால் பிற்காலத்தவர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த துள்ளம் என்ற ஊரில் தங்கி வாணிகம்



நடத்தினர். இவ்வூரில் இவர் 26-8-1883இல் தந்தையார் விருத்தாசல முதலியார்க்கும் அன்னையார் சின்னம்மாளுக்கும் மகனாகத் தோன்றினார். இவருக்கு இரண்டு ஆண்டுகட்கு மூத்தவராய் திரு. வி. உலகநாத முதலியார் என்ற ஒரு சிறந்த தமையனாரையும் இவர் பெற்றிருந்தார். இவர் பெற்றோர், பிள்ளைகளின் படிப்பு நலங் கருதி 1890 முதல் சென்னை இராயப்

பேட்டையையே தங்கள் வாழ்விடமாகக் கொண்டனர். இராயப்பேட்டையிலேயே திரு. வி. க. அவர்கள் நன் முறையில் படித்தார்கள். அப்பொழுது யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளையவர்கள் திரு. வி. க. படித்த வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராயிருந்தார். அவருடைய தொடர்பு ஏற்பட்டுத் தமிழ் இலக்கியங்கள், சைவ நூல்கள் பல கற்று திரு. வி. க. புலமை மிக்கவரானுர். மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடமும் சில்லாண்டுகள் கற்ருர்.

இவர் இளமையில் பேசுவதற்குப் பயிற்சிக்கூடமாயிருந்த இளைஞர் கல்விக் கழகமே 1903இல் பாலசுப்பிரமணிய சபையெனக் கதிரைவேல் பிள்ளையவர்களால் நிறுவப்பெற்றது. இவர் குடும்ப நலன் கருதிச் சில அலுவலகங்களில் எழுத்தாளராய் இருந்தார். ஆனுல் அது அவர் மனதுக்குப் பிடித்தமாயில்லை. பின்னரே தமிழாசிரியத் தொண்டு புரிந்தார்.

இவருக்கு 1912இல் கமலாம்பாள் என்ற அம்மையாரைத் திருமணம் செய்வித்தனர். ஓர் ஆண்மகவும் ஒரு பெண்மகவும் பிறந்தனர்; எனினும் அக்குழந்தைகள் இறந்துவிட்டன. இவர் மனைவியும் ஆறு ஆண்டுகளே வாழ்ந்தார். பின் திரு. வி. க. அவர்கள் மறுமணம் புரிய விரும்பாது தூய்மையான வாழ்க்கை நெறியை மேற்கொண்டு தம் தமையனுர் மேற்பார்வையிலேயே வாழ்ந்து வந்தார்.

அன்னிபெசந்து அம்மையார் கூட்டுறவால் இவர் பொதுநலத் தொண்டினை மேற்கொண்டார். தமிழாசிரியப் பணியை விட்டு 'தேசபக்தன்' இதழாசிரிய

ராய்த் திகழ்ந்தார். தமிழ் நாட்டுக் காங்கிரசுத் தலைவ ராய் 1925இல் தலைமைப் பொறுப்பேற்ருர். பின்பு 'நவசக்தி' என்ற இதழாசிரியப் பொறுப்பை யேற்று அதன் வாயிலாகத் தூய தமிழ் நடையில் தமிழ் மக்களை அவ்வக் காலத்து விழிப்பூட்டிய முறை மிகவும் போற்றத்தக்கது. அவர் பேச்சுக்களும் எல்லாச் சமயத்தவரையும் எல்லாப் பிரிவினரையும் அணைத்துச் செல்லும் தன்மையன. 'மனித வாழ்க்கையும் காந்தி யடிகளும்' 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க் கைத் துணை', 'முருகன் அல்லது அழகு', 'உள்ளொளி' முதலிய நூல்கள் மிகச் சிறந்தன. இவர் அவ்வக் காலத்துப் பேசிய பேச்சுக்களும் 'தமிழ்ச் சோலை', 'தமிழ்த் தென்றல்', 'இளமை விருந்து' முதலியன நூல்கள் வடிவிலிருந்து மக்களுக்குக் களிப்பூட்டி வருகின்றன. எளிமையும் இனிமையும் கருத்துச் செறிவும் சீர்திருத்தமும் அமைந்த பாடல்கள் இயற்றுவதிலும் இவர் வல்லவர். 'அருகன் அருகே', 'படுக்கைப் பிதற்றல்', 'முதுமை உளறல்', 'சித்தந் திருந்தல்' முதலிய நூல்கள் அவர் கடைசிக் காலத்தில் இயற்றிய பழுத்த பட்டறிவு நூல்களாம்.

இவர் சிறந்த சீர்திருத்தக் கொள்கையினர். ஏழைத் தொழிலாளர்களின் தலைவராய்த் திகழ்ந்து தனக்கென வாழாது பிறர் நலம் பேணியே வாழ்ந்தார். பெண் ணின் பெருமை குறித்து மிகவும் வற்புறுத்தும் பான் மையுடையவர். எம்மதமும் சம்மதம் என்ற நோக்கு உடையவர். அருள் திரு. ஞானியார் சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் தொடர்புகளை மிகப்பெற்றவர்.

இவருக்கு 1943இல் மணிவிழா நிகழ்ந்தது. தமிழக மூலை முடுக்குகளிலும் இவ்விழாவைக் கொண்டாடா தாரிலர்.

இவர் இரவு முழுவதும் விழித்து எழுதும் பணியை மேற்கொண்டதால் கடைசிக் காலத்தில் கண்ணொளியை யிழந்து வருந்தும் நிலையினை யடைந்தார். இருப்பினும் அக்காலத்துத்தான் சில அருள் நூல்கள் எழுதத் துவங்கினர். கடைசியாக 26-8-53இல் தமது எழுபதாவது ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். இவர் எல்லா நல்லியல்புகளையும் தமக்கெனக் கொண்டு விளங்கிய பெரியார் ஆவர். இத்தகைய பெரியாரைப் போன்றவர்கள் இவ்வுலகத்தில் அடிக்கடி தோன்றுவது அருமை. இத்தென்னாட்டுக் காந்தியாரின் புகழை, தொண்டினை அறிந்ததோடு அமையாது அவர் சென்ற வழிகளில் நாமும் சென்று நம் வாழ்வைச் சிறக்கச் செய்வோமாக.

## அருஞ்சொற்பொருள்

பேச்சாற்றல் – பேசும் திறமை. எழுத்தாற்றல் – எழுதும் திறமை. அலுவலகம் – காரியாலயம். பிடித்தம் – விருப்பம். தூய்மையான – குற்றமற்ற. பணி – வேலை; ஊழியம். விழிப்பூட்டிய (விழிப்பு+ஊட்டிய)–உறக்கத்தினின்றும் எழச்செய்த. களிப்பூட்டி (களிப்பு+ஊட்டி) – மகிழ்ச்சி தந்து. பேணி – காப்பாற்றி. வற்புறுத்தும் – வன்மையாகச் சொல்லும். சம்மதம் – உடன்பாடு. பான்மை – மனஇயல்பு; தன்மை. மணிவிழா – அறுபதாண்டு நிறைவு விழா; வைர விழா. கண்ணொளி – கண்பார்வை.

## வினாக்கள்

1. திரு. வி கலியாண சுந்தரனாரைத் தென்னாட்டுக் காந்தியார் என்று அறிஞர்கள் ஏன் அழைத்தனர்?

2. திரு. வி. க. வின் முன்னேரைப் பற்றியும் அவர் பிறந்த ஊர், பிறந்த ஆண்டு பற்றியும் ஒரு பத்தி எழுதுக.

3. திரு. வி. க. தமிழ்க் கல்வியில் சிறந்திருந்தமைக்குக் காரணமென்ன?

4. இவர் தமிழாசிரியப் பணியைவிட்டு, பொதுநலத் தொண்டினை மேற்கொண்டதற்குக் காரணமென்ன?

5. திரு. வி. க. இயற்றிய நூல்களில் சில கூறி, அவற்றின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

6. திரு. வி. க. வின் பேச்சுத் திறன் எத்தகையது?

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—

அலுவலகம், பிடித்தம், தூய்மையான, வற்புறுத்து, பான்மை, களிப்பூட்டு.

(2) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக:—

பேச்சாற்றல், எழுத்தாற்றல், அலுவலகம், களிப்பூட்டி, முதலிடம், தென்னடு.

(3) பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்தெழுதி, அவை என்ன திணை, பால், எண் என்ற விவரங்களையும் ஓர் அட்டவணையில் குறிப்பிடுக:—

(i) கலியாண சுந்தரனர் ஏழைகளுக்கு உதவினர்.

(ii) கோவலனும் கண்ணகியும் மதுரையை அடைந்தனர்.

(iii) பருவ மழை பொழியாவிடில் நாட்டில் பஞ்சம் ஏற்படும்; மக்கள் பசியினல் வாடுவர்.

| பெயர்ச் சொல் | திணை | பால் | எண் |
|---|---|---|---|
| 1. கலியாண சுந்தரனர் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை |
| 2. ......... ......... ......... | | | |

## 8. இறவாத புலமை

இடத்தானும் காலத்தானும் மாறுபட்ட மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தத்தம் அறிவினுடைய வளர்ச்சியினுல் புலமை பெறுகின்றனர். அப்புலமையின் தோற்றம் எத்துணையோ பெயர்களை அடைகின்றது. புலமை படைக்கும் படைப்பு அழியாநிலை பெறுகின்றது.

புலமை உருவடையும் நிலையில் கணிதமாய், கவியாய், காவியமாய், ஓவியமாய், சிற்பமாய், இசையாய், கூத்தாய் எத்துணையோ பெயர்களை அடைகின்றது. இவைகளே கலைகள். இவைகளையெல்லாம் தொகுத்து எண், எழுத்து என்ற இரண்டு பகுதியில் ஆன்ருேர் அடக்கிக் காட்டினர். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது ஒரு பாடல். கணிதம், பொருளியல், அறிவியல் எல்லாம் எண்ணிலும், காவியம், ஓவியம், இசை எல்லாம் எழுத்திலும் அடக்கிக் கூறுவர். ஆகவே எண், எழுத்து இரண்டும் உலகிற்கு இரு கண்கள் என்பர். வள்ளுவரே "எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்ற கருத்தால் எண்ணும் எழுத்தும் வாழும் உயிர்க்குக் கண்ணென்றும் இவை இரண்டும் பெரு உயிர்கள் ஒளியின்றி இருளில் தடுமாறி மடியும் என்றும் விளக்கினர்.

எனவே, தொன்று தொட்டு உயிர்களின் கண்களாக அமைந்த கலைகளைத்தான் பள்ளிகளில் பாடங்களாக அமைக்கின்ருர்கள். நூலகங்களில் தொகுத்து வைக்கின்ருர்கள். கண்காட்சிச் சாலைகளில் கருவூலங்

களாக நிறுவப்படுகின்றன. கலைமகள் விழாவாகவும் கொண்டாடப் படுகின்றது. இவைகள் நமது உயிர் களுக்குக் காலக் கண்ணுடிகள். நொடியில் செல்லத் தக்க ஊர்திகள்.

மாணவர்கள் கலைக்கோயில்களில் படிப்பதென்ற பெயரால் உயிர்களுக்குக் கண்களை அமைத்துக் கொள் கின்றனர். நூலகங்கட்குச் சென்று சுவடிகளைத் திறந்து மக்கள் காண்பதென்ன? கலைக் கூடங்களில் சென்று அங்கு நிறுவப்பட்டுள்ள ஓவியங்கள் மூலம் அறிவதென்ன? முன்பு வாழ்ந்து மறைந்த மக்களைக் காண்கின்ருேம். அவர்களின் புலமையை, அவர்களின் எண்ணங்களை, அவர்களின் வாழ்வைக் காண்கின் ருேம். உயிர்கள் பெற்றவரே இவற்றையெல்லாம் காணமுடியும்; உணரமுடியும். பெருதவர் ஒன்றும் பெருதவரே ஆவரன்ருே?

மாணவர்களாயினும், புலவர்களாயினும் கணிதம், காவியம், ஓவியம் இவற்றைக் காணும்போது மூதாதை யாரின் எண்ணங்களை, சுவடுகளை, புலமையுருவங்களை, அவர்கள் செய்த ஒலிப்பதிவுகளைக் காண்கின்ருேம். அவர்களுடன் அளவளாவுகின்ருேம். இருந்த இடத் திலேயே மலைகளையும், கடல்களையும் காண்கின்ருேம். விண்பூக்களும், மணங்களும், நிறங்களும் கூட நாம் உணர முடிகின்றது. இவ்வளவு சிறந்த முறையில் செய்த ஒலிப்பதிவு நமது ஐம்புல உணர்ச்சிக்கும் அமு தளிக்கின்றது. அதுமட்டுமா?

அவர்கள் எந்த நூற்ருண்டில் வாழ்ந்தவர்களானு லும் இந்த நூற்ருண்டுக்கு அவர்களைக் கொண்டுவரு

கிறேம். அவர்களை நம்முடன் இணைத்துப் பேசுகின் றேம். அவர்கள் ஒவ்வொரு நூற்றுண்டிலும் உலாவி மக்களுடன் வந்து உறவாடிக்கொண்டுதான் உள்ள னர். அவர்களுக்கு இறப்பில்லை; அழிவில்லை. அவர் களுக்குரிய மற்றொரு பேராற்றலால் அவர்காலத் துக்கு நம்மை அழைத்துச் செல்கின்றார்கள். அங்கி ருந்து நம்முடன் இங்குத் திரும்பி வருகிறார்கள். நம் மைப் பிரிந்து செல்லுகிறார்கள். மறுபடியும் அழைத் தால் ஓடிவந்து நிற்கிறார்கள். நமக்கும் அவர்கட்கும் ஒரு நல்ல வழியை, அரிய தொடர்பினை ஏற்படுத்து கிறார்கள்.

இந்த உண்மையைக் கண்ட நாம் செய்யவேண் டுவதென்ன? நமது பின்னவர்க்கும் நம்முடன் இணைப்பு இருக்குமாறு ஒல்லும் வகையால் நமது புலமை கொண்டு கலை வகுத்தல் இன்றியமையாதது ஆகின்றதன்றே? ஆதலின் நாமும் கலையுணர்வோம்; கலைவகுப்போம்; இறவாநிலை யெய்துவோம்.

### அருஞ்சொற்பொருள்

தோற்றம் - உருவம். அழியா நிலை - என்றும் புகழ்பெற் றிருக்கும் நிலை. காவியம் - சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற நூல். ஓவியம் - சித்திரம். கருவூலம் - பொக்கிசம். காலக் கண்ணுடி - இறந்த காலத்தையும் காணத்தக்க கண்ணுடி. ஊர்தி - வாகனம். சுவடு - அடித்தடம். விண்பூ - மேலுலக மலர்; கற்பனை மலர். ஐம்புலன் — செவி, கண், நாக்கு, மூக்கு, மெய் என்ற உணர்ச்சி உறுப்புக்கள். கலைக்கோயில் - பள்ளிக் கூடம். ஒல்லும் வகையால் - இயன்ற வழியில். இறவாநிலை — என்றும் புகழ்பெற்றிருக்கும் நிலை.

### வினுக்கள்

1. புலமை எந்த உருவங்களைப் பெறுகிறது?

2. எண், எழுத்து இவ்விரண்டிலும் எந்த எந்தக் கலைகள் அடங்கும்?

3. எண், எழுத்து—இவை பற்றித் திருவள்ளுவரின் கருத்து யாது?

4. கலைக் கூடங்களிலும், புத்தகசாலைகளிலும் நாம் என்ன காண்கிறோம்?

5. புலமை மிக்க மூதாதையர்கள் எவ்வாறு இறவாத நிலை எய்தியுள்ளார்கள்?

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—

தோற்றம், கருவூலம், சுவடு, ஒல்லும் வகை.

(2) சொற்களைச் சேர்த்து எழுதுக:—

இ+இரண்டு. உயிர்+கண். ஒலி+பதிவு. இறப்பு+இல்லை. வேண்டுவது+என்ன?

(3) இப் பாடத்தில் குறிப்பிட்டுள்ள கலைகளின் பெயர்களை எல்லாம் தொகுத்து எழுதுக. உனக்குத் தெரிந்த பிற கலைகளையும் எழுதுக.

(4) பின்வரும் தொடர்களிலுள்ள பெயர்ச்சொற்களை ஒருமையைப் பன்மையாக மாற்றித் தொடர்களைத் திருத்தி அமை:

(i) மரம் வளர்ந்தது.

(ii) மாணவன் பள்ளிக்குச் செல்கிறான்.

(iii) வயலில் பயிர்கள் வளர்ந்திருக்கின்றன.

(iv) பூனை எலியைக் கௌவிச் சென்றது.

## 9. நாவாய் ஊர்ந்த நற்றமிழ் வல்லார்

நாம் யாவரும் இன்று தன்னுரிமை பெற்ற இந்தியக் குடிகளாக வாழ்கின்றோம். இவ் வாழ்வை நமக்கு அளிப்பதற்காகப் பாடுபட்ட பெரியார்கள் பலராவர். அவர்கள் யாவரும் பிறர் நலத்தின் பொருட்டுத் தன்னலத்தை விட்டுக் கொடுத்த பெருந்தகைமை உடையவராவர். இத்தகைய பண்புடையார் வரிசையிலே இடம் பெறுவதில் தமிழ்ப் பெருஞ்சான்றோர்களும் பின்னடையவில்லை. இவர்கள் இந்திய முன்னணித் தலைவராகும் வாய்ப்புக்களைப் பெறாது போயினர்; என்றாலும், இவர்களுடைய அருந்தொண்டுகள் குறைத்து மதிப்பிடற்குரியன அல்ல.

ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன் தென்றமிழ் நாட்டிலே ஓட்டப்பிடாரத்தின் அருகில் உள்ள எட்டயபுரம் என்னும் ஊரிலே வழக்கறிஞர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் உலகநாதர் என்பதாகும். அவருடைய இல்லறத்தை நல்லறமாக்கிய எழில் மங்கை பரமாயி அம்மையார். இவர்களுடைய இல்வாழ்க்கையின் நறுமலராக 1872ஆம் ஆண்டு செபுத்தெம்பர்த் திங்கள், 5ஆம் நாளன்று சிதம்பரம் என்னும் செல்வப்புதல்வர் தோன்றினார்.

தந்தையாகிய உலகநாதர், தம் தனயனுக்குச் செய்யவேண்டிய நன்றியைத் தவறாது செய்ய எண்ணினார். அதாவது அவரைச் சான்றோர் அவையில் முந்தியிருப்பதற்குத் தகுதியுடையவர் ஆக்க விரும்பினார். அதன்பொருட்டு அவரைத் தக்க பருவத்திலேயே பள்ளிக்கனுப்பி வைத்தார். சிதம்பரனார்

இளமையிலேயே கல்வியின்மீது கண்ணுங்கருத்துமாய் இருந்து வந்தார். தூத்துக்குடியில் உள்ள கால்டுவெல் கல்வி நிலையத்தில் பொதுக் கல்வி கற்ற பின்னர், சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். 'தந்தையறிவு மகனறிவு' என்ற பழமொழிக்கிணங்கச் சிதம்பரனார் சட்டத்துறையில் வழுவறக் கற்று, தாம் பிறந்த



ஊராகிய ஓட்டப்பிடாரத்திலேயே வழக்கறிஞரானார். சிதம்பரனார் பொய் வழக்குகளை ஏற்காமல், வாய்மையின் வழியிலேயே வாழ்க்கை நடத்தி வந்தார். எனினும், அவர் தம் தொழிலில் நுணுக்கமுடையவராகவே விளங்கினார். பலரும் அவரது கூர்த்த மதியைப் புகழ்ந்துரைத்தனர். யாவரும் தம் மகனைச் சான்றோன் எனப் புகழ்வதைக் கேட்ட அவரது தாய் பரமாயி அம்மையார் அவரைப் பெற்ற நாளிலும் பெரிதாக உவகைபூண்டார்.

வள்ளியம்மையார் என்னும் வளங்கெழு நங்கையைச் சிதம்பரனார் தம் வாழ்க்கைத் துணைவியாராக ஏற்றார். சிலவாண்டுகளிலேயே அவ்வம்மையார் இவ்வுலகை நீத்தார். பிறகு சிதம்பரனார், பெற்றோர்களின் வற்புறுத்தலுக்கிணங்கி, மீனாட்சியம்மையாரை மணம் செய்துகொண்டார்.

நம் நாட்டை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர் தமது நாட்டில் செய்யப்படும் பொருட்களை விற்பதற் குரிய சந்தையாகப் பயன்படுத்தினர். இந்நாட்டில் சிறு தொழிலும் பெருந்தொழிலும் வளராமல் தடுப்பதற் குப் பெரிதும் முயன்றனர். அந்நாட்களில் பால கங்காதர திலகர், பாபு பிபின் சந்திரபால், தேசபந்து சி. ஆர். தாஸ் முதலியோர் மாற்றாரின் ஆட்சியை எதிர்த்து முழக்கம் செய்தனர். அப்பொழுது வேற்று நாட்டுப் பொருளை இந்தியர் யாரும் வாங்கக்கூடாது என்னும் உள்நாட்டுப் பொருளியக்கம் உருவாகியது. நம் சிதம்பரனாரும் ஏறுபோல் வீறு பெற்று எழுந்து இவ்வியக்கத்தை வலியுறுத்திப் பல்வேறிடத்தும் சொற்பொழிவுகளாற்றினர்.

ஆங்கிலேயர்கள் கடல் வழியே கலன் செலுத்தி வாணிகத்தால் வளம்பெருக்கிக் கொண்டனர். இதன் பொருட்டுத் தம் ஆட்சியின்கீழ் உள்ள இந்தியா போன்ற நாடுகளின் முன்னேற்றத்தைத் தடைப்படுத் தவும் அவர்கள் பின்வாங்கவில்லை. எனவே பெரியார் சிதம்பரனார் இந்தியா முழுவதும் சுற்றிப் பெரும் பொருள் திரட்டி இரண்டு கப்பல்களை வாங்கி, ஆங்கிலக் கப்பல்களுக்குப் போட்டியாகக் கப்பல் ஓட்டினர். அவ்வாறு நாவாய் ஊர்ந்த நற்றமிழ் வல்லாளரைக் 'கப்பலோட்டிய தமிழன்' என்று யாவரும் போற் றினர். சிதம்பரனார் கப்பல் ஓட்டுவதை நிறுத்திவிட் டால் அவருக்கு இலட்ச ரூபாய் கையூட்டுத் தருவதாக ஆங்கிலேயர்கள் கூறினர். இத்தகைய இழிசெயலை ஏறுபோன்ற பீடு மிக்க சிதம்பரனார் ஏற்பாரோ? மறுத்துவிட்டார்.

எனவே, ஆத்திரங் கொண்ட ஆங்கில ஆட்சியினர் இவரை எவ்வாருவது தம்பாற்படுத்த வேண்டுமென்று சூழ்ந்தனர். 1908ஆம் ஆண்டு பிபின் சந்திர பாலரின் விடுதலையைக் கொண்டாடிய ஒரு கூட்டத்தில் சிதம்பரனர் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசினர் அதற்குத் தடை விதித்தனர். அஞ்சா நெஞ்சினராம் சிதம்பரனர் தடையை மீறினர். வாழ்நாள் முழுவதும் சிறையிலேயே கிடக்கவேண்டுமென வழக்கு மன்றம் தீர்ப்புக்கூறியது. அத்தீர்ப்பினை எதிர்த்து அவரது மனைவியார் உயர் நீதிமன்றத்தில் வழக்காடினர். அதன் பயனுக ஒறுப்பு ஆறு ஆண்டாகக் குறைக்கப்பட்டது. எனினும் கப்பல் தொழில் நின்றுவிட்டது. வழக்கறிஞர் தொழிலாற்றும் உரிமையும் பறிக்கப்பட்டது. சிதம்பரனர் சிறைக்கூடத்திலே செப்ப முடியாதவாறு துன்புறுத்தப்பட்டார். பருத்தியரைத்தார்; செக்கிழுத்தார்; இன்னும் எத்துணையோ கடுந்தொழில்களைச் செய்தார். 1912ஆம் ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டார். சிறையிலிருந்து வெளிவந்த அவரை மக்கள் வரவேற்கவும் அஞ்சினர்.

இத்தகைய நிலையிலே சிதம்பரனர் வறுமையில் வாடினர். நல்லெண்ணம் படைத்த இ. எச். வாலஸ் என்னும் நடுவர் சிதம்பரனருக்கு மீண்டும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளும் உரிமையை வாங்கித் தந்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சிதம்பரனரின் செந்தமிழ்ப் பற்று யாவரும் போற்றத்தக்கதாகும். அவர் ஜேம்ஸ் ஆலன் என்னும் பெரியார் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து, 'அகமே

புறம்', 'வலிமைக்கு மார்க்கம்', 'மனம்போல் வாழ்வு' என்ற நூல்களை வெளியிட்டார். 'மெய்யறிவு', 'மெய்யறம்' என்ற இரு ஒழுக்கநூலையும் எழுதி வெளியிட்டார். ஏட்டுச் சுவடிகளில் இருந்த தொல்காப்பிய இளம்பூரணர் உரையை அச்சேற்றி வெளியிட்டார்.

நாட்டுக்காகவும், தமிழுக்காகவும் இடையறாது தொண்டு செய்த நம் சிதம்பரனார் 1936ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18ஆம் நாள் தம் பொய்யுடம்பை நீத்துப் புகழுடம்பு எய்தினார். நம் இந்திய நாட்டின் தன்னுரிமையையும் தொழில் நலத்தையும் தமிழ் வளத்தையும் எண்ணும்போதெல்லாம் சிதம்பரனாரின் அரிய தொண்டுகள் நம் கண்முன் நிற்பனவாகும்.

## அருஞ்சொற்பொருள்

வழக்கறிஞர் – சட்டநிபுணர். முன்னணி - முதல் வரிசை. நன்றி – நன்மை; உதவி. வழுவற – குற்றமில்லாமல். உவகை – மகிழ்ச்சி. வற்புறுத்தல் – கட்டாயப்படுத்தல். ஏறு – வலிய காளை. வீறு – வீரம். கையூட்டு - இலஞ்சப் பொருள். பீடு – பெருமை. சூழ்ந்தனர் – சூழ்ச்சி செய்தனர். ஒறுப்பு – தண்டனை. செப்ப – சொல்ல. நடுவர் – நீதிபதி. பொய்யுடம்பு – இறந்து அழியக்கூடிய உடல்.

## வினாக்கள்

1. சிதம்பரனார் எத்தகைய குடியிலே தோன்றினார்?
2. சிதம்பரனாரின் தாயார் பேருவகை பூண்டது ஏன்?
3. உள்நாட்டுப் பொருள் இயக்கம் என்றால் என்ன? சிதம்பரனார் அதில் எவ்வாறு பங்குகொண்டார்?
4. சிதம்பரனார் கப்பலோட்டிய வரலாறு யாது?
5. ஆத்திரங்கொண்ட ஆங்கில ஆட்சியினரால் சிதம்பரனாருக்கு விளைந்தன யாவை?
6. சிதம்பரனாரின் தமிழ்த் தொண்டுகள் யாவை?

### பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—

முன்னணி, நன்றி, உவகை, வீறு, கையூட்டு, ஒறுப்பு.

(2) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக:—

வழக்கு + அறிஞர். சட்டம் + கல்லூரி. விற்பதற்கு + உரிய. பொருள் + இயக்கம்.

(3) பின்வரும் தொடர்களிலுள்ள பன்மைப் பெயர்ச் சொற்களை ஒருமையாக மாற்றி, தொடரைத் திருத்தி எழுதுக:—

(i) மாடுகள் மேய்ந்து பயிர்கள் அழிந்தன.

(ii) மாணவர்கள் நன்முயற்சி செய்யாவிட்டால் வெற்றி பெறமாட்டார்கள்.

(iii) பவளத் தீவுகள் அழகாகவிருக்கும்.

---

## 10. மார்க்கோ போலோ

தற்காலத்தில் நாம் பயன்படுத்தும் ஊர்திகளான இருப்புப் பாதை வண்டித் தொடர்களும், நீராவிக் கப்பல்களும், வானவூர்திகளும் பதின்மூன்றும் நூற்றுண்டில் தோன்றவில்லை. அப்பொழுது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்பவர் பல இன்னல்களுக்கு ஆளாயினர். காட்டு வழிகளில் கொடிய விலங்குகளுக்கும் கொள்ளைக் கூட்டத்தினருக்கும் தப்புவது ஒருபுறமிருக்க, கடுங்குளிர், கொடு வெப்பம், காடு மேடுகளைக் கடந்து செல்லும் வழித் துன்பம் முதலியவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். எனவே, அக்காலங்களில் அயல்நாடுகளுக்குப் பயணஞ் செய்தோர் அஞ்சா நெஞ்சமும், தாம் எடுத்த செயலை முடித்தே தீருவது என்ற துணிவும் பெற்றவர்களா யிருந்தனர் என்பதற்குச்

சிறிதும் ஐயமில்லை. அத்தகையோரால்தான் உலக நாடுகள் ஒன்றையொன்று அறிந்து கொண்டன; அயல் நாட்டு வாணிகம் பெருகியது; மக்களின் அறிவு வளர்ந்தது. இவ்வாறு அக்காலத்தில் பல்லாயிரக் கணக்கான கல் தொலைவு பயணஞ் செய்த மார்க்கோ போலோவின் வரலாறு நாம் கற்பதற்குரியதொன்றும்.



மார்க்கோ போலோ

மார்க்கோ போலோ கி. பி. 1254 ஆம் ஆண்டில் இத்தாலி நாட்டிலுள்ள வெனிஸ் நகரில் பிறந்தவர். இவருடைய தந்தையாரான நிக்கோலோ போலோ ஒரு வணிகர். அக்காலத்தில் வெனிஸ் நகரம் அயல் நாட்டு வாணிகத்தில் சிறந்திருந்தது. இந்தியா, சீனு முதலிய கீழை நாடுகளிலிருந்து நறுமணப் பொருள்களும், நவமணிக் கற்களும், கலைத்திறம் விஞ்சிய ஆடைவகைகளும், யானைத் தந்தம், மயில்தோகை முதலியனவும் கருங்கடல் துறைவாய்கள் வழியே நிலநடுக் கடலின் அரசியென விளங்கிய வெனிஸ் நகருக்குக் கொண்டு செல்லப்படும். இந்நகரிலிருந்து அப்பொருள்களைப் பிற ஐரோப்பிய வணிகர்கள் தம் நாடுகளுக்கு வாங்கிச் சென்று விற்பது வழக்கம்.

ஆகவே, வாணிகத்தால் செல்வங் கொழிக்கும் பெரு நகரமாக வெனிஸ் திகழ்ந்தது.

மார்க்கோ போலே ஆருண்டுச் சிறுவராயிருந்த பொழுது, நிக்கோலோ போலோ தம் தம்பி மாபியா போலோ என்பவருடன் கருங்கடல் துறைவாயான கான்ஸ்டான்டிநோபிளுக்குச் சென்றார். அங்கே சீன அரசரின் தூதர்களும் பல சீன வணிகர்களும் வந்திருந் தனர். அவர்களுடன் பழகிய நிக்கோலோ போலோவும் தம்பியும் சீனத்தைக் காண விழைந்தனர். சீன வணிகர்களுடன் அவர்களும் பயணஞ்செய்து, சீனத் தலைநகரை அடைந்தனர். அப்பொழுது மங்கோலிய மரபில் வந்த குப்ளே கான் என்ற பேரரசர் சீனத்தை ஆண்டுவந்தார். அவர் நம் வெனிஸ் வணிகர்களை அன்புடன் வரவேற்றுச் சிறப்புச் செய் தார். இரண்டு ஆண்டுக் காலம் அவர்கள் குப்ளே கானின் விருந்தினர்களாகத் தங்கியிருந்து பல பரிசில் களைப் பெற்று மகிழ்ந்தனர். இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகளைப் பற்றியும் கிறித்தவ மதத்தைப் பற்றியும் போலோக்கள் அரசரிடம் எடுத்துக் கூறினர். குப்ளே கான் மன்னர் போப்பாண்டவருக்கும் வேறுசில ஐரோப்பிய அரசர்களுக்கும் முடங்கல்கள் வரைந்து அவர்களிடம் கொடுத்து இத்தாலிக்கு அனுப்பினார்.

போலோக்கள் இருவரும் அம் முடங்கல்களுடன் தம் நாடு திரும்பினர்; தாம் பெற்றுவந்த முடங்கல்களை உரியவர்களிடம் சேர்த்து அவர்களுடைய விடைகளைப் பெற்றுக் கொண்டனர். சில காலம் தம் நாட்டில் தங்கியிருந்த பின் மறுபடியும் சீனத்துக்குப் புறப்பட ஆயத்தமாயினர். அப்பொழுது மார்க்கோ போலோ

வுக்கு யாண்டு பதினேழு. அவருக்கு, அயல் நாடுகளுக்குப் பயணம் செய்ய வேண்டுமென்னும் பேரார்வம் இருந்தது. அதற்குரிய வாய்ப்பு இப்பொழுது கிடைத்தது. 1271இல் நிக்கோலோ போலோவுடன் மார்க்கோ போலோவும் சீனத்துக்குப் புறப்பட்டார்.

வெனிஸ் நகரிலிருந்து புறப்பட்ட போலோக்கள் பால்கன் நாடுகள் வழியே பாரசீகம் சென்று பிறகு ஆப்கானிஸ்தானத்தை அடைந்தார்கள். அங்கே சிறிது காலம் தங்கியபின் அவர்கள் பாமீர் மேட்டு நிலத்தின் வழியே யார்க்கண்டு, கோபிப் பாலைவனம் ஆகிய நிலப்பரப்புகளைக் கடந்தனர். கோபிப்பாலையில் அவர்கள் அடைந்த இன்னல்கள் மிகப்பல; மலைகள், காடுகள், யாறுகள் முதலியவற்றைப் பெருந்துன்பத்துடன் கடந்து சென்று சீனத்தை அடைந்தனர். குப்ளே கான் தம் நண்பர்களான போலோக்களையும் மார்க்கோவையும் மகிழ்ச்சியுடன் வரவேற்று அவர்கள் சீனத்திலேயே தங்கிவிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மார்க்கோ போலோ விரைவில் சீன மொழி கற்றுத் தேர்ந்தார்; அரசியல் அலுவல்களில் அரசருக்கு உதவினர். அவரது அரசியல் அறிவையும் கல்விப் புலமையையும் கண்ட கான் அரசர் மகிழ்ந்து, அவரை ஒரு சீன மாநிலத்தின் ஆட்சித் தலைவராக அமர்த்தினர். மார்க்கோ அம் மாநிலத்தைத் திறம்பட ஆட்சிசெய்து அரசரை மகிழ்வித்தார். இக்காலங்களில் எல்லாம் மார்க்கோ தம் பயணத்தையும், தாம் சென்ற நாடுகளையும் அந்நாட்டு மக்களையும் பற்றிய விவரங்களை எழுதிவைத்துக்கொண்டார். இவ்வாறு போலோக்கள்

ஏறத்தாழ இருபது ஆண்டுக் காலம் சீனத்தில் தங்கியிருந்தனர். அவர்களுக்குத் தம் நாடு திரும்பிச் செல்ல வேண்டுமெனும் விருப்பம் பெரிதுமுண்டு; எனினும் அரசருடைய வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் அங்கேயே இருந்தனர்.

சீனத்து இளவரசி யொருத்தியைப் பாரசீக மன்னருக்குத் திருமணம் செய்விக்கக் குப்ளே கான் விழைந்தார். நிலத்தின் வழியாக அவ்விளவரசியைப் பாரசீகத்திற்கு அனுப்ப முடியாமல் இடையிலிருந்த நாடுகளில் போர்கள் நடந்து கொண்டிருந்தன. ஆகவே அரசர் கடல் வழியாக இளவரசியையும் சில தூதர்களையும் அனுப்ப முடிவு செய்தார். அவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் துணையாகவும் போலோக்களையும் அனுப்பிவைத்தார். போலோக்கள் அரசரிடம் விடை கொண்டு, பெரும் பரிசில்களையும் பெற்றுக் கொண்டு தூதுவர்களுடன் நாவாய்களில் புறப்பட்டனர். ஜாவா, சுமத்திரா தீவுகள் வழியே இலங்கையை அடைந்தனர். அங்கிருந்து இந்தியாவின் கிழக்குக் கரையையும் பிறகு மேற்குக் கரையையும் அடைந்தனர். தாம் தங்கிய நாடுகளில் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறித்து வைத்துக் கொள்வதை மார்க்கோ போலோ வழக்கமாகக் கொண்டார். அக் காலத்தில் நம் தமிழ்நாட்டு அரசராயிருந்தவர் செந்தர் பாண்டி (சுந்தர பாண்டியன்) என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலப் பயணத்தின் பிறகு கப்பல் பாரசீக நாட்டை அடைந்தது. இதற்குள் குப்ளே கான் அரசர் இறந்து விட்டார். ஆகையால்,

போலோக்கள் சீன இளவரசியைப் பாரசீக நாட்டு அரசனிடம் ஒப்படைத்துவிட்டுத் தம் நாடு திரும்பினர். பெருஞ் செல்வத்துடன் திரும்பிய போலோக்களைக் கண்டு இத்தாலியர் பெரு வியப்பெய்தினர். சிறிது காலத்தில் வெனிஸ் நகருக்கும் அண்டையிலிருந்த மற்ருெரு நாட்டுக்கும் போர் நடந்தது. அப்போரில் ஈடுபட்டிருந்த மார்க்கோ போலோ எதிரிகளால் சிறை செய்யப்பட்டார். சிறையிலிருந்த காலத்தில் தான் அவர் குறிப்புக்களின் உதவி கொண்டு, தம் பயண வரலாற்றை விரிவான ஒரு நூலாக எழுதினர். இந்த நூலைப் படித்த பிறகுதான் ஐரோப்பிய அறிஞர் களுக்குக் கிழக்கு ஆசிய நாடுகளைப் பற்றிய உண்மைச் செய்திகள் சிறிது சிறிதாகத் தெரியவந்தன.

மார்க்கோ போலோ சிறையிலிருந்து விடுதலை பெற்றபின், இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு அமைதி யாக வாழ்ந்து தம்முடைய எழுபதாம் ஆண்டில் மண்ணுலக வாழ்க்கையை நீத்தார். அவரைப் பின் பற்றியே அடுத்த நூற்ருண்டில் கொலம்பஸ், வாஸ் கோடகாமா முதலிய ஐரோப்பியர்கள் அயல்நாடுகளைக் கண்டறியும் ஆர்வம் மிகுந்தவர்களாகப் பல நாடு களுக்கும் புதுவழிகள் காண முற்பட்டனர்.

## அருஞ்சொற்பொருள்

**இன்னல் - கேடு, துன்பம். வழித்துன்பம் - பயணத்தின் பொழுது ஏற்படும் துன்பம். தொலைவு - தூரம். விஞ்சிய - அதிகமுள்ள. செல்வம் கொழிக்கும் – செல்வம் பெருகியிருக்கும். விழைந்தனர் – விரும்பினர். போப்பாண்டவர் - கத்தோலிக்க மதத்தினருக் கெல்லாம் தலைவர். ஆயத்தமாயினர் – ஏற்பாடு செய்தார்கள். பாலைவனம் - மழையின்றி வறண்டுள்ள நிலப்**

பகுதி. புறக்கணிக்க – தள்ளிவிட. வியப்பெய்தினர் – ஆச்சரியப்பட்டனர். முற்பட்டனர் - முன்வந்தார்கள். முடங்கல் – கடிதம்.

## வினுக்கள்

1. பண்டைக் காலத்தில் அயல்நாட்டுப் பயணம் செய்தோர் எத்தகைய இன்னல்களுக்கு ஆளாயினர்?

2. மார்க்கோ போலோவின் தந்தையார் என்ன தொழில் செய்து வந்தார்?

3. நிக்கோலோ போலோ முதல் தடவை சீனத்துக்குச் சென்ற வரலாற்றைக் கூறுக.

4 மார்க்கோ போலோ எப்பொழுது சீனத்துக்குச் சென்ருர்?

5. மார்க்கோ போலோ சீன அரசருக்கு எவ்வாறு உதவியாயிருந்தார்?

6. போலோக்கள் தம் நாட்டுக்கு மீண்டும் வருவதற்கு எவ்வாறு வாய்ப்புக் கிடைத்தது?

7. மார்க்கோ போலோ நம் நாட்டில் எவ்விடங்களைப் பார்த்தார்? என்ன குறிப்பிட்டுள்ளார்?

8. மார்க்கோ போலோ எப்பொழுது தம் பயணக் குறிப்புக்களை ஒரு நூலாக எழுதினுர்?

9. மார்க்கோ போலோவின் பயணம் எவ்வாறு ஐரோப்பியருக்கு ஓர் எடுத்துக்காட்டாயிருந்தது?

## பயிற்சி

(1) பொருள் கூறுக:—

வழித்துன்பம், பாலை, புறக்கணி, விஞ்சிய, இன்னல்.

(2) தொடர்களில் அமைத்தெழுதுக:—

வழித்துன்பம், செல்வங்கொழி, விழை, வியப்பெய்து.

(3) பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்தெழுதுக:—

(i) தோட்டத்தில் மரங்கள் வளர்கின்றன.

(ii) நாய்கள் பூனைகளைத் துரத்திச் சென்றன.

(iii) அந்த மாணவன் நேற்று இங்கே வந்தான்.
(iv) மணிகளில் ஒன்பது வகைகள் உண்டு.

(4) வினா மூன்றில் வரும் பெயர்ச்சொற்கள் ஒருமையா பன்மையா என்பதைக் குறிப்பிடுக.

---

## 11. இருபெருங் காப்பியங்கள்

தமிழன்னை எத்தனையோ சிறந்த அணிகளைப் பூண்டு விளங்குகிருள். அவளது எழிலை எடுத்துக் காட்டும் அணிகளுள் சிலம்பும் மேகலையும் கவர்ச்சி மிக்கவை.

சிலம்பு, சிலப்பதிகாரம் என்ற நூலையும், மேகலை, மணிமேகலை என்ற நூலையும் குறிக்கும். இவ்விரண்டும் பெருங்காப்பியம் என்ற வகையைச் சேர்ந்த நூல்கள். இவற்றை இயற்றிய ஆசிரியர்களின் கவித்திறனும் திறமையும் பெருமையும் இவற்றைக் கற்ருேர்க்குத் தெள்ளிதின் விளங்கும்.

இவ்விரண்டு தலைசிறந்த நூல்களும் ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்டன வென்ருல், தமிழ் மொழியின் தொன்மையையும், சிறப்பையும் அளவிட வல்லார் யாவர்? சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் என்பவன் சேரன் செங்குட்டுவன் என்ற சேர நாட்டு மன்னரின் தம்பியாவர். இளமையிலேயே துறவு பூண்டமையால் 'அடிகள்' என்ற பட்டத்தைப் பெற்ருர். மணிமேகலையை இயற்றிய சாத்தனுர் என்ற புலவர் பெருமான் மதுரை மாநகரில் ஒரு வணிகராயிருந்தார். இவர் கடைச் சங்கப் புலவர்களில் ஒருவர். இளங்கோவடிகளின் நண்பர்.

சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி ஆகியோர் கதையைக் கூறுகின்றது. காவிரீப்பூம் பட்டினம் சோழரின் தலைநகரமாயிருந்தது. அயல் நாட்டினர் கப்பல்களில் வந்து தமிழ் நாட்டாருடன் வாணிகம் செய்வதற்கு ஏற்ற துறைவாய்ப் பட்டினமாயிருந்தமையால் அந்நகரில் பெருஞ்செல்வர் பலர் வாழ்ந்து வந்தனர். அத்தகையோரில் ஒருவனான மாசாத்துவான் என்பவனுக்குக் கோவலன் என்றொரு மகன் இருந்தான். மாநாய்கன் என்ற மற்றொரு பெருஞ்செல்வனின் மகளான கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடந்தது. மணம் நடந்த சில வாண்டுகட்குப் பின் கோவலன் மாதவி என்ற ஓர் அழகிய நாடகக் கணிகையின்பால் ஈடுபட்டு, தன் வீடு வருவதை மறந்தான். தன் செல்வத்தை யெல்லாம் மாதவிக்காகவே செலவழித்துச் சில காலம் வாழ்ந்தான். அக்காலத்தில் மாதவிக்கு மணிமேகலை என்ற பெண் பிறந்தாள்.

கோவலனுடைய செல்வம் முற்றிலும் செலவழிந்து விட்டது. இப்பொழுது மாதவியின்பால் கோவலனுக்கு ஏற்பட்ட ஒரு மனத்தாங்கலால் அவன் அவளை வெறுத்து நீங்கிக் கண்ணகியிடம் வந்தான். கற்பிற் சிறந்த கண்ணகி, கோவலன் தன்னை இவ்வளவு காலம் புறக்கணித்ததைப் பற்றிச் சிறிதும் நினையாதவளாய், அவனை அன்புடன் வரவேற்றாள். கோவலன் தன் முயற்சியால் வாணிகம் செய்து பொருள் தேட விரும்பினான். அதற்குப் பணம் இல்லையே என்று கலங்கும்பொழுது, கண்ணகி விலை மிகுந்த தன் காற்சிலம்புகளைத் தருவதாகக் கூறினாள். இருவரும் மதுரை சென்று வாணிகம் செய்து

பொருளீட்ட எண்ணி, தம் பெற்ருேர் உறவினர் அறியாமல் புறப்பட்டார்கள்.

மதுரையில் கோவலன், கண்ணகியை மாதரீ என்ற ஓர் ஆயர்குடி மாதராளின் இல்லத்தில் இருக்கச் செய்து, அவளது காற்சிலம்புகளில் ஒன்றைப் பெற்றுக் கொண்டு, விற்றுவர எண்ணிக் கடைத் தெருவுக்குச் சென்ருன். சின்ஞட்களுக்கு முன்பு, மதுரை யரசஞகிய பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அரசியின் காற்சிலம்பு ஒன்று அரண்மனைப் பொற்கொல்லன் ஒருவஞல் களவாடப்பட்டிருந்தது. சிலம்பை விலை கூறிக் கொண்டு சென்ற கோவலனைக் கண்ணுற்ற பொற்கொல்லன், அவனே கள்வன் என்று அரசனிடம் கூறினுன். அதுகாறும் நீதி தவருது செங்கோல் செலுத்தி வந்த நெடுஞ்செழியன், ஊழ்வினையின் கொடுமையால் கோவலனை ஆராயாமலே அவனுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். கோவலன் முறைமையின்றிக் கொலையுண்டான்.

சில தீக்குறிகள் ஏற்பட்டதால் உளங்கலங்கிய கண்ணகி கோவலனைத் தேடி வந்தாள். அவன் கொலையுண்ட செய்தியைக் கேட்டதும் துன்பக் கடலில் மூழ்கினுள். நீதியின்றித் தன் கணவனைக் கொலைசெய்வித்த அரசன்மீது சீற்றங்கொண்டாள். நேரே அரண்மனையை அடைந்து தன் கணவன் கள்வனல்லன்என்று மெய்ப்பித்தாள். தான் முறைமை தவறிப் போனதை உணர்ந்த பாண்டியன் அந்நொடியிலேயே உயிரை விட்டான். பாண்டியன் தேவியும் தன் கணவனேடு இறந்தாள். கண்ணகியின் கற்புக் கனலிஞல் மதுரையில் பெரும் பகுதி எரிந்தழிந்தது.

இதன் பிறகு கண்ணகி பித்துப் பிடித்தவள்போல் சேரநாட்டை நோக்கிச் சென்ருள். ஊணுறக்கமின்றிச் சில நாட்கள் வழிநடந்து ஒரு குன்றை அடைந்து அங்கிருந்து விண்ணுலகெய்தினுள். இவ்விவரங்களை யெல்லாம் சாத்தனுர் வாயிலாக இளங்கோவடிகளும் சேரன் செங்குட்டுவனும் அறிந்தார்கள். செங்குட்டுவன் கற்பிற் சிறந்த கண்ணகிக்கு இமய மலையிலிருந்து ஒரு கல்லெடுத்து வந்து உருவச்சிலை செய்து ஒரு கோவில் கட்டினுன்.

மணிமேகலை என்ற நூலின் கதை சிலப்பதிகாரக் கதையின் தொடர்ச்சி என்றே சொல்லலாம். மாதவிக்கு மணிமேகலை என்ற பெண் பிறந்திருந்தாள் அல்லவா? அப்பெண்மணியின் வரலாறே மணிமேகலைக் கதையாகும்.

மதுரையில் கோவலன் கொலையுண்ட செய்தி காவிரிப்பூம் பட்டினத்திற்கு எட்டியதும் மாதவி உலகத்தின்மீது வெறுப்புற்று, பௌத்த சமயத்தைச் சேர்ந்து ஒரு துறவியானுள். ஒருநாள் மணிமேகலை ஒரு சோலையில் மலர் கொய்து கொண்டிருந்தபோது அந்நகர் அரசனின் மகனுன உதயகுமரன் என்பவன் அவளைக் கண்டு, அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள விரும்பிப் பின்தொடர்ந்தான். உலக வாழ்க்கையை வெறுத்துத் துறவுபூண்ட மணிமேகலை அவனிடமிருந்து தப்பிச் சிலகாலம் மறைந்து வாழ்ந்தாள். இக்காலத்திலெல்லாம் அவள் மக்கள் தொண்டு செய்து, புத்தருடைய அறவுரைகளைப் பின்பற்றி வாழ்ந்தாள். அந்நாட்களில் அவ்வூரிலிருந்த காயசண்டிகை என்ற விஞ்சையர் மகள்போல் உருமாறி

யிருந்தாள். உதயகுமரன் இவளது உருமாற்றத்தை ஆராய்ந்து அறிந்துகொண்டான். ஒரு நாள் அவன் காயசண்டிகையின் உருவத்தை மேற்கொண்டிருந்த மணிமேகலையிடம் உரையாடச் சென்றான். காயசண்டிகையின் கணவன் இதைக் கண்டு சீற்றங்கொண்டு உதயகுமரனைக் கொன்றுவிட்டான். தன்னால்தான் உதயகுமரனுக்குச் சாவு நேர்ந்தது என்பதை அறிந்த மணிமேகலை மிகவும் துயருற்றாள். பிறகு ஒருவாறு மனந்தேறி, பலவகைச் சமய உண்மைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து பௌத்த சமயமே சிறந்தது எனக் கண்டு அதையே கடைப்பிடித்து ஒழுகினாள்.

இவ்விரண்டு கதைகளும் துன்பியல் நிரம்பியவை. மனத்தை உருக்கும் பல பகுதிகளைச் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் காணலாம். செய்யுள் நடை தெளிந்த நீரைக்கொண்ட ஆற்றின் போக்கைப் போலிருக்கும். ஒன்றின் கதை மற்றொன்றின் தொடர்ச்சியாக அமைந்ததுபோல் ஆசிரியர்களிடையே நட்பாகிய தொடர்பு இருந்தது குறிப்பிடத்தக்கதாம்.

## அருஞ்சொற்பொருள்

தெள்ளிதின் - தெளிவாக. கவர்ச்சி – அழகு. தொன்மை – பழமை. நாடகக் கணிகை - நாட்டிய மாது. கவித் திறன் - செய்யுளியற்றும் ஆற்றல். மனத்தாங்கல் – வருத்தம். புறக் கணித்தல் - அலட்சியம் செய்தல். பொருளீட்ட – செல்வம் தேட. கண்ணுற்ற–பார்த்த. ஊழ்வினை-பண்டைப் பிறப்பில் செய்த தீவினைப்பயன். சீற்றம் - மிகுசினம். கற்புக்கனல் – கற்பாகிய தீ. மனந்தேறி – மனத்துயரம் நீங்கி. கடைப் பிடித்து – பின்பற்றி. துன்பியல் - துன்பத் தன்மை.

## வினாக்கள்

1. சிலம்பு, மேகலை – இவை எந்த நூல்களைக் குறிக்கும்? இவை எப்பொழுது இயற்றப்பட்டன?

2. 'இளங்கோவடிகள்' என்ற பெயருக்குக் காரணம் கூறுக.

3. திருமணத்திற்குப் பிறகு, கோவலன் எவ்வாறு வாழ்ந்து வந்தான்?

4. கோவலனும் கண்ணகியும் ஏன் மதுரைக்குச் சென்றனர்?

5. கோவலன் கொலையுண்ட வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

6. கண்ணகியின் சினத்தால் என்ன நேர்ந்தது?

7. செங்குட்டுவன் கண்ணகிக்கு எவ்வாறு கோவில் கட்டினான்?

8. மணிமேகலை ஏன் துறவு பூண்டாள்?

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—

தொன்மை, கவர்ச்சி, புறக்கணி, சீற்றம், மனத்தேறு.

(2) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக:—

சங்கம் + புலவர். மனம் + தாங்கல். கடை + தெரு.
சீற்றம் + கொள். சில + நாள். விண் + உலகு.

(3) வினைச்சொற்களுக்குரிய மூன்று காலங்கள் எவை?

(4) பின்வரும் தொடர்களில் வினைச் சொற்கள் என்ன காலத்திலுள்ளன?

(i) நான் செய்கிறேன்.
(ii) நான் செய்தேன்.
(iii) நான் செய்வேன்.

(5) மேலேயுள்ள தொடர்களில், 'நான்' என்ற சொல்லுக்கு ஈடாக, நாங்கள், நீ, நீங்கள் ஆகியவற்றை ஒவ்வொன்றாக அமைத்து, வினைச் சொல்லையும் ஏற்றவாறு மாற்றி எழுதுக.

## 12. நாட்டைக் காத்த சிறுவன்

ஐரோப்பியப் பெருநிலத்தின்கண் காணப்படும் சிறு நாடுகளுள் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள ஆலந்து என்பதும் ஒன்று. இதன் மேற்குப் பகுதி கடல் மட்டத்தைவிடத் தாழ்ந்ததாய் உள்ளது. நாட்டைக் கடல் விழுங்கிவிடாவண்ணம் பாதுகாப்பாகக் கடற்கரையோரமாக மண் மதில்களை அமைத்துள்ளார்கள். அவை நல்ல அகலமும் உயரமும் உடையன. கடல் கொந்தளித்து எழுங்கால் எத்தகைய கொந்தளிப்பையும் தாங்கி நிற்குமளவிற்கு வலிமையுடையனவாக அமைக்கப் பட்டிருந்தன. இம்மதில்கள் பழுதுரு வண்ணம் காக்க ஆங்காங்குக் காவலர்கள் அமர்த்தப் பட்டிருந்தனர்.

கடற்கரையோரமாய் அமைந்த நாடாதலின் மீன் பிடித்தலும், ஆங்காங்குள்ள புற்றரையில் ஆடு, மாடு மேய்த்தலுமே இந்நாட்டின் சிறந்த தொழில்களாகும். கடற்கரையின் அண்மையில் வாழ்வோர் இத்தொழில்களில் திறமைமிக்கவர்களாய்த் திகழ்ந்தனர். அவ்வாறு வாழ்ந்த குடிகளுள் வில்லியம் என்பவரும் ஒருவர். அவருக்குப் பீட்டர் என்ருெரு மகன் இருந்தான். கல்வியில் பேரார்வமுடையவனுயும் நற்பண்பு நிரம்பப் பெற்றவனுயும் விளங்கினுன் சிறுவன் பீட்டர்.

யாவரும் நடைவழியாகக் கொண்டிருந்த மதில்கள்மீது ஏறி நடந்தே ஏனைய சிறுவர்களுடன் பள்ளிக்குச் செல்வான் பீட்டர். மாலையில் தோட்டத்திற்கு நீர் ஊற்றிய பின்னரே மாணவர்கள் வீடுதிரும்ப வேண்டும் என்பது பள்ளி ஒழுங்கு. பீட்டர் உள்ளடங்

கிய குழுவினர் அன்று தங்கள் பணியைச் செவ்வனே செய்து முடித்து, இருள் சூழுமுன் இருப்பிடம் செல்ல விரும்பி விரைந்து நடக்கத் துவங்கினர்.

யாண்டில் மிக்க இளையவனை பீட்டர் ஏனைய மாணவத் தோழர் நடையைப் பின்பற்ற இயலாது பின் தங்கியே நடந்தான். மெல்ல நடந்து செல்கையில் மதில் உட்புறத்தில் ஓரிடத்தில் நீர் கசிவது



போல் காணப்பட்டது. உடனே மதில் மேலிருந்து நடை வழியே கீழிறங்கினன். நீர் கசியும் இடத்தைக் கூர்ந்து நோக்கினன். மதிற்காப்போர் அறியா வண்ணம் அங்குச் சிறு துளை ஏற்பட்டிருப்பதை உணர்ந்து திடுக்கிட்டான். பை, புத்தகங்கள் ஆகியவற்றை ஒரு புறம் கிடத்தித் தன் மேற்சட்டையை எடுத்துக் கிழித்து அத்துளையை அடைத்தான். அது அடைபடவில்லை. நீரின் விரைவால் துளை சற்றே

பெரிதாயிற்று. எஞ்சியுள்ள சட்டைக் கிழிசலேயும் சுருட்டி அடைத்தான். நீரின் அழுத்தமும் மோதும் விசையும் சேர்ந்து பீட்டரின் முயற்சியை வீணுக்கின. இருளும் வந்து சூழ்ந்து கொண்டது. தன் விரலே வைத்துத் துளேயை அடைத்தான். அங்ஙனம் செய்த தால் நீர்க்கசிவு சிறிது நேரம் நின்றது. எனினும் ஒவ்வொரு நிமிடமும் துளே பெரிதாகிக் கொண்டே போயிற்று. ஒரு விரல், இருவிரல் பின்பு ஐந்து விரல் கொண்ட பொந்தாகப் பெருகிக்கொண்டே போயிற்று. பின்பு தன் முன் கையைப் பொந்திற்குச் சரியானபடி வைத்து ஓரங்களில் சட்டை, பை முதலிய துணிகளே வைத்து அடைத்தான். நீர் கசிவது நின்றது.

பிறகு தன்னுல் முடிந்தமட்டும் உதவிக்காகக் கத்தி ஞன்; கூவியழைத்தான். யாவரும் தத்தம் அலுவல் முடிந்து வீடுதிரும்பிவிட்ட அந்நேரத்தில் ஒருவரும் அங்கு வரவில்லே. நெடுந் தொலேவிற்கப்பால் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. என்ன பயன்? பசி பீட்டரை மிகவும் வருத்தியது. கையை எடுத்துவிட்டால் கடல் நீர் உட்புகுந்து தன் ஊரை அழித்துவிடுமே என்றஞ் சியது அவன் உள்ளம்

மெல்ல மெல்ல நள்ளிரவாயிற்று. குளிர்ந்த கடற் காற்று பீட்டரின் இளம் உடலே வருத்தியது. உடலில் துணியின்றித் தன் முயற்சியினின்றும் தளராது கை யால் கடல் நீரைத் தேக்கி நிறுத்திஞன். நீர் கசியாது நிற்பதைக் கண்டு ஒருநொடி மகிழ்வான். தன்னேக் காணுது தாய் தந்தையர் வருந்துவரே எனக் கவலே யுறுவான். மறுநொடி உதவியொன்றும் கிட்டாதோ என ஏங்குவான்.

நள்ளிரவும் கடந்தது. வாடைக் காற்றால் வருந்தினன் பீட்டர். உள்ளம் தளராவிடினும் உடல் நலிந்தது. குருதியும் உறைந்துவிடுமோ என்று தோன்றுமளவுக்கு உடல் குளிர்ந்தது. மெல்ல வெள்ளி முளைத்தது. ஆடுகளை ஓட்டிக்கொண்டு யாரேனும் இவ்வழியே வருவர்; நாமும் உதவி பெறலாம் என அமைதியுற்றான் பீட்டர். அவன் உடல் சோர்வுற்று அசையும் திறனற்றுப் போயிற்று. நாடு காக்கப் பிறந்த கை அசையாது மதில் துளையை அடைத்து நின்றது.

மதில்மீது ஆட்டின் குளம்பொலியும் மக்கள் வரும் நடையோசையும் இவ்வுலக வாழ்வைச் சிறிது சிறிதாகத் துறந்துகொண்டிருந்த பீட்டர் காதுகளில் விழுந்தன. பேசும் திறனற்றுவிட்டான் அவன். மேலே வந்தவர்களில் ஒருவன் பீட்டரைக் கண்டு திடுக்கிட்டு இறங்கி வந்தான். பீட்டரைத் தொட்டு அசைத்துப் பார்த்தான். பின்னரே பீட்டரின் கை இருந்த இடத்தையும் தங்கள் ஊருக்கு வரவிருந்த கேட்டின் தன்மையையும் உணர்ந்து உரத்துக் கூச்சலிட்டான்.

கூச்சலைக் கேட்டுப் பலரும் பல கருவிகளோடு வந்தனர். சிலர் துளையை அடைக்கச் சிலர் பீட்டரை நிமிர்த்திப் படுக்க வைத்தனர். பீட்டர் மலர விழித்தான். அமைதியோடு கூடிய புன்னகை அவன் முகத்தில் அரும்பியது. ஆவி உடலை விட்டு அகன்றது. அவனது அஞ்சா நெஞ்சத்தையும் நாடு காத்த திறத்தினையும் இன்றும் போற்றிப் புகழ்கின்றனர் அந்நாட்டார்.

### அருஞ்சொற்பொருள்

பெருநிலம் – கண்டம். கொந்தளித்து - பொங்கி. எழுங்கால் – எழும்பொழுது. பேரார்வம் – மிகுந்த ஆவல். நள்ளிரவு - நடு இரவு. வாடைக் காற்று – குளிர்காற்று. தளராவிடினும் – வலிமை குறையாவிட்டாலும். நலிந்தது – வலிமை குறைந்தது; வருந்தியது. வெள்ளி முளைத்தது – சுக்கிரன் தோன்றியது.

### வினுக்கள்

1. ஆலந்து நாட்டின் மேற்குப் பகுதியின் இயல்பு எத்தகையது? அந்நாட்டினர் யாது செய்தனர்?

2. பள்ளியிலிருந்து திரும்புங்கால் பீட்டர் கண்டதென்ன? உடனே அவன் யாது செய்தான்?

3. இரவு முழுவதும் பீட்டர் மதிலை எவ்வாறு காத்தான்?

4. காலையில் நிகழ்ந்ததென்ன?

### பயிற்சி

(1) பொருள் கூறுக:—
பெருநிலம், பேரார்வம், நலிந்தது.

(2) தொடர்களில் அமைத்து எழுதுக:—
நள்ளிரவு, புன்னகை, கொந்தளித்து.

(3) சொற்களைப் பிரித்தெழுதுக:—
கடற்கரை, ஆங்காங்குள்ள, கூவியழைத்தான், குளம்பொலி, உலகவாழ்வு.

(4) பின்வரும் வினைச்சொற்களின் காலங்களை எழுதுக:—
சுட்டான், கண்டான், வருவான், செல்கிருர்கள், படிப்போம், விடுவிப்போம்.

(5) மேலே கொடுத்துள்ள வினைச்சொற்களைப் பிற காலங்களில் மாற்று.

---

## 13. உறவினர்க்கு முடங்கல் எழுதும் முறை

அயலூரில் உள்ள நமது உறவினருக்கோ நண்பருக்கோ செய்தி தெரிவிக்க வேண்டுமானுல் நாம் என்ன செய்கிருேம்? முடங்கல் எழுதி அஞ்சலில்

சேர்க்கிறோம் அல்லவா? அம்முடங்கல் எழுதும் முறையைப் பற்றி இப்பாடத்தில் தெரிந்து கொள்வோம்.

எழுதுவதற்கான செய்தி குறைவாக இருந்தால், 'கார்டு' எனும் அஞ்சல் அட்டையில் எழுதலாம். செய்தி மிகுதியாயிருந்தால் தனித் தாளில் எழுதிக் 'கவர்' என்னும் அஞ்சல் உறையில் அதை வைத்து அனுப்பலாம். அட்டையைக் காட்டிலும் உறைக்குச் செலவு சற்று கூடுதலாகும்.

முடங்கல் எழுதும் முறையை இனி ஆராய்வோம். செய்திகளைத் துவக்கம், பொருள், முடிவு என மூன்று வகையாகப் பிரித்து எழுதவேண்டும்.

துவக்கத்தில் முதன் முதலில் வலப்புறக் கோடியில் ஊரும் நாளும் குறிக்கவேண்டும். பின்பு நாம் யாருக்கு முடங்கல் எழுதுகிறோமோ அவர்களைப் பற்றிய நன்மதிப்புச் சொற்களும் நலம் உசாவுதலாகிய செய்தியும் எழுத வேண்டும். உறவினருக்கு எழுதும் போது உறவு முறையைக் குறிப்பிட்டு 'அன்புள்ள மாமா அவர்களுக்கு', 'அன்புள்ள அண்ணா அவர்களுக்கு' எனவும், தம்பிக்கு எழுதுவதானால் 'அன்புக்குரிய தம்பிக்கு' எனவும் எழுதவேண்டும். நண்பர்களாயின் 'அன்புள்ள நண்பருக்கு' என்று எழுத வேண்டும். பெரியவர்களுக்கு எழுதும்போது 'வணக்கம். நலம். நலம் அறிய விருப்பம்' என்றும் சிறியவர்களுக்கு எழுதும்போது 'எல்லா நலமும் ஏற்படுவதாக. நலம். நலமறிய விருப்பம்' எனவும் எழுதவேண்டும்.

பொருள் எழுதும் பிரிவில் அவரவர் தெரிவிக்க வேண்டிய செய்திகளை எழுதவேண்டும். அச் செய்தி

களை முறைப்படி பிரித்துக்கொண்டு பத்தி பத்தியாக எழுதவேண்டும்.

முடிவுப் பகுதியில் உறவினருக்காஞல் 'இங்ஙனம் தங்கள் கீழ்ப்படிதலுள்ள மருமகன்,' 'இங்ஙனம் தங்கள் கீழ்ப்படிதலுள்ள தம்பி' என்றும் எழுதிப் பின்பு எழுது பவர் தம் பெயரைக் குறிப்பிடவேண்டும். நண்பருக்கு எழுதும்போது 'இங்ஙனம் உன் அன்புள்ள நண் பன்' என்றெழுதிப் பிறகு பெயரை எழுதலாம்.

நாம் எழுதும் முடங்கல் நம் உறவினர் அல்லது நண்பருக்குப் போய்ச்சேர வேண்டுமல்லவா? அதற் காக அவற்றில் அவருடைய இருப்பிடம் எழுதவேண் டும். அஞ்சல் அட்டையில் இருப்பிடத்திற்காக ஒதுக் கப்பட்டிருக்கும் இடத்திலும், உறையில் மேற்புறத்தி லும் இருப்பிடத்தை எழுதவேண்டும். நமது நண்பர் அல்லது உறவினர் பெயரை முதலிலும் பின்பு வீட்டு எண், தெரு, ஊர், மாவட்டம் முதலியவற்றைக் குறிக்க வேண்டும். இருப்பிடம் எழுதுவதில் தவறு இருத்தல் கூடாது. மேற்கண்ட முறைப்படி எழுதப்பட்ட முடங் கல் ஒன்று வருமாறு:—

கும்பகோணம்
8-7-1960

அன்புள்ள மாமா அவர்களுக்கு,

வணக்கம். நலம். நலம் அறிய ஆவல்.

தங்கள் முடங்கல் கிடைக்கப் பெற்றேன். தாங்கள் அதில் கூறியுள்ளபடி நன்ருகப் படித்து வருவேன். அண்மையில் எங்கள் பள்ளியில் நிகழ்ந்த பேச்சுப் போட்டி ஒன்றில் நான் வெற்றி பெற்றதற்காகப் பதக்கம்

ஒன்று பரிசாக அளித்திருக்கிறூர்கள். விடுமுறைக்கு அங்கே வரவேண்டும் என்பதே என் விருப்பமாக உள்ளது. தாங்களும் என்னை வரச்சொல்லி எழுதி யிருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி.

நான் அங்கே வரும்போது பதக்கத்தைக் கொண்டு வருவதாக அத்தையிடமும் என் அத்தானிடமும் சொல்லுங்கள். வருவதற்கு முன் மீண்டும் எழுது கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள
மருமகன்
இரா. கண்ணப்பன்.

இருப்பிடம் :—
உயர்திருவாளர்,
கோவிந்தசாமிப் பிள்ளை,
எண் 17, ஆண்டார் தெரு,
தெப்பக்குளம் அஞ்சல்,
திருச்சி-2.

## வினக்கள்

(1) அயலூரிலுள்ள உன் தந்தைக்கு ஒரு முடங்கல் வரைக. அதில் உன் படிப்பைப் பற்றியும் உன் செலவுக்குப் பணம் வேண்டுமென்றும் குறிப்பிட்டு எழுதுக.

(2) சென்னையில் வாழும் உன் பெரிய தந்தையின் வீட்டுக்கு நீ உன் பள்ளி விடுமுறையின்பொழுது வரப்போவதாக எழுது.

(3) பின் வருவோருக்கு முடங்கல்கள் எழுதுக :—

(i) உன் தம்பிக்கு. (ii) உன் தங்கைக்கு. (iii) உன் தாத்தாவுக்கு.

(4) ஒரு முடங்கலின் மூன்று பகுதிகள் யாவை ?

## 14. அடிமைகட்கு இரங்கிய அண்ணல்

அமெரிக்காவில் கெண்டகி மாநிலத்தில் நியூ ஆர்லியன்ஸ் என்னும் நகரம் ஒன்று உள்ளது. அதனருகே உள்ள ராக்ஸ்பிரீங் என்ற சிற்றூரில் ஒரு நாள் பெருமழையாற் சிதைந்து கிடந்த குடிசையினின்றும் ஒரு சிறுவன் விறகுச் சுமையைத் தலையிற் சுமந்து வெளியே சென்றான். ஒட்டிய கன்னங்களும், உருக்குலைந்த உடலுமாய்க் கந்தலுடை உடுத்த அச் சிறுவன் நகரின் சந்தையில் விறகுச் சுமையை விற்று விட்டு வீடு திரும்பினான்.

வழியிலே ஒரு வணிகன் சில நீக்ரோ மக்களை ஏலத்தில் விற்றுக் கொண்டிருந்தான். ஏலத்தில் எடுத்த நீக்ரோக்களை மாடுகளைப்போல் கடத்திச் சென்றனர் நகரமக்கள். இதனைக் கண்ணுற்ற சிறுவன் மிக்க வருத்தமுற்றான். அவ்வடிமைகளை அவர்கள் தங்கள் விருப்பம்போல் கொடுமைப்படுத்துவதை அவன் அறிந்திருந்தான். விரைந்து இல்லம் சேர்ந்து தந்தையிடம் தான் கண்டதைக் கூறி, "மனிதனை மனிதன் மாடுபோல் நடத்துவது முறையோ?" என வினவினான். அவர் அமைதியாக, "இதில் விந்தை ஏதுமில்லை. தொன்றுதொட்டு நடந்துவரும் நிகழ்ச்சி தான்," என்றார். மகன் அடங்காச் சினத்துடன், "என்றேனும் ஒரு நாள் நான் ஆட்சியில் அமர் வேனாகில், இந்த அடிமை வாணிகத்தை வேரறுப் பதுதான் என் முதல் வேலையாக இருக்கும்," என மொழிந்தான். மைந்தனின் வீரவுரையை வெற்றுரை யாகக் கருதினார் வறுமையில் வாடிய தந்தை. இரக்க வுணர்ச்சி மிகுதியால் அன்று அச்சிறுவன் கூறுரைத்

தது பொய்க்கவில்லே. பிற்காலத்தில் அவனே அமெரிக்கக் குடியரசுத் தலேவனுகி, அடிமை வாணிகத்தை சட்டத்தின் அடிப்படையில் அழித்து, நீக்ரோக்களுக்கு நிலேயான விடுதலே வழங்கினுன். மனிதனே மனிதன் மதித்து வாழக் கற்பித்த அம் மாவீரன் உலகம் போற்றும் உத்தமனுய்த் திகழ்ந்தான். அந்த உத்தமன் தான் ஆபிரகாம் லிங்கன்.

ஆபிரகாம் லிங்கன் 1809ஆம் ஆண்டில் தாமஸ் லிங்கன் என்னும் ஓர் ஆங்கிலேயருக்கும் நான்ஸி ஹாங்க்ஸி என்னும் அம்மையாருக்கும் மகனுகப் பிறந்தார். இளமையில் கல்வி பயில்விக்கத்தக்க பொருள் வசதியின்மையால் அவரது தாயாரே எழுத்துக்களே மட்டும் நன்கு எழுதக் கற்பித்தார். அவரது பத்தாம் வயதில் அன்னேயார் காலமானுர். பள்ளியிற்படிக்கும் பேறுபெருத லிங்கன் அக்கம்பக்கத்திலிருந்து படித்தவர் சிலரிடம் புத்தகம் இரவலாகப் பெற்றுத் தாமே பயின்ருர்.

லிங்கன் இளமையில் அடைந்த துன்பத்துக்கோர் எல்லேயில்லே. வறுமை வாட்டவே பிழைப்புக்காகச் சில நாட்கள் விறகு சுமந்து விற்ருர். பின்னர் படகோட்டும் தொழிலில் ஈடுபட்டார். அஞ்சல் ஊழியராகச் சிலகாலம் வேலேசெய்தார். கடைசியாக நண்பரொருவனின் தூண்டுதலின்பேரில் பலசரக்குக் கடையொன்று வைத்து நடத்தினுர். விரைவில் வாணிகம் அழிந்துவிட்டது.

லிங்கன் 1832ஆம் ஆண்டில் இல்லினுய்ஸ் என்னும் மாநிலத்தின் சட்டசபை உறுப்பினர்த் தேர்தலுக்கு நின்ருர். தேர்தலில் வெற்றிபெறவில்லே.

பின்னர் ஆபிரகாம் சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரானர். தம்மிடம் வரும் வழக்குகள் மெய்யானவை தானு என்று ஆய்ந்தபின்பே அவற்றுக்காக நீதி மன்றங்களில் வாதாட இசைவார்.

1834ஆம் ஆண்டில் இல்லினுய்ஸ் மாநிலத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்ருர். எனினும் அவரது நோக்கம் கைகூடவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடபகுதி மாநிலங்களில் வாழ்ந்த மக்கள் அடிமை வாணிகத்தை ஒழிக்க வேண்டுமென்னும் கொள்கையை ஆதரித்தனர். தென் பகுதியில் வாழ்ந்தோர் இதற்கு மாருக அடிமை வாணிகத்தையே விரும்பினர். அடிமை வாணிகத்தை ஒழிக்கக் கருதி அவர் ஐக்கிய சட்ட மன்றத்திற் கொணர்ந்த தீர்மானம் தோற்றுவிட்டது.



1861இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் ஆபிரகாம் லிங்கன் வெற்றியடைந்தார். அடிமை வாணிகம் குறித்துத் தென்பகுதிகளில் நேர்ந்த குழப்பத்தை அடக்கினுர். ஐக்கிய நாடுகளினின்று பிரிந்து தனியாட்சி அமைக்க முயன்ற தென்பகுதியினருக்குப்

பலபட எடுத்துரைத்தும் பயனில்லை. இறுதியில் வட பகுதியினருக்கும் தென்பகுதியினருக்கும் போர் மூண்டது. 1-1-1862இல் அடிமைகள் அனைவருக்கும் விடுதலையளிக்கும் சட்டத்தை ஆபிரகாம் நிறைவேற்றி விட்டார். அறியாப் பருவத்தில் சூளுரைத்ததைச் செயலில் ஆற்றி அமைதியுற்றார். அடிமை வாணிகம் அறவே அகன்றது. உள்நாட்டுப் போரில் அவரே வெற்றிபெற்றமையால் நாட்டுப் பிரிவினையும் தவிர்க்கப் பெற்றது.

அரியதும் பெரியதுமான இச்செயலைச் செய்த லிங்கன் 1863ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள் ஒரு வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டுப் பூதவுடலை நீத்தார். எனினும் மக்கள் உள்ளத்திலே அவர் என்றென்றும் வாழ்வார் என்பது திண்ணம்.

## அருஞ்சொற்பொருள்

உருக்குலைந்த உடல் - மெலிந்த உடல். ஏலம் - விலை கூறுதல். முறை - நீதி, நியாயம். விந்தை - வியத்தகு நிகழ்ச்சி. வெற்றுரை - பொருளில்லாத பேச்சு. சூளுரைத்தல் - சபதம் செய்தல். வாதாட - வழக்காட. தவிர்க்கப் பெற்றது - நீக்கப் பெற்றது. பூதவுடல் - கட்புலனாகும் உடல்.

## வினாக்கள்

1. வீடு திரும்பிய சிறுவன் வழியில் கண்டது யாது?
2. சிறுவனுடைய தந்தையார் அதைப் பற்றி யாது கூறினார்?
3. தந்தையிடம் சிறுவன் சூளுரைத்தது யாது?
4. ஆபிரகாம் லிங்கன் சிறுவனாக இருக்கும்போது பட்ட துன்பம் என்ன?
5. அமெரிக்காவில் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் ஏன் போர் ஏற்பட்டது?

6. குடியரசுத் தலைவரானவுடன், லிங்கன் அடிமைகளுக்குச் செய்த நலன் யாது?

### பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—
உருக்குலைந்த, வாதாடு, தவிர்க்கப்பெறு, சூளுரை.

(2) சொற்களைப் பிரித்தெழுதுக:—
படகோட்டும், சட்டக்கல்வி, வடபகுதி, தென்பகுதி.

(3) பின்வரும் சொற்றொடர்களை எழுவாய்க்கு ஏற்றவாறு நிரப்புக:—

1. நான் என் ஊருக்கு நடந்து சென்றேன்.
2. தாங்கள்
3. நீ
4. நீங்கள்
5. அவள்

---

## 15. நோபெல் பரிசு ஏற்படுத்திய வள்ளல்

நம் நாட்டுப் பெரும்புலவர் தாகூரும் அறிவியல் அறிஞர் ஸர். ஸி. வி. ராமனும் நோபெல் பரிசுபெற்றவர்கள் என்பதை நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள். இந்த நோபெல் பரிசு என்பது யாரால் ஏற்படுத்தப் பெற்றது, யாரால் அளிக்கப்படுகிறது, இதைப் பெறுவதற்கு உரியவர் யார் என்ற விவரங்களை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா?

நோபெல் பரிசை நிறுவிய ஆல்பிரெடு நோபெல் என்பவர் 1833ஆம் ஆண்டில் பிறந்தவர்; ஸ்வீடன் என்ற நாட்டைச் சேர்ந்தவர். ஸ்வீடனின் தலைநகரம் ஸ்டாக்ஹோம் என்பது. அங்கேதான் ஆல்பிரெடு பிறந்தார். இவருடைய தந்தையாருக்கு இமானுவல் நோபெல் என்பது பெயர்.

இமானுவல் நோபெல் ஒரு வெடிமருந்துத் தொழிற்சாலையை நடத்திவந்தார். பலவகை வெடி மருந்துகள் செய்து அவற்றை விற்று மிக்க பொருள் திரட்டினார். ஒரு நாள் அத்தொழிற்சாலை திடீரெனத் தீக்கிரையாகி அழிந்துவிட்டது. இதன் பிறகு அவர் வேறு நாடுகளுக்குச் சென்று முதலீட்டுப் பணம் திரட்டி மற்றொரு வெடிமருந்துச் சாலையை நிறுவ முயற்சி செய்தார். உருசிய நாட்டு அரசிய லார் அவருக்கு உதவி செய்ய முன்வந்தனர். அந்தத் தொழிற்சாலை உருசியாவிலேயே நிறுவப்பட்டது. இமானுவல் அதன் தலைவராக இருந்து நடத்தி நல்ல ஊதியம் பெற்றார். அவர் உருசியாவில் பல்லாண்டுகள் தங்கியிருந்தார். அக்காலத்தில் அவரது இல்லத்தினர் ஸ்டாக்ஹோமிலேயே வாழ்ந்து வந்தார்கள். அவர் அவ்வப்பொழுது அனுப்பும் பணத்தைக் கொண்டு அவரது இல்லத்தினர் வாழ்க்கை நடத்திவந்தனர்.

ஆல்பிரெடு பள்ளிகளில் சேர்ந்து நன்கு கல்வி பயின்றார். பிறகு தம் பதினேழாம் யாண்டில் அயல் நாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு, பிற ஐரோப் பிய நாடுகளுக்கும், அமெரிக்கா, சீனா முதலிய தொலைவி லுள்ள நாடுகளுக்கும் சென்றார். இந்த அயல் நாட்டுப் பயணத்தால் அவரது அறிவு பெருகியது; பரந்தமனப் பான்மையும் ஏற்பட்டது.

இதற்குள், இமானுவல் உருசியாவில் பெரும் பொருள் திரட்டிக்கொண்டு தம் நாட்டுக்குத் திரும்பி னார். அவர் ஸ்வீடனில் ஒரு வெடிமருந்துச்சாலை ஏற் படுத்தி நடத்திவந்தார். தம் அயல் நாட்டுப் பய ணத்தை முடித்துக்கொண்டு ஊர்திரும்பிய ஆல்பிரெடு,

தம் தந்தையின் வெடிமருந்துச் சாலேயில் சேர்ந்து சில ஆராய்ச்சிகள் செய்யலானுர். இந்த ஆராய்ச்சிகளின் பயனுக, அவர் புதியதொரு வெடிமருந்தைக் கண்டு பிடித்தார். இதற்கு டைனமைட்டு என்று பெயர். முன்பு பயன்பட்ட எல்லா வெடிமருந்துகளேயும்விட இதுவே தலேசிறந்ததாகும். ஆல்பிரெடு கண்டு பிடித்த வெடிமருந்துக்குப் பல நாடுகளிலும் தேவை ஏற்பட்டது. எல்லோரும் அதையே வாங்கினர்.

ஆல்பிரெடு, ஸ்டாக்ஹோமிலுள்ள தொழிற்சாலே யுடன் அமையாது, செருமனி, ஆப்பிரிக்கா முதலிய பிற நாடுகளிலும் தம் தலேமையில் வெடி மருந்துச் சாலேகளே அமைத்தார். இந்தத் தொழிற்சாலேகளி லிருந்து பல இலட்சக் கணக்கான பவுன்கள் அவ ருக்குக் கிடைத்தன. திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபடவும் நேரமில்லாது, தமது தொழிலின் முன்னேற்றத்தையே கருதி அவர் உழைத்து வந்தார். அவருக்கு அறுபதாம் ஆண்டு நடக்கும்பொழுது ஏறத்தாழக் கோடிப் பவுன் மதிப்புள்ள உடைமைக்குத் தலேவரானுர். தளராத உழைப்பினுல் பெருஞ் செல்வம் திரட்டலாம் என்பதற்கு இவரது வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அம்மட்டோ! ஒருவர் திரட்டிய பெருஞ்செல்வத்தை மக்களினம் பயன்பெறுமாறு பயன்படுத்துதலுக்கும் இவரே வழிகாட்டிச் சென்ருர்.

தமக்கு இறுதிக் காலம் நெருங்குவதை உணர்ந்த நோபெல், தம் பெருஞ்செல்வத்தை நன்முறையில் பயன்படுத்த எண்ணித் தம் நண்பர் சிலருடன்

ஆராய்ந்தார். முடிவில் அவர் தம் உடைமையில் ஒரு சிறு பகுதியை நண்பர்களுக்கும் மருத்துவச்சாலைகளுக்கும் எழுதிவைத்தார். எஞ்சியுள்ளதின் வருமானத்திலிருந்து ஆண்டுதோறும் ஐந்து பரிசுகள் வழங்க வேண்டுமென ஏற்பாடு செய்தார். அவரது ஏற்பாட்டின்படி ஒவ்வோர் ஆண்டிலும் இலக்கியம், பௌதிகம், இரசாயனம், மருத்துவம், ஒற்றுமை ஆகிய ஐந்து துறைகளில் ஒவ்வொன்றிலும் மிகச் சிறந்த பணியாற்றுபவருக்கு இப்பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பரிசும் ஏறத்தாழ இலட்சம் ரூபாய் மதிப்புள்ளது. ஸ்டாக்ஹோம் நகரிலுள்ள அறிஞர் குழுவொன்று ஒவ்வோர் ஆண்டும் பரிசுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்கும். சாதி மதங்களும் பிறப்பில் உயர்வு தாழ்வும் கருதப்படாமல் 1901ஆம் ஆண்டு முதல் இப்பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1913ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபெல் பரிசு கவி தாகூருக்கு அளிக்கப் பெற்றது; 1930ஆம் ஆண்டில் பௌதிகத்திற்கான பரிசு ஸர். ஸி. வி. ராமனுக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறே, சப்பான், செருமனி, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய வெவ்வேறு நாட்டு அறிஞர்களும் நோபெல் பரிசுகளைப் பெற்றிருக்கின்றார்கள். ஆண்களேயன்றிப் பெண்களும் இப்பரிசுகளைப் பெற்றுள்ளனர். ரேடியம் கண்டுபிடித்த மேரீ கியூரீ அம்மையார் இப்பரிசு பெற்றவரே.

வரையாது வழங்கிய கடையெழு வள்ளல்களைப் பற்றியும் கண்ணன் முதலிய பிற வள்ளல்களைப்

பற்றியும் நீங்கள் கற்றிருப்பீர்கள். அவர்கள் வழங்கிய கொடை, அவர்களது வாழ்நாளுடன் நின்றுவிட்டதெனலாம். ஆனால் நம் ஆல்பிரெடு நோபெல் ஏற்பாடு செய்து வைத்துள்ள கொடையோ, அவரது வாழ்நாளுக்குப் பின்னர்தான் தொடங்கி இன்றளவும் நடந்து வருகிறது. இலக்கியம், அறிவியல் முதலிய கலைகளையும் நாடுகளிடையே ஒற்றுமையையும் வளர்க்க அவரது திரண்ட செல்வம் இன்றும் பயன்பட்டு வருகிறது.

## அருஞ்சொற்பொருள்

நிறுவிய - நிலைநாட்டிய. ஏற்படுத்திய. உள்ளாகி - உட்பட்டு. தளரா – குறையாத. அம்மட்டு – அந்த அளவு. பணியாற்றுதல் - தொண்டு செய்தல். திரண்ட - மிக்க அளவுள்ள. எடுத்துக்காட்டு – உதாரணம். வாழ்நாள் – ஆயுட்காலம்.

## வினாக்கள்

1. ஆல்பிரெடு நோபெலின் தந்தையார் செய்து வந்த தொழில் யாது?

2. இமானுவல் நோபெல் உருசியாவுக்கு ஏன் செல்ல வேண்டியதாயிற்று? அங்கு அவர் என்ன தொழில் செய்து பொருள் திரட்டினர்?

3. ஆல்பிரெடு நோபெலுக்குப் பரந்த மனப்பான்மை ஏற்படக் காரணம் யாது?

4. ஆல்பிரெடு கண்டுபிடித்த வெடிமருந்து யாது? அதை அவர் எவ்வாறு பயன்படுத்தினர்?

5. ஆல்பிரெடு நோபெல் தம் உடைமையை எவ்வாறு கலை வளர்ச்சிக்குப் பயன்படுத்தினர்?

6. நம் நாட்டில் நோபெல் பரிசு பெற்றோர் யாவர்?

7. ஆல்பிரெடு நோபெலுக்கும் பிற வள்ளல்களுக்குமுள்ள வேறுபாடு என்ன?

## பயிற்சி

(1) பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக:—
தளரா, வாழ்நாள், திரண்ட, வள்ளல்.

(2) தொடர்களில் அமைத்து எழுதுக:—
நிறுவு, உள்ளாகு, வழிகாட்டி, பணியாற்று.

(3) பின்வரும் தொடர்களில் உள்ள எழுவாய் பயனிலைகளை எழுதுக. எழுவாய்களின் திணை, பால், எண் ஆகியவற்றையும் எழுதுக:—

(i) இமானுவல் நோபெல் ஒரு வெடிமருந்துத் தொழிற் சாலையை நடத்தி வந்தார்.

(ii) அது தீக்கிரையாகி அழிந்து விட்டது.

(iii) அவரது இல்லத்தினர் ஸ்டாக்ஹோம் நகரின்கண் வாழ்ந்து வந்தனர்.

(iv) ஆல்பிரெடு தம் திறமையால் பெரும் பொருள் திரட்டினர்.

(v) இமானுவல் உருசியாவினின்று நீங்கித் தம் ஊருக்குத் திரும்பினர்.

(4) மேலே கொடுக்கப்பட்டிருக்கும் தொடர்களில் உள்ள வினைச்சொற்கள் வினைமுற்ரு, வினையெச்சமா என்பதைக் குறிப்பிடுக.

---

# 16. ஐந்தாண்டுத் திட்டம்

1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தியத் துணைப் பெருநிலம் ஆங்கிலேயரின் ஆட்சியினின்றும் விடுதலைபெற்று, இந்தியா அல்லது இந்தியக் கூட்டரசு என்றும் பாகிஸ்தான் என்றும் இருவேறு தனி நாடுகளாகப் பிரிந்தது. இவ்விரு நாடுகளுக்கும் தனித்தனியாக அரசியல் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. 1950ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26ஆம் நாள் புதிய அரசியல் திட்டம் நடை

முறைக்குக் கொண்டுவரப்பட்டது. அத்திட்டத்தின்படி இந்தியா பொது நல அரசுகள் அடங்கிய ஒரு தன்னுரிமை மக்களாட்சிக் குடியரசு நாடாக ஆகியது.

நாட்டில் மக்களாட்சி மலர்ச்சியுற்றதால், நாட்டின் முன்னேற்றத்தில் மக்களின் நேரடிப் பொறுப்பு இன்றியமையாததாயிற்று. பல வகையான சிக்கல்களைத் தீர்த்துவைக்க வேண்டிய கடமையும் உண்டாயிற்று. உலகப் பெரும் போரும், நாட்டில் ஏற்பட்ட பிரிவினையும் நாட்டின் பொருள் நிலையைச் சீர்குலைத்து விட்டன. மக்களின் வாழ்க்கையளவு குறைந்து கொண்டே வந்தது. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான இயற்கைப் பொருள்களும் செயற்கைப் பொருள்களும் அருமைப்பாடு உடையனவாகி விட்டன. மற்றொரு புறம் பணவீக்கமும் ஏற்பட்டு நாட்டின் பொருளியலை நிலையில்லாததாக ஆக்கியது. பொருளியல் சிக்கல்களேயன்றி மக்களின் உறவியலும், பண்பாடு, ஒழுக்கம் முதலியனவும் வரையறைக்குட்பட்டு முன்னேற வேண்டிய இன்றியமையாமையும் இருந்தது. எனவே, பொருளியலிலும், உறவியலிலும் நாடு முன்னேறும் பொருட்டு நமது மக்களரசு உடனடியாகப் பணியாற்றத் தொடங்கியது.

1950ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஒரு திட்டக் குழு நிறுவப்பட்டது. அத்திட்டக் குழுவினர் 1951ஆம் ஆண்டில் ஒரு திட்டத்தை நிறுவிப் பொதுமக்கள் அதனைப் பற்றித் தமது கருத்தைத் தெரிவிக்குமாறு வெளியிட்டனர். பொதுமக்கள் அங்ஙனம் கருத்து வழங்கிய பின் சில திருத்தங்களோடு முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1952ஆம் ஆண்டு ஏப்ரலில் செயன்

முறைக்கு வந்து 1956ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முடிய நிறைவேறியது.

அத்திட்டத்தின் நோக்கங்கள் பலவாகும். முதலாவதாக, மக்களுடைய உணவு உடை முதலிய அடிப்படைத் தேவைகளில் தன்னிறைவு காண வேண்டியிருந்தது. ஆதலால், முதல் ஐந்தாண்டுத் திட்டம் பெரும்பான்மையும் பயிர்த் தொழில் முன்னேற்றத் திட்டமாகவே உருவாகியது. கடலில் சென்று ஒரு பயனுமின்றி வீழ்ந்து கொண்டிருந்த ஆற்று நீரைக் கொண்டு நீர்ப்பாசனத்தையும், மின்னுற்றலையும் பெருக்க வேண்டியிருந்தது. உணவுப் பெருக்கத்திற்கும் நாட்டுப்புற நலனுக்குமாகப் பல திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன. எதிர்காலத்தில் சிறந்த முறையில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கான அடிப்படை இத்திட்டத்தின் வாயிலாகவே அமைக்கப்பட்டது. சுருங்கக் கூறின், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயற்கையாக அமைந்துள்ள வசதிகளை மிகவும் சிறந்த வகையில் உயர்ந்த பயனளிக்கும்படியாகச் செய்து மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதும், மக்களுக்கு வளமான வாழ்க்கைத் துறைகள் பலவற்றை வகுத்துக் கொடுப்பதுமே இத்திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க எதிர்பார்க்கப்பட்ட செலவுத்தொகை ரூ. 2,069 கோடி. தொடங்கிய பிறகு திட்டம் விரிவடைந்து விட்டதால் அத்தொகை ரூ. 2,356 கோடியாக உயர்த்தப்பட்டது. நாட்டு வருவாய், பயிர்த்தொழில், நீர்ப்பாசனம், மின்னுற்றல், போக்குவரவு, சாலையமைப்பு,

உறவின்முறை நலம், நாட்டு நலப்பரப்பு, கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கனிகள், தொழிற் சாலைகள், கல்வி, அறிவியல் ஆராய்ச்சி, உடல்நலம், தொழில்பெறும் வாய்ப்பு என்பன போன்ற பற்பல துறைகளில் திட்டம் செயலாற்றத் தொடங்கியது.

இத்திட்டத்தின் பயனுகச் செயலாற்றலுக்கு எடுத் துக்கொள்ளப்பட்ட எல்லாத்துறைகளிலும் முன்னேற் றம் காணப்பட்டது. பாசனத் திட்டங்களின் வாயிலாக 160 இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் புதிதா கப் பாசனவசதி பெற்றன. மின்னுற்றலின் ஓராண்டு விளைவு 677.5 ,கிலோவாட்டிலிருந்து 1·100 கிலோ வாட்டாகப் பெருக்கப்பட்டது. தொழில் துறைகளும் சிறந்த முன்னேற்றமடைந்தன. அரசினர் துறையி லும் தனியார் துறையிலும் பல புதிய தொழில் திட்டங் கள் தொடங்கப்பட்டன. அவற்றுள் வங்காளத்திலுள்ள சித்தரஞ்சன் புகைவண்டி விசைப்பொறித் தொழிற் சாலை, பீகாரில் அமைக்கப்பட்ட சிந்திரி உர விளைவுத் தொழிற்சாலை, சென்னையில் உள்ள புகைவண்டிப் பெட்டித் தொழிற்சாலை, விசாகப்பட்டினக் கலனுக்கு நிலையம் முதலியன குறிப்பிடத்தக்கன.

முதல் திட்டக் காலத்தில் பயிர்ப்பொருள் விளைவும் செய்பொருள் ஆக்கமும் பெருமளவிற்குப் பெருகியது. எனினும், நாட்டு முன்னேற்றப் பணி இடைவிடாது நடைபெற வேண்டுமாதலால், இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டு வெற்றியோடு வேலைகள் நடைபெற்றன.

முதல் திட்டத்தைக் காட்டிலும் இது பன்மடங்கு பெரியது. இத்திட்டத்தின் முதல் குறிக்கோள் நாட்டில் ஏழையென்றும் செல்வனென்றும் இல்லாமல் எல்லாரும் ஒத்த வாய்ப்புடையவர்களாக வாழ்வதற்கு வழிகோலுவதாகும். இதன் பொருட்டு நாட்டின் தொழில்துறையை மிக விரைவில் முன்னேறச் செய்வதற்கு வேண்டிய வேலைகள் நடைபெற்றன. மற்றும், இத்திட்டத்தில் பயிர்த்தொழில் முன்னேற்றத்திற்காக ரூ. 341கோடி ஒதுக்கப்பட்டது. முதல் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட பெரிய நீர்ப்பாசன வேலைகளெல்லாம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன. 195 புதிய திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுத் துறையையும் விரிவுபடுத்தும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இரண்டாவது திட்டம் நடைபெறும் காலத்திலேயே மூன்றாவது திட்டத்திற்கான ஏற்பாடுகளை அரசினர் தொடங்கிவிட்டனர். இத்தகைய பல ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாக நாடு பல்வேறு துறைகளிலும் முன்னேறி உலகப் பெருநாடுகளில் ஒன்றாகத் திகழவேண்டும் என்னும் ஊக்கத்துடன் நாம் யாவரும் திட்டங்கள் நிறைவேற ஆவனசெய்வோமாக.

## அருஞ்சொற்பொருள்

அருமைப்பாடு - அரிதாகும் நிலை. வரையறை – கட்டுப்பாடு. வருவாய் – வருமானம். கலனுக்கு நிலையம் – கப்பல் கட்டும் நிலையம். செய்பொருள் – ஆக்கப்படும் பொருள். வாய்ப்பு - சந்தர்ப்பம்.

## வினக்கள்

1. நம் நாடு எவ்வாறு மக்களாட்சிக் குடியரசு நாடாக ஆகியது?

2. நமது மக்களரசு உடனடியாகப் பணியாற்றத் தொடங்கியது ஏன்?

3. முதல் திட்டம் எவ்வாறு அமைக்கப்பட்டது?

4. முதல் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் யாவை?

5. இத்திட்டம் எவ்வெத் துறைகளில் செயலாற்றத் தொடங்கியது?

6. இத்திட்டத்தின் பயன்கள் யாவை?

7. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏன் தொடங்கப் பட்டது?

8. இரண்டாவது திட்டம் எம்முறையில் செயலாற்றத் தொடங்கியது?

9. நாம் செய்ய வேண்டுவது யாது?

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக :—

பணவீக்கம், அருமைப்பாடு, முன்னேற்றம், உருவாக்கு, வாழ்க்கை நிலே.

(2) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக :—

கூட்டரசு, மக்களாட்சி, தன்னிறைவு, விரிவடைந்து.

(3) பின்வரும் தொடர்களிலுள்ள இடுகுறிப் பெயர்களையும் காரணப் பெயர்களையும் எடுத்தெழுதுக :—

(i) இது ஒரு வளையல் கடை.

(ii) காற்ருடி அசைகிறது.

(iii) சேவல் ஒரு பறவை.

(iv) சிங்கம் காட்டில் வாழும் விலங்கு.

## 17. ஐக்கிய நாடுகளின் அமைப்பு

உலகின்கண் வாழும் மக்கள் யாவரும் அமைதியையும் நல்வாழ்வையுமே விழைகின்றனர். ஆனால் அவை இரண்டையும் பெறுவதென்பது அரிதாகவே யுள்ளது. தன்னலமும் பெருவிருப்பும் இடையூருக வுள்ளன. இவை இடைநின்று மக்களிடையே பூசலை விளைக்கின்றன. இதுபோலவே, உலகின்கண்ணுள்ள நாடுகளும் தத்தம் நலத்தையே நாடித் தமக்குள் போட்டியிட்டுப் பூசல் விளைக்கின்றன. அப் பூசல்களின் பயனுகப் போர் மூள்கின்றது. போரினுல் விளைகின்ற இன்னல்கள் போரில் ஈடுபட்டுள்ள நாடுகளையேயன்றிப் பிறநாடுகளையும் துன்புறுத்துகின்றன. இவ்வாறு பன்முறை துன்புற்ற பிறகே, நாடுகளிடையே போர் நிகழ்வதை ஒழிக்க வேண்டுமென்னும் எண்ணம் தோன்றுவதாயிற்று.

1914ஆம் ஆண்டில் முதல் உலகப் பெரும்போர் மூண்டது. போருக்குச் சென்ற மறவர்களேயன்றி யாதொரு குற்றமும் அறியாத பல்லாயிரவர் உயிர் நீத்தனர். எங்கு நோக்கினும் பசி, பட்டினி, வறுமை என்னும் கூக்குரலிட்டவரே காணப்பட்டனர். போரிலே ஈடுபட்டிருந்த அரசினர் மக்களின் நல்வாழ்விற்குப் பயன்படவேண்டிய நாட்டு வளத்தையெல்லாம் போரென்னும் அழிவுச் சுழலிலே கொட்டித் தொலைத்தனர். 1919இல் உலகப் பெரும்போர் முடிந்ததும், ஒற்றுமை உடன்படிக்கை செய்யப்பட்டது. அந்நாட்களில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவராக யிருந்த உட்ரோவில்சன் என்பவரால் சான்பிரான்ஸிஸ்

கோ நகரில் பன்னுட்டுக் கழகம் தொடங்கப்பெற்றது. பலநாடுகள் இக்கழகத்தில் இடம் பெற்றன. எனினும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் இதில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. மற்றும், இக்கழகத்தின் ஆணை செலுத்தும் உரிமை வல்லரசுகளிட மிருந்ததால், இதனுல் போர் ஒழிப்பினை உலகத்தில் நிலைநாட்ட இயலாது போயிற்று.

இரண்டாவது உலகப் பெரும்போர் 1939இல் தொடங்கி, முதல் உலகப் பெரும்போரைவிட மிகப் பெருங்கேட்டினை உலக மக்கள் யாவருக்கும் உண்டாக்கியது. அறிவியல் அறிஞர்களின் அயராத உழைப்பெல்லாம் அழிவு வேலைகளுக்கே பயன்பட்டன. இறுதியாக, உலகமே அஞ்சத்தக்க பெருங்கேட்டை விளைவிக்கத்தக்க அணுகுண்டுகள் ஹிரோசிமா, நாகசாகி என்னும் இடங்களில் வீசப்பட்டன. அவற்றின் கொடிய பயன்களைக் கண்டவர் யாவரும் மருண்டனர். போரிலே ஈடுபட்டிருந்த நாட்டினரும் பிறரும் தளர்ச்சியுற்றனர். 1945ஆம் ஆண்டில் ஏற்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையையொட்டி, ரூசவெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகிய அரசியல் அறிஞர்களால் ஐக்கிய நாடுகளின் அமைப்பு நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் ஐம்பது நாடுகள் பங்கெடுத்துக் கொண்டன. இதன் தலைமைச் செயலகம் நியூயார்க் நகரில் உள்ளது.

ஐக்கிய நாட்டு அமைப்பின் உறுப்பாகவுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு சொல்லுரிமை உண்டு. எனினும், வேண்டுமானுல் ஒவ்வொரு நாட்டிற்கும் ஐந்து சார்பாளர்கள் வரை அனுப்ப உரிமையுண்டு. முதலில் ஐம்பத்தொரு நாடுகளே இவ்வமைப்பில்

உறுப்பினராக இருந்தன ரெனினும் நாளடைவில் மேலும் பலநாடுகள் சேர்ந்துள்ளன. ஆண்டுக்கு ஒரு முறையாவது இவ்வமைப்புக் கூடவேண்டும். இன்றி யமையாது உடனடியாகச் செய்யவேண்டிய செயல்களி ருந்தால், அதற்கிடையேயும் இவ்வமைப்புக் கூட லாம். ஒவ்வொரு தடவையிலும் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இதற்கு உண்டு. இங்குக் கொண்டு வரப்படும் பரிவுரைகள் ஏற்றுக் கொள்ளப் படுவதற்கு உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இசைவு தரவேண்டும்.



ஐக்கிய நாட்டு அமைப்புக் கட்டடம்

ஐக்கிய நாட்டு அமைப்பு பல சிறந்த உறுப்புக்களால் அமைந்து இயங்குகின்றது. அவ்வுறுப்புக்களாவன:

(1) பொதுப் பேரவை, (2) பாதுகாப்பு மன்றம், (3) பொருளியல் – உறவியல் மன்றம், (4) பொறுப்பாட்சி மன்றம், (5) உலக நீதிமன்றம், (6) பணித்துறை நிலையம் என்பனவாம்.

பொதுப் பேரவையில் தற்போது 104 உறுப்பினர்கள் உள்ளனர். உலக நாடுகளின் ஒற்றுமை, ஆயுதக் கட்டுப்பாடு, பாதுகாப்பு மன்றத்தின் அவ்வப்போதைய உறுப்பினர்களின் தேர்தல், நீதிமன்றத்தின் நடுவர்

களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை இதன் சிறப்பான பணிகளாகும். இதனையடுத்து ஐக்கிய நாட்டு அமைப்பிற்கு உயிர் நாடியாக விளங்குவது பாதுகாப்பு மன்றம். இதன் மொத்த உறுப்பினர்கள் பதினொருவர். உருசியா, பழையசீனு, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு என்ற ஐந்து நாடுகள் நிலையாக உறுப்



ஐக்கிய நாட்டு அமைப்புக் கூடுமிடம்

பேற்கும். மற்ற ஆறு நாடுகள் இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை பொதுப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்படும். நிலையான உறுப்பினர்களுக்குத் தள்ளுரிமை உண்டு. உலக நாடுகளிடையே ஒற்றுமை நிலவச் செய்வதே இதன் பெருங்கடமையாகும். உலக மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கென இயங்குவது பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட பொருளியல்-உறவியல் மன்றமாகும். இது உலக நாடுகளின் பொருளியல், அரசியல், கலை, கல்வி, உடல்நலம்

ஆகியவற்றை முன்னேற்ற மடையுமாறு உதவு கின்றது. தன்னுரிமை பெருத நாடுகளின் தன்னுரி மைக்காகப் பாடுபடுவதே பொறுப்பாட்சி மன்றமாகும். உலக நாடுகளிடையே ஏற்படும் அரசியல் பூசல்களை ஆராய்ந்து அவற்றைத் தீர்த்துவைப்பது உலக நீதி மன்றத்தின் வேலையாகும். இது ஆலந்து நாட்டின் தலைநகரான தி ஹேக் நகரில் உள்ளது. இதில் மொத்தம் பதினைந்து நடுவர் இருப்பர். ஒருமுறை பணியேற்பவர் ஒன்பது ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பணியாற்றுவர். ஐக்கிய நாட்டு அமைப்பின் உறுப் புக்கள் யாவையும் இயங்குவதற்குத் துணையாக அமைந் துள்ளது பணித்துறை நிலையமாகும். இதன் அலு வலகம் லேக்சக்ஸஸில் உள்ளது. கூட்டங்களைக் கூட்டுதல், நாடுகளுக்கு அழைப்பு, ஆணை, சுற்றறிக்கை முதலியவற்றை அனுப்புதல் ஆகிய அலுவல்கள் இதன் செயலாளர்-பொதுவரின் மேற்பார்வையி லேயே நடைபெறுகின்றன.

இதுவரை ஐக்கிய நாட்டு அமைப்பால் பல நற் பயன்கள் நிறைவு பெற்றுள்ளன. பாலஸ்தீனத்தில் தோன்றிய அராபிய-யூதப் போரைத் தீர்த்து வைத் ததும், இந்தோனேசியா, சிரியா, லெபனுன ஆகிய வற்றின் தன்னுரிமைக்குப் பாடுபட்டதும், கொரியப் போரை நிறுத்தியதும், இந்தோசீனுவின் பூசலையும் சூயஸ்க் கால்வாய் சிக்கலையும் தீர்த்துவைத்தது மாகிய செயல்கள் பாராட்டுதற்குரியனவாம்.

இவ்வமைப்பில் பலகுறைகள் இருப்பினும் இதன் தொண்டும் இன்றியமையாமையும் குறைத்து மதிப் பிடற்குரியன அல்ல. எல்லா அரசுகளும் உளமுவந்து

தன்னலம் கருதாது ஒத்துழைத்தால் உலகத்தில் அமைதி நிலவும். உலகநாடுகள் யாவும் தத்தம் அடிப்படை உரிமைகளோடு வாழ்வுறும்.

## அருஞ்சொற்பொருள்

பெருவிருப்பு - பேரவா. இடையூறு – இடையில் உண்டாகும் தடை. இன்னல்கள் - துன்பங்கள். பன்னாட்டுக் கழகம்–சர்வதேச சங்கம். அயராத – தளராத. மருண்டனர் – வியந்து அஞ்சினர். சொல்லுரிமை – வாக்குரிமை. சார்பாளர் – பிரதிநிதி. தள்ளுரிமை – நீக்குகின்ற உரிமை.

## வினுக்கள்

1. நாடுகளிடையே போர் நிகழ்வதை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏன் தோன்றுவதாயிற்று?
2. பன்னாட்டுக் கழகம் எவ்வாறு தோன்றி மறைந்தது?
3. ஐக்கிய நாட்டு அமைப்பு எந்தச் சூழ்நிலையில் நிறுவப்பட்டது?
4. ஐக்கிய நாட்டு அமைப்பு எம்முறையில் இயங்குகின்றது?
5. ஐக்கிய நாட்டு அமைப்பின் உறுப்புக்கள் யாவை?
6. ஐக்கிய நாட்டு அமைப்பின் உறுப்புக்களில் ஏதேனும் இரண்டு பற்றி விளக்கம் தருக.
7. இதுவரை ஐக்கிய நாட்டு அமைப்பால் நிறைவுற்ற நற்பயன்கள் யாவை?

## பயிற்சி

(1) பொருள் கூறுக:—

பெருவிருப்பு, இன்னல்கள், அயராத, மருண்டனர், சொல்லுரிமை, சார்பாளர்.

(2) தொடர்களில் அமைத்து எழுதுக:—

தத்தம் நலத்தை, துன்புற்ற, பணித்துறை, நிலவச்செய், வல்லரசு, மதிப்பிடு.

(3) பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக :—

மரை, மறை.
கூரிய, கூறிய.
கலை, களை, கழை.
வலி, வளி, வழி.
ஊண், ஊன்.
கண்ணி, கன்னி.

(4) கீழ்வரும் தொடர்களிலுள்ள பெயரெச்சங்களை எடுத்து எழுதுக :—

(i) ஓடும் குதிரை.
(ii) படித்த பையன்.
(iii) பெய்த மழை நல்ல மழை.
(iv) ஆடிய ஆட்டம்.
(v) சூடிய மாலை.

---

## 18. யுவான் சுவாங்

சீன நாட்டுக்கும் பாரத நாட்டுக்கும் பண்டைக் கால முதலே சமயத் துறையிலும் வாணிகத் துறையிலும் நெருங்கிய தொடர்புண்டு. சீன அறிஞர் சிலர் இந்தியாவிற்கு வந்து இங்குத் தாம் கண்டவற்றை எழுதி வைத்துள்ளனர். அவர்களுள் யுவான் சுவாங் என்பவர் ஒருவர்.

பாரத நாட்டில் தோன்றி வளர்ந்து வாழ்ந்த புத்தர் பெருமான் மக்களுக்கு அறநெறி புகட்டினர். இவர் தோற்றுவித்த பௌத்த சமயம் ஹர்ஷப் பேரரசர் காலம் வரையில் இந்தியாவில் சிறப்பிடம் பெற்றிருந் தது; ஆசியாவின் கீழ்க்கோடி நாடுகளிலும் நன்கு பரவியது. சீனநாடு பௌத்த சமயத்தைப் பொதுச் சமயமாய் ஏற்றது. எனவே சீன அறிஞர் தமது

சமயத் தலைவர் புத்தர் பெருமான் பிறந்த நாட்டைக் கண்டு மகிழவும், பௌத்த சமயம் பற்றி மேலும் அறியவும் இந்தியாவுக்கு வந்தனர்.

யுவான் சுவாங் சிறந்த அறிஞர். அவர் தம் நாட்டைவிட்டு வெளி நாட்டுக்குச் செல்வதைச் சீன அரசர் விரும்பவில்லை. புத்தர் பிறந்த நாட்டைக் காணப் பேரவாக் கொண்டிருந்த யுவான் சுவாங் அரசர் அறியா வண்ணம் பயணமாகி இந்தியாவுக்கு வந்தார்.

காஷ்மீர் நாட்டு மன்னர் தம் நாட்டு எல்லையில் வந்திருந்த யுவான் சுவாங்கை வரவேற்றுச் சிறப்புச் செய்தார். இரண்டாண்டுகள் அங்கே தங்கிய யுவான் சுவாங், பின்பு மகத நாடு வந்து அங்கிருந்த நாலந்தாப் பல்கலைக் கழகத்தை அடைந்தார்.



யுவான் சுவாங்

நாலந்தாவில் நெடுநாட்கள் தங்கியிருந்த யுவான் சுவாங் தாம் விரும்பிய கொள்கை நூல்களைப் பயின்றார். பல அறிஞர்களுடன் பழகிப் பலவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்தார்.

இன்று அஸ்ஸாம் என அழைக்கப்படும் நாட்டிற்கு முன்னாளில் காமரூபம் என்பது பெயர். அதனை

ஆண்ட மன்னர் தம் அவைக்கு வருமாறு யுவான் சுவாங்கை அழைத்தார். நாலந்தாவைவிட்டுச் செல்ல விரும்பாத யுவான் சுவாங் அந்த அழைப்பை ஏற்க வில்லை. அரசர் வற்புறுத்தி அழைத்ததால் அவர் காமரூபம் சென்று சில காலம் தங்கினுர்.

யுவான் சுவாங்கின் பேரறிவு பற்றிக் கேள்வி யுற்ற ஹர்ஷர் உடனே அவரைத் தம் அவைக்கு அனுப்புமாறு காமரூப மன்னருக்கு முடங்கல் வரைந் தார். பேரரசரைப் பகைத்துக் கொள்ள விரும்பாத காமரூப மன்னர் சீன அறிஞரை அழைத்துக் கொண்டு ஹர்ஷரிடம் வந்துசேர்ந்தார்.

ஹர்ஷர் யுவான் சுவாங்கை வரவேற்றுச் சிறப் பித்தார். தம் அவைக்களப் புலவர்களையும், நாட்டி லிருந்த பல சமயத் தலைவர்களையும் ஒன்றுகூட்டினுர். சமயங்களைப் பற்றியும் பிற அறிவுக் கலைகளைப் பற்றியும் ஆராய்ச்சிகளும், சொற்போர்களும் நாள்தோறும் அவையில் நிகழ்ந்தன. பௌத்த சமயக் கொள்கைகளை விரிவாகக் கூறி, அவற்றின் உயர்வை விளக்கினுர் யுவான் சுவாங். அவரது பேரறிவை அனைவரும் போற்றினர்.

பேரரசர் ஹர்ஷரோடு சிலகாலம் இருந்த யுவான் சுவாங் தென்னுட்டைச் சுற்றிப் பார்க்க ஆவல் கொண்டு காஞ்சி நகருக்கு வந்தார். அந்நாளில் தமிழகத்தை ஆண்ட பல்லவ மன்னரான நரசிம்ம வர்மர் சீன அறிஞரை வரவேற்றுச் சிறப்பித்தார். பல்லவருக்குக் காஞ்சிபுரம் தலைநகராகவும் மாமல்ல புரம் துறைவாயாகவும் விளங்கின. காஞ்சியில்

பௌத்தப் பள்ளிகளும் பிற சமயத்தவர் கோயில்களும் மடங்களும் பல இருந்தன. சீன அறிஞர் அங்கிருந்த பௌத்தத் துறவிகளையும் பிற சமய அறிஞர்களையும் கண்டு அவர்களுடன் பழகிப் பல உண்மைகளை உணர்ந்தார். காஞ்சியைப் பற்றியும் நம் நாட்டின் கலைகள் பற்றியும் பல குறிப்புக்களை எழுதி வைத்தார். பின்பு நரசிம்மவர்மரிடம் விடைபெற்று வடக்கு நோக்கிப் பயணமானர்.

வழியில் சாளுக்கிய மன்னரான இரண்டாம் புலிகேசியால் சிறப்பிக்கப்பட்டு மீண்டும் ஹர்ஷரின் அவையை அடைந்தார். ஹர்ஷரிடமிருந்து தமக்கு வேண்டிய சுவடிகளைப் பெற்றுக்கொண்டு, தாய் நாட்டுக்குப் புறப்பட்டார். ஹர்ஷரும் வேறுபல மன்னர்களும் அளித்த பரிசில்களுடன் காஷ்மீரம் சென்று தாம்வந்த வழியாகவே தாய்நாடு சேர்ந்தார்.

பதினன்கு ஆண்டுகளுக்குப் பின் தாய்நாடு திரும்பிய யுவான் சுவாங்கைச் சீன அரசர் சிறப்பாக வரவேற்றார். இந்தியாவிலிருந்து, கொண்டு சென்ற கலைப் பொருட்களை அந்நாட்டவர் கண்டு களிக்குமாறு செய்து இருநாடுகளுக்கு மிடையே நல்லுறவை வளர்த்தார் யுவான் சுவாங்.

## அருஞ்சொற்பொருள்

அறநெறி புகட்டினர் – அறவழியை ஓதினர். தோற்றுவித்த - உண்டாக்கிய. அவைக்களப் புலவர் – அரசனது சபையில் வீற்றிருக்கும் தகுதியுள்ள புலவர். சுவடி - பனையோலைகளில் எழுதிய நூல். கொள்கை நூல் – தத்துவ நூல்.

## வினக்கள்

1. பண்டைக் காலத்தில் பல சீன அறிஞர்கள் இந்தியாவுக்கு ஏன் வந்தனர்?

2. யுவான் சுவாங் இந்தியாவுக்கு எவ்வழியாக வந்தார்? எங்கே கொள்கை நூல்களைக் கற்ருர்?

3. ஹர்ஷர் யுவான் சுவாங்கை எவ்வாறு சிறப்பித்தார்?

4. காஞ்சி நகரில் யுவான் சுவாங் கண்டதென்ன?

5. யுவான் சுவாங் இந்தியாவுக்கும் சீனுவுக்கு மிடையே எவ்வாறு நல்லுறவை வளர்த்தார்?

### பயிற்சி

(1) தொடர்களில் அமைத்தெழுதுக:—
அறநெறி, தோற்றுவித்தான், அவைக்களம், சுவடி.

(2) சொற்களைப் பிரித்தெழுதுக:—
சமயத்துறை. பாரதநாடு. அவைக்களம்.
இரண்டாண்டுகள். அறிவுக்கலை. அறநெறி.

(3) சொற்களைச் சேர்த்தெழுதுக:—
சேர்த்து+எழுது. இரண்டு+ஆடுகள்.
அறிவு+துறை. அறம்+வழி.

(4) எச்சவினை என்பது யாது? அதன் வகைகள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.

(5) இப்பாடத்தின் முதல் பத்தியிலுள்ள எச்சவினைகளை எடுத்தெழுது. அவை என்ன வகை என்று குறிப்பிடுக.

---

## 19. ஐயம் தீர்த்த ஆசான்

திருதராட்டிர மன்னன் கௌரவரின் தந்தை. அவனது தம்பியாகிய பாண்டுவின் புதல்வர் பாண்டவர். கௌரவர் நூற்றுவர்; பாண்டவர் ஐவரே. பாண்டவரில் மூத்தவனான தருமன் உண்மையே உரைப்பவன்; நேர்மை தவருதவன். கௌரவரில் மூத்தவனான துரியோதனன் தீய பண்புகளின் பிறப்பிடமாய்த் திகழ்ந்தான். தற்பெருமை மிக்க இயல்பினன்.

TB
031/60
N64



கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் அரசமரபுக்குரிய கல்வி கற்பிக்கத் துரோணர் என்பார் ஆசானாக அமர்த்தப்பட்டார். அரசர்க்குரிய கலைகளுள் சிறந்தது விற்பயிற்சி. இதனைக் கற்பிப்பதில் இணையற்றவர் துரோணர்; எனவே, தம் மாணவர்க்கு அக்கலையை நன்கு பயிற்றுவித்தார். பாண்டவர் ஐவரும் எல்லாக் கலைகளிலும் கௌரவரினும் மேம்பட்டே விளங்கினர்.

மன்னன் மகன் என்ற தற்பெருமை மேலிட்ட துரியோதனன் தன் தந்தையிடம் துரோணர் பாண்டவருக்கே சிறப்பாகக் கல்வி பயிற்றுவிக்கிறார் என்பான். ஆசிரியரிடமும் சில வேளைகளில் இவ்வாறே கூறுவான். ஐவருள் அருச்சுனன் விற்பயிற்சியில் வல்லவனாய் விளங்கினான். கருத்துடன் ஆசிரியர் கூறுவதைக் கேட்டுப் பயின்றான்.

துரியோதனனது பொறாமையையும் தன்பால் அவனுக்குள்ள தவறான எண்ணத்தையும் கண்டு மனம் வருந்திய துரோணர், அவனது ஐயத்தை நீக்கக் கருதினார். ஒருநாள் கங்கையில் நீராடிவரத் தம்முடன் துரியோதனனையும் அருச்சுனனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். பாதித் தொலைவு சென்றபின் தாம் எண்ணெய் தேய்த்து நீராட விரும்புவதாகக் கூறி அதற்கான பொருட்களை எடுத்துவர அருச்சுனனை அரண்மனைக்கு அனுப்பினார். கொணரும் பொருட்களை எக்காரணம் பற்றியும் நிலத்தில் வைத்தல் கூடாது என்றும் கட்டளையிட்டார்.

அருச்சுனன் கண்பார்வையினின்றும் மறைந்த பின்னர் ஒரு மறைமொழியைத் துரியோதனனுக்குக்

135629
சென்னை-600 008.

கூறினர். அதனை மணலில் எழுதி, “ நீ இதை மனப் பாடம் செய்தபின், இதனைக் கூறிக்கொண்டே அம்பை வில்லிற் பூட்டி இம்மரத்தை நோக்கி எய்தால் விந்தை யொன்றைக் காண்பாய்,” எனக் கூறி, “மனப்பாடம் செய்த பின்பு மணலிலுள்ளதைக் கலைத்து வா, கலைக்க மறக்காதே,” எனவும் எச்சரித்துத் தாம் கங்கைக் கரை சென்றார்.

துரியோதனன் மறைமொழியை நன்கு மனப் பாடம் செய்தான். அதனைக் கூறியவாறே வில்லில் அம்பைப் பூட்டி மரத்தை நோக்கி எய்தான். அம்பு மரத்திலுள்ள ஒவ்வோர் இலையையும் துளைத்து அப் பால் சென்றது. அவ்விந்தையைக் கண்டு வியந்த துரியோதனன் அதனை அருச்சுனனுக்கு இன்றித் தனக்குமட்டும் ஆசான் அருளியது குறித்து மகிழ்ந் தான். அந்த மகிழ்ச்சியில் மணலிலுள்ளதைக் கலைக்க மறந்து ஆசிரியனை அடைந்து வணங்கி நிகழ்ந்த விந்தையைக் கூறினன்.

நீராட்டத்திற்குரிய பொருள்களோடு திரும்பிய அருச்சுனன் வழியில் துரியோதனன் அம்பெய்த மரத் தைக் கண்டான். கூரிய அவன் விழிகள் மணலிலுள் ளதைக் கண்டன. மனப்பாடம் செய்தான். தோளில் வில்லும் அம்பறாத்தூணியும் இருந்தன. அம்புகளைக் கவட்டைபோல வைத்துக் கையிலுள்ள பொருட்களை அதன்மீது வைத்தான். பின்பு வில்லில் அம்பு பூட்டி நாணேற்றி அதே மரத்தின்மீது எய்தான். இலைகள் மறுதுளை கொண்டன. அறிவுக்கூர்மையுள்ள அருச்சு னன் மணலிலுள்ளவற்றை அழியுமாறு கலைத்தான்

நீராடக் காத்திருந்த ஆசிரியர்பால் பொருள்களைக் கொடுத்து வணங்கினன்.

மூவரும் நீராடி அரண்மனையை நோக்கித் திரும்பினர். மரமிருக்குமிடம் நெருங்கியது. மூவரும் மேலே பார்த்தனர். மறுதுளையைக் கண்ட துரியோதனன், சீற்றமிக்கவனாய், "எனக்குக் கற்பிப்பதற்கும் முன்பே அருச்சுனனுக்குக் கற்பித்துள்ளீர்," எனக் குற்றஞ் சாட்டினன். புன்முறுவலுடன் துரோணர், "மணலிலுள்ளதை நீ கலைத்து வந்தாயோ?" என வினவ, துரியோதனன் தான் மறந்துவிட்டதை ஒப்புக்கொண்டான். அருச்சுனன் மேல்நிகழ்ந்தவற்றைக் கூறினன். துரியோதனன் மீண்டும், "அங்ஙனமாயின் இவன் குருமொழி கேளாச் சீடன். தங்கள் கட்டளையை மீறி இவன் வரும் வழியில் நிலத்தில் பொருட்களை வைத்தான்." எனக் குறை கூறினன். அருச்சுனன், "தங்கள் கட்டளையை நான் ஒருநாளும் மீறமாட்டேன். அம்புகளால் கவட்டை அமைத்து அதிலேயே பொருட்களை வைத்தேன். மேலும் என்போல் வேறு யாரேனும் இதனைக் கற்றுக்கொள்வார்களே என்று மணலிலுள்ளதை நன்கு கலைத்து வந்தேன்," என்ருன்.

உளந்தளர்ந்து நின்ற துரியோதனனைக் கண்டு துரோணர், "எச்செயலிலும் அக்கறை வேண்டும். வீண் ஐயம் கொள்ளலாகாது. தானே நுட்பமாய்க் கற்கும் திறனமைந்த அருச்சுனன் நான் கூருமலேயே மணலில் எழுதியிருந்ததை அழித்து வந்தான். நான் கூறியிருந்தும் நீ அவ்வாறு செய்யத் தவறினய். நீ இந்நிகழ்ச்சியிலிருந்தேனும் உண்மை யுணர்ந்து எதிலும் கவனத்துடன் நடப்பாய்," என்ருர்.

## அருஞ்சொற்பொருள்

ஆசான் – கல்விகற்பிப்போன். மரபு – குலம். இணையற்றவர் – ஒப்பற்றவர். மேம்பட்டே – விஞ்சியே. மேலிட்ட – மிகுந்திருந்த. விந்தை – வியப்பு. அம்பறுத்தூணி – அம்புகளை வைத்திருக்கும் கூடு. புன்முறுவல் – புன் சிரிப்பு. மறைமொழி – மந்திரம்.

## வினாக்கள்

1. துரியோதனனின் இயல்புகள் என்ன? அவன் ஆசிரியரின்மீது சாட்டிய குற்றம் யாது?

2. கங்கைக்கு நீராடச் செல்லும்பொழுது துரோணர் அருச்சுனனுக்கு இட்ட கட்டளை யாது?

3. தனிமையில் இருக்கும்பொழுது துரோணர் துரியோதனனுக்கு என்ன கற்றுக்கொடுத்தார்? என்ன கட்டளையிட்டார்?

4. அருச்சுனன் எவ்வாறு அவ் விற்பயிற்சியைக் கற்றுக் கொண்டான்?

5. ஆசிரியரின் கட்டளையை மீறியவன் யார்? எவ்வாறு?

6. துரோணர் துரியோதனனுக்குக் கூறிய அறிவுரைகளைக் கூறுக.

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக:—

ஆசான், மரபு, மேம்படு, மேலிடு, விந்தை.

(2) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக:—

இணையற்றவர், மணலிலுள்ளது, அறிவுரை.

(3) பின்வரும் தொடர்களிலுள்ள எழுவாய் பயனிலைகளை எழுதுக:—

(i) அவர் அருச்சுனனை அரண்மனைக்கு அனுப்பினர்.

(ii) துரியோதனன் மறைமொழியை மனப்பாடம் செய்தான்.

(iii) மூவரும் அரண்மனைக்குத் திரும்பினர்.

(iv) இலைகள் எல்லாம் துளையாயின.

(4) மேலேயுள்ள வினைச்சொற்களை நிகழ்காலத்தில் மாற்றி எழுதுக.

## 20. தமிழ் மாணவரான ஆங்கிலேயர்

தமிழ் மொழியின் பெருமையை உலகறியச்செய்த அயல் நாட்டினரில் டாக்டர் ஜி. யு. போப் என்பவரின் தமிழ்த் தொண்டு நம்மால் போற்றற்குரியதாம். இவர் ஓர் ஆங்கிலேயர்; 1820இல் பிறந்தவர். இவரது முழுப் பெயர் ஜார்ஜ் யுக்ளோ போப். பொதுவாக இவரது குடியே சமயக் கல்வியிலும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதலிலும் மிகுந்த ஈடுபாடு உள்ள தெனலாம். இவருடன் பிறந்தோரில் பலர் சமய நூல்களை நன்கு கற்று, சமயத் தொண்டர்களாகப் பணியாற்றினர். இவரது பெற்றோர்களும் சமய நூல்களைக் கற்றறிந் தும் கடவுளிடத்தன்பும் நல்லொழுக்கமும் வாய்ந்தும் இருந்தனர். எனவே, இவர்களின் கடைசி மகனுன போப்பும் இளமை முதலே சமய நூல்களைக் கற்பதில் ஆர்வத்துடனிருந்தார். விவிலிய நூல் முதன் முதலில் எழுதப்பெற்ற ஹீபுரு, கிரீக்கு ஆகிய மொழிகளை இவர் கற்று அந்த மொழிகளில் இயற்றப் பெற்றிருந்த பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய விவிலியத்தின் இரு பகுதிகளையும் முறையே கற்ருர்.

இவ்வாறு சமயக் கல்வியில் சிறந்த புலமை பெற்று வரும்போதே தம் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்பதை வகுத்துக் கொண்டார்; அதாவது தமிழ்நாட்டிற்குச் சென்று கிறித்தவ சமயத்தைப் பரவச் செய்தல் வேண்டுமென்பதாம். இதற்கு ஏற்பத் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளையும் அவர் கற்ருர்.

போப் சென்னையில் சில காலம் தங்கினர். அப் பொழுது தமிழிலேயே பேசத்தொடங்கினர். பிறகு

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாயர்புரம் என்னும் ஊரில் சமயத்தொண்டராக அமர்த்தப்பட்டார். சில ஆண்டுகள் அங்கே தங்கி மக்களிடையே கல்வியையும் சமய நூலறிவையும் பரப்பி வந்தார். பின்னர் சமயத்துறை நூல்களைக் கற்பதற்கென ஒரு



ஜி. யு. போப்

தனிக் கல்லூரி அமைக்கக் கருதி அதற்குத் தேவையான பொருள் திரட்டினர். இவருடைய தூய வாழ்க்கையையும், சமயத்துறை ஆர்வத்தையும் கண்டு பலர் பொருள் கொடுத்து உதவினர். தாம் நினைத்தவாறே ஒரு கல்லூரி அமைத்து, அதில் தமிழ், கிரீக்கு முதலிய மொழிப் பயிற்சியும் சமய நூல் பயிற்சியும்

அளிக்க ஏற்பாடுகள் செய்தார். தாமே அதில் ஓர் ஆசிரியராகவும் பணியாற்றினர். அருகிலுள்ள பல ஊர்களுக்குச் சென்று கிறித்தவ சமய உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறினர். இவரது முயற்சியால் ஆங்காங்குச் சிற்சிலர் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். கிறித்தவர் தொகை சற்றுப் பெருகலாயிற்று. அக்காலங்களில் பிற சமயத்தினர் இவருக்கும் இவருடன் உழைத்த சிலருக்கும் தீங்கிழைத்ததுண்டு. ஆயினும் இவர் அதைச் சற்றும் பொருட்படுத்தவில்லை.

சாயர்புரத்தில் கிறிஸ்தவ சமயத்தை வேரூன்றச் செய்தபின் போப் ஓராண்டு இங்கிலாந்து சென்றுவிட்டு மறுபடியும் தமிழ் நாட்டுக்கு வந்தார். இப்பொழுது தஞ்சாவூரில் இவருடைய சமயத்தொண்டு தொடங்கியது. தஞ்சையில் சில ஆண்டுகள் தங்கியிருந்து தமிழை முறையே நன்கு கற்று வந்தார். திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலிய நூல்களில் இவருக்கு ஈடுபாடு பெருகிற்று.

தஞ்சாவூருக்குப் பிறகு, உதக மண்டலத்திலும், அதன் பின் பங்களூரிலும் போப் பல ஆண்டுகள் இருந்து கல்விப் பணியும் சமயப்பணியும் ஆற்றினர். கிறித்தவ சமயத்தைப் பரவச் செய்வதே இவரது முதன்மையான நோக்கமாயிருந்ததெனினும் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கான நூல்கள் சிலவற்றை இவர் இக்காலங்களில் இயற்றியுள்ளார். தமிழ்-ஆங்கில அகராதி, தமிழ் இலக்கண நூல்கள், தமிழ் உரைநடை நூல்கள் ஆகியவை போப்பினல் இயற்றப்பட்டன.

தம் அறுபத்திரண்டாவது யாண்டில் இங்கிலாந்து சென்ற போப் அங்கு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழிப் பேராசிரியராக அமர்த்தப் பெற்ருர். பல ஆண்டுகள் அப்பணியில் நிலைத்திருந்ததுடன் எம். ஏ., டி. டி., முதலிய பட்டங்களையும் பெற்ருர். தமிழைக் கற்க விரும்பிய ஆங்கில மாணவர்களுக்கு அம்மொழியைக் கற்பிப்பதும் உயர்ந்த சில தமிழ் நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளை வெளியிடுவதும் இவரது வேலைகளாயின.

திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய மூன்று நூல்களுக்கும் ஆங்கில மொழிபெயர்ப்புகளை ஒவ்வொன்ருக வெளியிட்டார். இவை முன்னுரை, குறிப்புரைகளுடன் நல்ல முறையில் வெளியிடப் பெற்றுள்ளன. இந்த நூல்களின் பெருமையை மேனுட்டினரும் அறிய முடிந்தது. இவற்றின் வாயிலாக இவருடைய தமிழறிவும், தமிழன்பும் வெளிப்பட்டன. இந்தியக் கலைகளில் வல்லுநராயிருந்த மாக்ஸ் முல்லர் முதலியோர் இவரைப் பெரிதும் பாராட்டினர். தம்மை ஒரு தமிழ் மாணவர் என்றே இவர் கடைசி வரை கூறிக்கொண்டார். இவருடைய தமிழ்ப்பணியை மிகவும் பாராட்டிய தமிழ் மக்கள் இவரைப் 'போப் ஐயர்' என்றே அன்புடன் அழைத்தனர். வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர் ஆகியோருடன் வைத்து எண்ணத்தக்க பெருமை வாய்ந்த போப் ஐயர் 1908இல் தம் எண்பத்தெட்டாம் யாண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## அருஞ்சொற்பொருள்

போற்றற்கு - புகழ்வதற்கு. ஈடுபாடு - ஆர்வத்துடன் வேலை செய்தல். குறிக்கோள் - பெறவேண்டுமென்று குறியாகக் கொண்ட பொருள். கல்லூரி - உயர் தரக் கல்வி நிலையம். தீங்கிழைத்தல் - தீங்கு செய்தல். பொருட்படுத்தவில்லை - பெரிதாக எண்ணவில்லை. வேரூன்ற - நிலைக்க. விவிலிய நூல் - பைபிள் நூல்.

## வினுக்கள்

1. போப்பின் இல்லத்தினர் எத்தகைய தொண்டில் ஆர்வமுடையவரா யிருந்தனர்?
2. விவிலியத்தின் இரு பிரிவுகள் யாவை?
3. போப் இளமையில் எத்தகைய கல்வி கற்ருர்?
4. போப்பின் குறிக்கோள் என்ன?
5. சாயர்புரத்தில் போப் செய்த தொண்டு என்ன?
6. சமயத்துறை மாணவர்களுக்கு போப் தனிக் கல்லூரி அமைத்தது எவ்வாறு?
7. எந்தத் தமிழ் நூல்களில் போப்புக்கு ஈடுபாடு மிகுந்திருந்தது?
8. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் போப் எப்பதவி பெற்ருர்? எப்பொழுது?
9. எந்தத் தமிழ் நூல்களை போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்? அதனுல் விளைந்த பயன் என்ன?

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக :—
ஈடுபாடு, குறிக்கோள், தீங்கிழை, பொருட்படுத்து, வேரூன்று.

(2) சொற்களைப் பிரித்தெழுதுக :—
வேரூன்று. எண்பத்தெட்டு. உலக வாழ்வு. நூலறிவு. அருகிலுள்ள. ஆங்காங்கு.

(3) வினைமுற்று என்பது யாது? அதற்கும் எச்சவினைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

(4) பின்வரும் தொடர்களைக் குறிப்பிற்கிணங்க மாற்றி எழுதுக :—

(i) போப் தமிழ் நூல்களைக் கற்ருர். அவர் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். (ஒரே தொடராகச் சேர்த்து எழுதுக.)

(ii) போப் தமிழ் நாட்டில் சமயப்பணி புரிந்ததுடன் தமிழ்ப் பணியும் புரிந்தார். (இரண்டு தொடர்களாகப் பிரித்தெழுதுக.)

(iii) நான் என் நண்பனிடம் அவன் புத்தகத்தைப் படித்தாஞ என்று வினவினேன். (மேற்கோள் குறிகளிட்டு எழுதுக.)

(iv) பசுக்குட்டியும் குதிரைப் பிள்ளையும் அணிற்கன்றும் இத்தொழுவத்தில் விளையாடுகின்றன. (பிழைகளைத் திருத்தி எழுதுக.)

---

## 21. நானிலம்

தமிழில் நானிலம் என்ற சொல் உலகைக் குறிக்கும். உலகுக்கு இப்பெயர் வந்தது என்னெனில், தமிழறிஞர் முதன்முதல் தம் நாட்டின் மேற்பரப்பை நான்கு இயற்கைப் பிரிவுகளாக வகைப்படுத்தி யிருந்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெயர்பெற்றன. பிற நாடுகளிலும் இத்தகைய பிரிவுகளே இருக்கக் கூடுமாதலின், உலகம் நான்கு வகை இயற்கைப் பிரிவுகளை உடையதாதல் வேண்டும்; எனவே நானிலம் என்ற சொல் உலகுக்குப் பெயராயிற்று. குறிஞ்சி முதலிய நிலப்பிரிவுகள் தம் இயல்பில் திரிந்து வளங்குன்றுவதால் பாலையாகும் என்பது பண்டைத் தமிழ் மக்களின் கருத்து. தமிழ் இலக்கண நூலோர் வகுத்துள்ளபடி இந்த நிலப் பிரிவுகளைப் பற்றிச் சிறிது தெரிந்துகொள்வோம்.

மலேயும் மலேசார்ந்த இடமும் குறிஞ்சி ஆகும். அழகுமிக்க இயற்கைக் காட்சிகளேக் காணவேண்டு மாயின் மலேகளுக்குத்தான் செல்லவேண்டும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். நம் நாட்டிலுள்ள நீலமலே, பொதியில், பழமுதிர்சோலே, கோடைக் கானல், பாரியின் பறம்பு முதலிய மலேகளின் எழில் பழம்புகழ் பெற்றது. எனவே, பொதுவாகக் குறிஞ்சி நிலம் கண்ணுக்கினிய காட்சிகளேயும் அதற்கேயுரிய சில வளங்களேயும் கொண்டிருக்கும். குறிஞ்சி என்ற மரம் இந்த நிலத்திற்குச் சிறப்பாயிருந்தமையின், இது குறிஞ்சி நிலம் என்று பெயர் பெற்றதாகக் கூறுவர்.

தேக்கு, வேங்கை, அகில் முதலிய மரங்களும் காந்தள், சுனேக்குவளே முதலிய செடிகொடிகளும் குறிஞ்சியின் நிலேத்திணேகளாகும். மலேகளில் யானே, கரடி, சிங்கம், புலி முதலிய விலங்குகள் வாழும். கிளி, மயில் முதலிய பறவைகளும் காணப்படும்.

குறிஞ்சி நில மக்களில் ஆடவருக்குக் குன்றவர், குறவர் என்றும் மகளிர்க்குக் குறத்தியர் என்றும் பெயர்கள் வழங்கின. இவர்களுடைய தலேவனுக இருந்தவன் பொருப்பன், வெற்பன் அல்லது சிலம் பன் என்று அழைக்கப்பட்டான். மலேச்சாரலில் விளேயக்கூடிய திணே, மலேநெல் ஆகிய கூலங் களேப் பயிர் செய்தலும், இயற்கையாகவே கிடைக் கும் தேனேயும் கிழங்குவகைகளேயும் திரட்டுதலும், வேட்டையாடுதலும் இந்நில மக்களின் வாழ்க்கைத் தொழில்கள்.

முருகன் குறிஞ்சி நிலத்திற்கு உரிய கடவுள். தொண்டகம் என்னும் பறையை முழக்கி, வெறியாட்டயர்தல் என்ற விழாக் கொண்டாடுவது குறிஞ்சி நில மக்களின் வழக்கம்.

காடும் காடுசார்ந்த இடம் முல்லை எனப்படும். மலையைச் சேர்ந்த காடுகள் குறிஞ்சி நிலத்தைச் சாருமாதலால், மலையைச்சேராத காடுகளே முல்லை நிலம் என்பதை உய்த்துணரலாம். காயா, கொன்றை, குருந்தம் முதலிய மரங்களும் வரகு, சாமை என்ற புன்செய்ப் பயிர்களும், முல்லைக்கொடியும் இந்நிலத்துக்குரிய நிலைத்திணைகளாகும். மான், முயல், முதலிய விலங்குகளும் கானக்கோழி முதலிய பறவைகளும் முல்லை நிலத்தில் சிறப்பாகக் காணப்படும். முல்லை நிலத்தில் ஆங்காங்கு மக்கள் வாழ்ந்த இடங்களுக்குச் சேரி, பாடி என்று பெயர். மக்களில் ஆடவருக்கு ஆயர், இடையர் என்றும், மகளிர்க்கு ஆய்ச்சியர், இடைச்சியர் என்றும் பெயர். மக்கள் தலைவனே, குறும்பொறை நாடன் எனப்பட்டான். ஆநிரை காத்தல் முல்லைநில மக்களின் சிறப்பான தொழில். மாயோன் என்ற திருமால் இந்நிலத்துக்குரிய கடவுள். குரவையாடுதல், என்பது இக்கடவுள் குறித்து ஆய்ச்சியர் கொண்டாடும் ஒரு விழா. முல்லை நில ஆடவருக்கு ஏறு தழுவுதல் சிறப்பான ஒரு விளையாட்டாகும். இதனையே இக்காலத்தார் சல்லிக்கட்டு என்பர்.

வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் என்று குறிக்கப்படும். ஆறுகளும் ஏரிகளும் மிகுந்த நீர் வளம் மிகுதியுள்ள நிலம் இது. மருதமரம் இந்நிலத்திற்குச் சிறப்பான மரம். வஞ்சிக்கொடி, தாமரை,

குவளை முதலிய செடிகொடிகளும் செந்நெல், வெண்ணெல் என்ற பயிர்களும் மருதநிலத்தில் காணக்கூடிய நிலைத்திணைகள். எருமை, நீர்நாய் முதலிய விலங்குகளும் நாரை, குருகு, அன்னம் முதலிய பறவைகளும் இந்நிலத்தில் திரியும்.

மருதநில மக்களில் ஆடவர் உழவர் என்றும் மகளிர் உழத்தியர் என்றும் பெயர் பெற்றனர். ஊரன், மகிழ்நன் என்பன இந்நிலத் தலைவனுக்கு வழங்கிய பெயர்கள். நெற்பயிர் விளைவித்தலே மக்களது முதன்மையான தொழில். இந்நிலத்துக்குரிய கடவுள் இந்திரன். இந்திரவிழா என்பது மருதநில மக்களுக்கே சிறப்பாக உரிய விழா.

நெய்தல் நிலம் என்பது கடலும் கடல்சார்ந்த இடமுமாகும். தாழை, புன்னை முதலிய மரங்களும் நெய்தல் முதலிய கொடிகளும் இந்நிலத்தில் வளரும் நிலைத்திணைகள். சுருமீன், முதலை முதலிய நீர்வாழ்வனவும் கடற்காகம், அன்றில் முதலிய பறவைகளும் இந்நிலத்திற்குச் சிறப்பானவை. உவர்க் கழிகள், மணற் கேணிகள் போன்ற நீர்நிலைகளே இங்கிருக்கும்.

நெய்தல்நில மக்களில் ஆடவருக்கு நுளையர், மகளிர்க்கு நுளைச்சியர் என்ற பெயர்கள் வழங்கின. மக்களுடைய தலைவனே துறைவன், சேர்ப்பன் என்று அழைக்கப்பெற்றான். இவர்களுடைய வாழ்விடங்கள் பாக்கம், பட்டினம் என்று பெயர் பெற்றன. உப்பு விளைவித்தலும், மீன்பிடித்தலும் மக்களின் தொழில்களாம். வருணன் மருத நிலத்திற்குரிய கடவுள்.

மேற்கூறிய குறிஞ்சி, முல்லை, முதலிய நிலங்கள் தம்மியல்பு கெட்டுப் பாலை யாவதுமுண்டு. எனினும், தமிழ்நூலோர் அதனைத் தனிநிலமாகக் கொண்டிலர். அங்கு உழிஞை, இருப்பை, பாலை, குரா, மரா முதலிய மரங்கள் சிற்சில இடங்களில் இருக்கும். இங்குள்ள மக்களில் ஆடவர் எயினர், மறவர் என்றும், மகளிர் எயிற்றியர், மறத்தியர் என்றும் பெயர் பெற்றனர். குறும்பு என்பது இம்மக்களின் குடியிருப்பிடம். விடலை அல்லது காளை என்ற தலைவனின் கீழ் வழிப்பறி செய்தலும், பிற ஊர்களுக்குச் சென்று கொள்ளையிடுதலும் பாலைமக்களின் தொழில்கள். பயிர் செய்யவோ, ஆடுமாடு மேய்க்கவோ வசதி இன்மையால், பாலை மக்கள் இத்தொழில்களை மேற்கொண்டனர் போலும்! காளியே இம் மக்கள் வழிபடு கடவுள்.

இவ்விவரங்களை யெல்லாம் தமிழ் இலக்கண நூலாசிரியர்கள் நுட்பமாக வரையறை செய்துள்ளனர். சங்க இலக்கியங்களின் சுவையையும் சிறப்பையும் உண்மையிலேயே அறிந்து இன்புறுவதற்கு மேலே கூறிய நிலப்பாகுபாடு பற்றிய விவரங்களை நன்கு கற்கவேண்டும்.

## அருஞ்சொற்பொருள்

நானிலம் – நான்கு வகை நிலப்பகுதிகள். திரிந்து – மாறுபட்டு. குன்றுவதால் – குறைவதால். சார்ந்த – அருகிலுள்ள. விலங்கு – நாற்கால் உயிரி. வெறியாட்டயர்தல் – முருகனை வழிபடும் ஒரு விழா. ஆநிரை – பசுக்கூட்டம். குரவையாடுதல் – மகளிர் பாடியாடும் ஒருவகைக் கூத்து. உவர்க்கழி – கடல்நீர் நிலத்தில் புகுந்து அமையும் நீர்நிலை. கேணி – சிறு கிணறு. கூலம் – தானியம். நிலைத்திணை – தாவரம்.

## வினாக்கள்

1. உலகுக்கு நானிலம் என்ற பெயர் ஏற்படக் காரணம் என்ன ?

2. பாலையின் தோற்றத்தைப்பற்றித் தமிழறிஞர் யாது கருதினர் ?

3. பழம் புகழ்பெற்ற மலைகளில் சில கூறுக.

4. குறிஞ்சி நிலத்திற்குரிய நிலைத்திணைகளும், உயிரிகளும் எவை ?

5. குறிஞ்சி நில மக்களுக்கு வழங்கிய பெயர்கள் என்ன ?

6. குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கைத் தொழில்கள் யாவை ?

7. வெவ்வேறு வகை நிலங்களின் கடவுள்கள் யாவை ?

8. முல்லை நிலத்துக்குரிய பொருள் என்ன ?

9. பின் வருபவை எந்த எந்த நிலத்துக்குரியவை ?

ஏறுதழுவுதல், மருதமரம், தாமரை, பட்டினம், பாடி, இருப்பை, இந்திரன், சுறாமீன்.

10. பின்வரும் நிலமக்களின் பெயர்களையும், தலைவனின் பெயர்களையும் கூறுக :—

நெய்தல், முல்லை, மருதம், குறிஞ்சி.

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்து எழுதுக :—

திரிந்து, சார்ந்த, ஆநிரை, குன்றுதல்.

(2) சொற்களைச் சேர்த்து எழுதுக :—

நான்கு + நிலம். பாலை + ஆகும். கண்ணுக்கு + இனிய. உய்த்து + உணரலாம். இந்திரன் + விழா. இங்கு + இருக்கும். தம் + இயல்பு. நெல் + பயிர்.

(3) இப்பாடத்தில் வந்துள்ள

(i) மரஞ்செடி கொடிகளின் பெயர்கள்,

(ii) விலங்குகள், பறவைகளின் பெயர்கள்,

(iii) ஊர்களின் பெயர்கள்,

(iv) மக்களின் பெயர்கள்.

ஆகியவற்றைத் தொகுத்து எழுதுக.

(4) பின்வரும் சொற்றொடர்களில் காலங்காட்டும் சொற்களை எடுத்தெழுதுக. அவை என்ன காலம் என்று குறிப்பிடுக :—

(i) இங்கு வந்த நல்லான் படிக்கிறான்.

(ii) நீ குளிக்கிறாய், இனிப் புசிப்பாய்.

(iii) செத்த பாம்பை அடித்தவன் வருகிறான்.

(5) மேலேயுள்ள தொடர்களில் உள்ள முற்றுவினைகளையும் எச்சவினைகளையும் தனித்தனியே எடுத்தெழுதுக.

---

## 22. வானூர்தி தந்த வல்லுநர்

பறவைகளைப்போல் தாமும் வானில் பறந்து செல்ல விரும்பி மக்கள் பண்டைக் காலமுதலே பல முயற்சிகளைச் செய்து வந்துள்ளனர். புராணங்களிலும் பண்டைக் கதைகளிலும் சிலர் பறவைப் பொறிகளை அமைத்துப் பறந்து சென்றதாகக் குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதலாகச் செய்யப்பெற்ற முயற்சிகளே பயனளித்தன. செருமனி நாட்டு வல்லுநர் செப்பலின் என்பார், காற்றைவிட எடைகுறைவான நீர்வளி அடைத்த கூண்டினைக் கொண்ட வானக் கப்பல் அமைத்துப் பறந்து சென்றார். லிலியேந்தல், லாங்கிலி ஆகிய அறிஞர்களும் இம்முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்றனர். ஆனால், எடை குறைந்த வளியை அடைத்த வானக்கப்பல்களை வானில் விரைவாக இயக்குவது எளிதாயில்லை; மேலும் அவை அழியக் கூடியவையாயுமிருந்தன.

முன்னோர்களுடைய முயற்சிகளை யெல்லாம் பயன் படுத்திக்கொண்டு வானத்தையும் மண்ணுலகைப் போல் போக்குவரவிற்குப் பயன்படச் செய்வதற்கு அமெரிக்காவில் உடன்பிறந்தார் இருவர் தோன்றினர். அவர்களில் மூத்தவர் வில்பர் ரைட்; 1867ஆம் ஆண்டில் பிறந்தவர். இளையவர் ஆர்வில் ரைட்; 1871ஆம் ஆண்டில் தோன்றினர். அவர்களுக்குக் காதரைன் என்ற தங்கையும் இருந்தாள். சிறுவர்களாக இருந்தபொழுதே உடன்பிறந்தார் இருவரும் ஓர் அச்சுப் பொறியை அமைத்துக்கொண்டு, சிறுவர்களுக்கெனச் செய்தித் தாள்கள் பல வெளியிட்டு வந்தனர். பின்பு, அவர்களிருவரும் ஒரு மிதிவண்டித் தொழிற்கூடம் துவக்கி நடத்திப் பொருளீட்டினர். சில ஆண்டுகளுக்குப் பிறகு, பறவைப் பொறியொன்றை அமைக்க விரும்பி, அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தனர்.

முதலில், வான்வழிச் செலவு பற்றிய நூல்களை யெல்லாம் வாங்கிப் படித்தனர். 1900ஆம் ஆண்டில் தம்முடைய மிதிவண்டித் தொழிற்கூடத்தை மூடிவிட்டு, வானூர்தி அமைக்கும் முயற்சியை மேற்கொண்டனர். இம்முயற்சியில் அவருடைய தந்தையாரும் தங்கையாகிய காதரைனும் தங்களால் இயன்ற உதவியைச் செய்தனர். மூன்று ஆண்டுகள் விடாது முயன்றபின், பெட்ரோலில் இயங்கக் கூடிய விசையைத் தம் வானூர்தியில் அமைத்துப் பறக்கவிட்டனர். 1903ஆம் ஆண்டுத் திசம்பர்த் திங்கள் 17ஆம் நாள், அவர்களது வானூர்தி 120அடித் தொலைவு 12நொடி நேரத்திற்கு வானில் பறந்தது. ஆனல், அக்காலத்தில் அந்த

நிகழ்ச்சியை மக்கள் ஒரு பெரிய வெற்றியாகக் கருத வில்லை.

உலக மக்கள் போற்றவில்லை என்பதற்காக, வில் பரும் ஆர்விலும் உளமுடைந்துவிடவில்லை. அவர்கள் மேன்மேலும் முயன்று, தம் பறவைப் பொறியைத் திருத்தமுற அமைப்பதிலேயே நாட்டங்கொண்டனர். 1908ஆம் ஆண்டில் வில்பர் தம் வானூர்தியைப் பிரான்சு நாட்டுக்கு எடுத்துச் சென்றார். அங்கே, அப்பொறியில் 93 கல் தொலைவு வானில் பறந்து காட்டினார். அதே காலத்தில், அமெரிக்காவில் மற்றொரு வானூர்தியில் ஆர்வில் பறந்து காட்டினார். இதன் பிறகுதான் இவ் வுடன்பிறந்தார் இருவருடைய திறமையையும் இவர்கள் அமைத்துள்ள வானூர்திகளின் பெருமையையும் அமெரிக்கரும் ஐரோப்பியரும் உணர்ந்து கொண்டனர். பொருளும் புகழும் இவர்களைத் தேடி அடைந்தன.

இவ்வாறு வெற்றிப் பெருவழியிலே வீறு கொண்டு எழுகின்ற அந்நாட்களில், 1912ஆம் ஆண்டில், வில்பர் இயற்கையெய்திவிட்டார். தம்பியார் சொல்லொணத் துயருற்றாரெனினும், வானூர்தி அமைக்கும் தொழிலைமட்டும் விடாது நடத்தி வந்தார்.

1915ஆம் ஆண்டில் தமது தொழில் நிலையத்தை நியூயார்க்கிலிருந்த ஒரு நிறுவனத்தார்க்கு விற்று விட்டு, அந்நிலையத்தின் தலைமைப் பொறியியல் வல்லுநராகப் பணியாற்றினர். முதல் உலகப் போரும் இரண்டாம் உலகப் போரும் நிகழ்ந்த காலங்களில் இவர் அமெரிக்காவின் ஆகாயப் படையில் பணி புரிந்தார்.

இவர்களது வெற்றியைத் தொடர்ந்து பலர் முயன்று, வானூர்தியை அமைப்பதிலும் அதை இடர்ப்பாடில்லாது செலுத்துவதற்கு வேண்டிய கருவிகளை அமைப்பதிலும் வெற்றி பெற்றனர். இன்று வான் வழிச் செலவு, நிலன் வழிச்செலவு போலவே மிகமிக எளிதாகவும் நடைமுறைச் செயலாகவும் ஆகியுள்ளது.

## அருஞ்சொற்பொருள்

பறவைப் பொறி - பறவைபோல் பறந்து செல்லக் கூடிய எந்திரம். வானக் கப்பல் - காற்றைவிட எடை குறைந்த ஊர்தி. மிதிவண்டி - சைக்கிள் வண்டி. பொருளீட்டினர் - செல்வம் திரட்டினர். செலவு - பயணம். தொலைவு - தூரம். வீறுகொண்டு - பெருமையுடன். நிறுவனம்-தொழில் நிலையம். பொறியியல் - எந்திர நூல். நடைமுறைச் செயல் - அன்றாட வழக்கம். நீர்வளி - ஹைடிரஜன். இடர்ப்பாடு - இடையூறு.

## வினாக்கள்

1. வானக் கப்பல் அமைப்பதில் வெற்றி பெற்றவர் யார்?
2. வானக் கப்பல் ஏன் பெருவழக்காக வில்லை ?
3. வில்பர், ஆர்வில் இருவரும் முதலில் என்ன தொழில் செய்து வந்தனர்?
4. வானூர்தி அமைக்கும் தொழிலை மேற்கொண்டது எவ்வாறு அவர்களுடைய நெஞ்சுறுதியைக் காட்டுகிறது?
5. பிரான்சிலும் அமெரிக்காவிலும் அவர்கள் பெற்ற பெரு வெற்றிகள் யாவை?
6. மூத்தவர் இறந்தபின் தம்பியார் எவ்வாறு தொழில் செய்தார்?

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்தெழுதுக :—

பொருளீட்டு, தொலைவு, உளமுடைந்து, நிறுவனம், நடைமுறைச் செயல்.

(2) சொற்களைப் பிரித்தெழுதுக :—

வானூர்தி, வானக்கப்பல், அச்சுப்பொறி, உலகமக்கள், உளமுடைந்து.

(3) பின்வரும் தொடர்களில் உள்ள பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று ஆகியவற்றை எழுதுக :—

(i) மாணவர்கள் நாள்தோறும் காலையில் எழுந்து, காலைக் கடன்களை முடித்துவிட்டு கடவுளைத் தொழவேண்டும்.

(ii) புலியைக்கொன்ற யானை வெற்றிப் பெருமிதத்துடன் நடந்தது.

(iii) பல மரங்களில் கணக்கற்ற பறவைகள் தங்கிக் கூடுகட்டி வாழ்கின்றன.

---

## 23. வேதநாயகம் பிள்ளை

(பண்டித மீ. கந்தசாமிப் புலவர், தமிழாசிரியர், தூயமரியன்னை உயர்பள்ளி, மதுரை.)

"கருணாலய நிதியே—தினமும்உன்
சரணம்புஜம் கதியே!"

என்று தொடங்கும் பாட்டை உங்கள் பள்ளியில் பாடியிருப்பீர்கள். இப்பாட்டைப்போல் ஏராளமான பாட்டுக்களை இயற்றிய வேதநாயகம் பிள்ளை என்பாரின் வாழ்க்கையையும், அவர் தொண்டுகளையும் இப்பாடத்தில் நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்குப் போகும் புகைவண்டிப் பாதையில் குளத்தூர் என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரில்தான் வேதநாயகம் பிள்ளையவர்கள் 1824ஆம் ஆண்டு பிறந்தார். சவரிமுத்துப் பிள்ளை என்பாரும், ஆரோக்கிய மரீயம்மாள் என்னும் அம்மையாரும் இவருடைய பெற்றோர் ஆவர். இவர்கள் கிறித்துவ சமயத்தைச் சேர்ந்தவர்கள்.

தக்க பருவத்தில் பிள்ளையவர்கள் பள்ளிக்குச் சென்ருர். கல்வி கேள்விகளில் அப்பருவத்திலேயே அவர் சிறந்து விளங்கினர். தமிழ்க் கல்வியை ஆழ்ந்து கற்று, அகன்ற புலமையைப் பெற்ருர். இவர்தம் பதினேராம் யாண்டிலேயே தமிழ் இலக்கிய



நூல்களைப் படிக்கும் ஆற்றல் பெற்ருர். பின்பு ஆங்கிலம் கற்க ஆவலுற்றுத் திருச்சிராப்பள்ளிக்குச் சென்ருர். அங்கு வழக்கு மன்றத்தில் பணியாற்றிய தியாகப்பிள்ளை என்பாரிடம் ஆங்கிலம் பயின்ருர். இம்மொழியையும் கருத்தூன்றிப் படித்ததால் இதிலும் புலமை பெற்ருர். தமிழை ஆங்கிலமாகவும், ஆங்கிலத்தைத் தமிழாகவும் மொழி பெயர்க்கும் திறனும்

இவர் கைவரப் பெற்ருர். அதனுடன் தமிழில் செய்யுள் இயற்றும் வன்மையும் பெற்ருர். இந்நாட்களில் பிள்ளையவர்கள் இரவு, பகல் என்ற வேறுபாடின்றி உயர்ந்த தமிழ் நூல்களையும், பிற நூல்களையும் வருந்திக் கற்றுச் சிறந்த அறிவு பெற்ருர்.

வேதநாயகம் பிள்ளை இருபத்திரண்டாம் யாண்டை அடைந்தார். அப்போது திருச்சிராப்பள்ளி வழக்கு மன்றத்தில் நடுவராக, கார்டன் துரை என்பார் இருந்தார். இவர் பிள்ளையைப் பற்றி நன்கறிந்தவர்; தம் வழக்கு மன்றத்தில் இவரை ஓலைக்காப்பாளராக அமர்த்தினர். இதில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றினர். பின்பு திருச்சி மாவட்ட வழக்கு மன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக, பாயிலோ துரை என்பாரால் அமர்த்தப்பட்டார். பிள்ளை, பகலில் இவ்வேலையைச் செய்துவிட்டு இரவில் அரிய நூல்களைப் படித்து ஆராய்வார்.

இந்நாளில் திரிசிரபுரம் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பழக்கம் வேதநாயகனுருக்குக் கிடைத்தது. தமிழ் நூல்களில் தாம் காணும் ஐயப்பாடுகளை மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் கேட்டு நீக்கிக் கொள்வார். அவரையே தம்முடைய ஆசிரியராகக் கொண்டு ஒழுகினர்.

அப்போது தாயுமானவர் கோவிலிலுள்ள தருமபுர மடத்தில் சிறிய பூசல் ஒன்று முளைத்தது. கட்டளைத் தம்பிரான் ஆதீனத் தலைவருக்கு அடங்காமல் தம் விருப்பம்போல், வெறுப்புக்குரிய செயல்களைச் செய்யலானர். இதற்காக ஆதீனத் தலைவர் வழக்கு மன்றத்

தில் வழக்குத் தொடர்ந்தார். வழக்குக்குரிய மனுவை ஆங்கிலத்தில் எழுதவேண்டும் என்று மீனுட்சி சுந் தரம் பிள்ளையிடம் தலைவர் சென்றுர். அவர், வேத நாயகம் பிள்ளையே இதற்குத் தக்கவரென அவரிடம் சென்றுர். அப்போது பிள்ளையின் வீட்டிற்குக் கட்டளைத் தம்பிரானைச் சேர்ந்தோர் இதே நோக்குடன் வந்திருந்தனர். உடனே மீனுட்சி சுந்தரம் பிள்ளை ஒரு செய்யுளை எழுதிப் பணியாள் வாயிலாக உள்ளே அனுப்பினுர். செய்யுளைப் பார்த்த வேதநாயகனுர் தம் கருத்தையெல்லாம் முற்றுஞ் செலுத்தி ஆங்கில விளக்கவுரையை எழுதித் தந்தார். வழக்கில் ஆதீனத் தலைவரே வென்றுர். பிள்ளையவர்கள் தம் ஆசிரியர் பால் கொண்ட நன்றிப் பெருக்கு இதனுல் விளங்கும்.

இக்காலத்தில் இவர் வட்டநடுவர் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலில் தரங்கம்பாடியில் வட்ட நடுவராக அமர்த்தப்பட்டார். பிறகு சீகாழியிலும், மாயூரத்திலும் அதே வேலை பார்த்தார். அங்குப் பணியாற்றிய காலத்தில், அருந்தொண்டுகள் பல செய்தார். ஏழ்மையில் உழன்ற பல குடிகளைக் காத் தார். பல ஏழைச் சிறுவருக்குக் கல்வி கற்க ஏற்பாடு செய்தார். அப்போது கொடிய பஞ்சம் வந்தது. பசிப் பிணியால் வாடி நலியும் மக்களைப் பிள்ளை தாம் காத் தார். தம் வீட்டிற்கு அருகில் உணவுச்சாலை அமைத்து, எல்லோருக்கும் உணவளித்தார். ஆயிரக் கணக் கானேர் உணவையுண்டுப் பசிநீங்கிப் பிள்ளையை வாழ்த்தினர்.

இவர் கற்ற கல்வி ஒளி வீசுவதேபோல் பல அரிய நூல்கள் இவரால் இயற்றப்பட்டன. அவற்றுள்

சர்வ சமய சமரசக் கீர்த்தனை, பிரதாப முதலியார் சரித்திரம், பெண்மதி மாலை என்பன மிகப் பெயர் பெற்றவை.

எல்லாச் சமயத்தவரும் ஒப்புக்கொண்டு பாடக் கூடிய இருநூறு அரிய இசைப்பாடல்களை மேலே கண்ட முதல் நூலில் காணலாம். இவ்விசைப்பாடல்களில் ஒன்றின் முதல் அடியைத்தான் இப்பாடத்தின் தலைப்பில் கண்டீர்கள்.

நகைச் சுவையோடும், கற்பனை வளத்தோடும் எழுதப்பட்ட முதல் தமிழ்த் தொடர்கதை பிரதாப முதலியார் சரித்திரம் ஆகும். இது இன்றும் பலராலும் படித்துப் போற்றிப் புகழப்படுகிறது. இதை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்கள். பெண்கள் கல்விகற்று அறிவு பெறுவதன் கட்டாயத்தையும், அவர்கள் கற்றவழி ஒழுகவேண்டிய முறையையும், பாடல்களாலும், உரைநடையாலும் பெண்மதி மாலையில் விரிவாக வேதநாயகனார் எழுதியுள்ளார்.

நீங்களும் இவ்வரிய நூல்களைப் படித்து அறிவு பெற்றுத் திகழ வேண்டும்.

### அருஞ்சொற்பொருள்

புலமை — அறிவு. கைவர - கிடைக்க. வழக்குமன்றம் - நீதித்தலம். ஐயப்பாடு – சந்தேகம். பூசல் – சண்டை. தம்பிரான் – சைவமடத் துறவி. வளம் – செழிப்பு. வட்ட நடுவர் - முன்சீப். ஓலைக்காப்பாளர்–அலுவலக ஓலைகளின் பாதுகாவலர்.

### வினாக்கள்

1. வேதநாயகம் பிள்ளையின் பெற்றோர் யாவர்?
2. வேதநாயகம் பிள்ளை தமிழையும் ஆங்கிலத்தையும் எவ்வாறு நன்கு கற்றார்?

3. முதன் முதலில் வேதநாயகம் பிள்ளைக்கு என்ன வேலை கிடைத்தது? பிறகு என்ன வேலை கிடைத்தது?

4. தருமபுர மடத்தலைவருக்கு இவர் என்ன உதவி செய்தார்?

5. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடன் இவருக்கிருந்த நட்பு எத்தகையது?

6. பஞ்சகாலத்தில் இவர் மக்களுக்குச் செய்த உதவிகளைக் கூறுக.

7. வேதநாயகம் பிள்ளையின் சிறப்பியல்புகளை எழுதுக.

8. இவர் எழுதிய புகழ்பெற்ற நூல்களில் சில கூறுக.

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்தெழுதுக:—

கைவரப்பெறு, ஐயப்பாடு, பூசல்.

(2) பின்வரும் தொடர்களைச் சேர்த்து ஒரே தொடராக எழுதுக:—

(i) பிள்ளையவர்கள் தக்க பருவத்தில் பள்ளிக்குச் சென்ருர். பள்ளியில் நன்கு கற்றுத் தேர்ந்தார்.

(ii) வேதநாயகம் பிள்ளை இருபத்திரண்டாம் யாண்டை அடைந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு வேலை கிடைத்தது.

(iii) பஞ்சகாலத்தில் மக்கள் வாடி நலிந்தனர். அவர்களை வேதநாயகம் பிள்ளை காத்தார்.

(iv) முதன் முதலாக எழுதப்பெற்ற தமிழ்த் தொடர் கதை பிரதாப முதலியார் சரித்திரம். இதை மக்கள் இன்றும் படித்து இன்புறுகின்றனர்.

(3) மேலேயுள்ள தொடர்களில் உள்ள பலவகைப் பெயர்ச் சொற்களை எடுத்தெழுதுக.

(4) மேலேயுள்ள தொடர்களில் உள்ள வினைமுற்றுக்களை எடுத்தெழுதுக.

## 24. நெறிமுறை பிழையா மன்னவன்

முன்னளில் நம் தமிழ்நாடு மூவேந்தரால் ஆளப் பட்டு வந்தது. இம்மூவருள் கழகம் அமைத்துத் தமிழ் வளர்த்து முறை தவருது செங்கோல் செலுத்திய பெருமை பாண்டியரையே சாரும். இம் மரபினர் விழியைக் காக்கும் இமை போலத் தம் நாட்டின் குடிகளைக் காத்தனர். தம்மையறியாது முறை தவறின் உயிர் கொடுத்தேனும் செங்கோலை நிமிர்த்தனர்.

இம் மரபினருள் கூன்பாண்டியன் என்பான் மதுரையைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தான். ஒருநாள் இராக் காலத்தில் மாற்றுடை யணிந்து நகர மறைகாட்சிக்குச் சென்றனன். ஒரு தெருவின் வழிச் செல்கையில் ஒரு வீட்டில் ஆணும் பெண்ணும் உரையாடும் ஒலி கேட்டது. நள்ளிரவு நேரம். ஊர் முழுவதும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. ஒலி கேட்ட வீட்டின் முன் சற்றே நின்ருன் மன்னன். "தாங்கள் காசிக்குச் சென்ருல் நான் இங்கே தனியே வாழ்வது எங்ஙனம்?" என்றது பெண்குரல். அச்சம் நிறைந்த அக்குரலைக் கேட்ட மன்னன் இதற்குக் கணவன் கூறும் விடையைக் கேட்க ஆவலுற்று நன்கு மறைந்து நின்ருன். "நான் காசிக்குச் செல்வதை எண்ணிக் கவலையுருதே. நம் அரசர் ஆளுகையில் கவலைக்கு இடமேயில்லை. அவர் உன்னைப் பாதுகாப்பார். நான் சென்றுவருகிறேன்," என்று கூறித் தேற்றினுன் கணவன்.

மறைந்து நின்ற மன்னவன் அவ்வந்தணனது உறுதியான உள்ளத்தையும் தன் ஆட்சியில் அவனுக்குள்ள முழு நம்பிக்கையையும் கண்டு வியந்தான்.

எவ்வாறேனும் அவனது இல்லாளைக் காத்தல் தன் கடமை என உறுதிபூண்டு அரண்மனையை அடைந்தான்.

மறுநாட் காலையில் எழுந்து அந்தணன் காசிக்குச் செலவானன். அவன் மனைவியும் தன் கணவன் கூறியவண்ணமே அரசர் தன்னைக் காப்பார் எனக் கருதி அமைதியடைந்தாள்.

அரண்மனையேகிய மன்னவன் மறுநாட்காலையில் தன் அலுவல்களைச் செய்தவண்ணம் தான் இரவில் கண்ட வீட்டிலுள்ளோர்க்கு எவ்வாறு உதவுவது என ஆராய்ந்தான். குறிப்பிட்ட ஒரு வீட்டிற்கு உணவு, உடை வழங்கினல் குடிமக்கள் ஐயுறுவர். ஆதலின் அத்தெருவிலுள்ளோர் யாவருக்கும் பண்டக சாலையினின்றும் உணவும் உடையும் நல்கக் கட்டளையிட்டான். இராக்காலத்தில் மாற்றுடையோடு அந்தணனது வீட்டைக் காத்து வந்தான்.

சில காலம் சென்றது. காசி சென்ற அந்தணனும் மீண்டான். மனைவி மட்டிலா மகிழ்வுடன் வரவேற்றுப் பணிவிடைபுரிந்து அறுசுவை உண்டியிட்டாள். மன்னவன் அரசியல் தன்னைமட்டு மன்றித் தம் தெருவையே காப்பதைக் கணவனுக்குத் தெரிவித்தாள். அவனும் அரசனின் ஆட்சிச் சிறப்பைப் பலபடப் புகழ்ந்தான். இருவரும் இங்ஙனம் இரவு நெடுநேரம் வரை அளவளாவியவண்ண மிருந்தனர். வழக்கம் போல மன்னவன் இரவுக் காவலைக் கருதிக் கடுகி வந்தான். வீட்டினுள் ஆறு திங்கள்களாய்க் காணுத விளக்கொன்றைக் கண்டு சற்றே ஐயத்துடன் நின்

ருன். ஆண்குரலின் பேச்சொலியும் அவன் காதுகளில் விழுந்தது. "இதுவரை நாம் காத்தது வீணுயிற்றே. நம் ஆளுகையை நம்பிச் சென்றவனின் மனைவியை நாம் காக்கும் திறன் இதுவோ?" என எண்ணி அப் பொழுதே ஐயந்தீர்க்கக் கருதிக் கதவைத் தட்டினுன்.

கதவு தட்டும் ஓசை கேட்டதும் இல்லாள், "தலைவ! தாங்கள் ஊர் சென்று திரும்பும் இந் நாள் வரை யாதொரு இன்னலும் இன்றி இருந்ததே! இன்று இங்ஙனம் நேர்ந்ததே! தாங்கள் என்னைக் குறித்துத் தவருகக் கருதக்கூடுமே! என்செய்வேன்?" என அரற்றினுள். வெளியே இருந்தவண்ணம் இதைக் கேட்ட அரசன் தன் பிழையை உணர்ந்து அத்தெருவிலுள்ள எல்லா வீட்டின் கதவுகளையும் தட்டிக்கொண்டே விரைந்து சென்று மறைந்தான்.

மறுநாள் மன்னன் அவையில் இருந்தபொழுது, அத்தெருவிலுள்ளோர் யாவரும் ஒருங்கே கூடி முதல் நாளிரவு தத்தம் வீட்டுக் கதவு தட்டப்பட்டதைக் கூறினர். உடனே மன்னவன் அமைச்சரோடு கலந்தாராய்ந்து, "அவ்வாறு தட்டியவனுக்கு அறநிலை மன்றத்தார் அளிக்கவேண்டிய ஒறுப்பு யாது?" என வினவினுன்.

குற்றம் புரிந்தோன் கண்டுபிடிக்கப்படாத நிலையில் வேந்தன் இங்ஙனம் வினவியது கண்டு அறநிலை மன்றத்தார் திகைத்தனரெனினும், மன்னவன் கட்டளைக்கு விடையளித்தலே தம் கடமையாகக் கருதினர். "அங்ஙனம் செய்தோனது கையை வெட்டி வீழ்த்து

வதே அறமுறை,'' எனக் கூறினர். இதனைச் செவி மடுத்த யாவரும் திகைப்புறுமாறு மன்னவன் உடை வாளை யுருவித் தன் கையைத்தானே வெட்டி வீழ்த்தினன். பின்பு யாவருக்கும் நிகழ்ந்த செய்தியை விளங்க உரைத்தான். அவனது நீதியையும் நேர்மையையும் கண்டு மகிழ்ந்த மக்கள் உறுப்புக் குறையைக் கண்டு கலங்கினர். அவர்கள் அன்போடு செய்துதந்த பொற் கையை ஏற்று மன்னன் பொற்கைப் பாண்டியனாகப் புகழ் பெற்றான்.

## அருஞ்சொற்பொருள்

மரபு – குடி. மரபினர் – குடியில் பிறந்தவர்கள். ஊர் முழுவதும் – ஊரார் எல்லோரும். தேற்றினன் – கவலையை நீக்கினன். ஐயுறுவர் – சந்தேகப்படுவர். நல்க – கொடுக்க. மட்டிலா – அளவில்லாத. மீண்டான் – திரும்பினன். அளவளாவிய வண்ணம் – கூடிப்பேசியவாறு. கடுகி – விரைவாக. தலைவ – கணவனே! அரற்றினள் – புலம்பினள். அறநிலை மன்றத்தார்–நீதிசபையார். உறுப்புக்குறை – குறைபட்ட கை. ஒறுப்பு – தண்டனை. மறைகாட்சி – மறைந்து சென்று காணுதல். செவிமடுத்த – கேட்ட.

## வினாக்கள்

1. கூன் பாண்டியன் இராக்காலத்தில் யாது செய்வது வழக்கம்?

2. காசி செல்ல இருந்த அந்தணன் தன் மனைவியை எவ்வாறு தேற்றினன்?

3. அந்தணன் காசிக்குச் சென்றபின், அவன் மனைவிக்கு உணவு அளிப்பதற்காக அரசன் யாது செய்தான்?

4. அந்தணன் காசியிலிருந்து திரும்பிய நாளன்று இரவில் என்ன நிகழ்ந்தது?

5. மறுநாள் அரசவையில் என்ன நிகழ்ந்தது?

6. அரசனது நேர்மை எவ்வாறு விளங்கியது?

## பயிற்சி

(1) தொடர்களில் அமைத்தெழுதுக :—
மரபினர், தேற்று, ஐயுறு, நல்கு, அரற்று, மட்டிலா.

(2) பின் வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக :—

| | |
|---|---|
| முன் + நாள். | தம்மை + அறியாது. |
| குடிகளை + காத்தான். | அரண்மனை + ஏகிய. |
| பேச்சு + ஒலி. | ஐயம் + தீர்த்தான். |

(3) எச்ச வினைகளில் இருவகைகள் யாவை? இரண்டிரண்டு எடுத்துக் காட்டுக.

(4) பின்வரும் தொடர்களிலுள்ள எச்ச வினைகள் எவ்வகை யென்று எழுதுக :—

(i) என்னுடன் வந்த நண்பனை நீ அறியமாட்டாய்.

(ii) நான் வீட்டுக்குச் சென்று ஏடுகளை எடுத்து உனக்குத் தருவேன்.

(iii) பாம்பைக் கொன்ற கீரி ஓடிப்போய்விட்டது.

(vi) காசிக்குச் சென்ற அந்தணன் ஆறு திங்கள் கழித்துத் திரும்பி வந்தான்.

---

# 25. வள்ளலைக் காத்த வள்ளல்

## காட்சி 1

இடம் : தஞ்சாவூர்.

உறுப்பினர் : சோழசிங்கன், மாலடியான், வடிவேலன் ஆகியோர்.

நேரம் : காலை.

[காவிரியாற்றுப் படுகையில் மூவரும் கூடுகிறார்கள்.]

சோழசிங்கன் : என்ன, மாலடியா! நீ என்ன முடிவு செய்திருக்கிறாய்?

மாலடியான் : என் முடிவு இருக்கட்டும். நம் நண்பன் வடிவேலனைக் கேட்கவில்லையா?

**வடிவேலன் :** உங்கள் பேச்சு எனக்கு விளங்க வில்லையே! என்னவென்று அறியலாமா?

**சோழசிங்கன் :** அப்படியா! திருவிடை மருதூரில் மருதப்பர் என்னும் தண்டமிழ்ப் புலவர் இருக்கிருர். அவர் கற்றுத் தேர்ந்தவர்; ஐவகை இலக்கணங்களைப் பாடங்கேட்க வேண்டுமென்ருல் அவரிடந்தான் செல்ல வேண்டும். அவ்வரிய புலவரின் இல்லத்தில் தங்கி இனிய தமிழ் கற்க வேண்டி நான் புறப்படுகிறேன்.

**வடிவேலன் :** நல்லது. ஆனல் உணவுக்கும் உறையுளுக்கும் நாம் எங்கே போவது? எனக்கு உறவினர் யாரும் அங்கில்லையே!

**மாலடியான் :** எங்களுக்கு மட்டும் உற்ருரும் உறவினரும் இருக்கிருர்களா?

**சோழசிங்கன் :** இருக்க இடமும், உண்ண உணவும் பெற நாம் புலவர் பெருமானின் விருந்தினர்களாகி விடலாமே!

**வடிவேலன் :** புலவர் அறிவை வாரி வழங்கும் வள்ளலாக இருப்பார். ஆனல்......

**மாலடியான் :** மருதப்பர் உயர்ந்த கல்வி கற்பிப்பதோடு நயந்து உணவும் கொடுத்துக் காக்கும் வள்ளல்தான். ஏனெனில் வீரசோழன் ஆற்றுப் படுகை நிலங்களில் பல இவருக்குரியவை.

**சோழசிங்கன் :** ஆகவேதான் 'புலவரின் இல்லத்தில் தங்கி' என்று நான் முதலிலேயே கூறினேன்.

மாலடியான் : சோழசிங்கா ! நானும் உன்னுடன் புறப்படுகிறேன். வடிவேலனும் புறப்படுவான் என்று நம்புகிறேன்.

வடிவேலன் : நானும் உடன்படுகிறேன்.

மாலடியான் : அதோ ! நம் நண்பர்கள் இன்னும் சிலர் வருகிருர்களே ! அவர்களும் தண்டமிழார்வம் மிக்கவர்கள். அழைக்கலாமே !

[பத்துக்கும் மேற்பட்ட சிலர் இம்மூவரோடு சேர்கின்றனர்.]

சோழசிங்கன் : நண்பர்களே ! நாங்கள் மூவரும் திருவிடை மருதூருக்குப் போய், மாணப் பெரும் தமிழ்ப் புலவர், மருதப்பரிடம் ஐவகை இலக்கணங்களையும் ஐயந் திரிபறக் கற்கப் போகிருேம். உணவு, உறையுள் இவற்றின் கவலையின்றிக் கற்கலாம்.

நண்பர்கள் : அப்படியா ! நாளையே புறப்பட நாங்கள் ஆயத்தமாகிருேம்.

[எல்லோரும் செல்கிருர்கள்.]

## காட்சி 2

இடம் : திருவிடை மருதூர்.

உறுப்பினர் : மருதப்பர், மற்ற மாணவர்கள், சோழசிங்கன், மாலடியான், வடிவேலன் ஆகியோர்.

நேரம் : மாலை.

[தமிழ் இலக்கணம் கற்பித்துவிட்டு மருதப்பர் அமர்ந்திருக்கிருர்.]

வடிவேலன் : பெருந்தகையீர் ! நாங்கள் யாவரும் தங்களிடம் பாடங்கேட்க இங்கு வந்து, இன்ருேடு

திங்கள்கள் ஆறு கடந்துவிட்டன. ஆனுல் இரு வகை இலக்கணங்களைத்தான் முடித்திருக்கிறோம். எஞ்சிய மூவகை இலக்கணங்கள் முடிய இன்னும் ஒன்பது திங்கள்கள் ஆகிவிட்டால், என் செய்வது?

**மருதப்பர் :** வடிவேலன் சொல்வதை என்னுல் விளங்கிக்கொள்ள முடியவில்லையே!

**வடிவேலன் :** அதாவது எங்கள் இருபது பேருக்கும் உணவளித்துவர இனித் தங்களால் இயலுமா என ஐயுற்றேன்.

**சோழசிங்கன் :** (சிரித்துக்கொண்டே) வடிவேலனே! அள்ள அள்ள வருவது கல்வி; எடுக்க எடுக்கக் குறைவது பொருள் என்று சொல்கிருயோ!

**மாலடியான் :** அப்படிக் குறைவதற்கு வீரசோழன் ஆறு வற்றிவிட்டதா? இல்லையே!

**மருதப்பர் :** ஆம். மாலடியான் கூற்று மெய்யானதே. வற்ருத உணவும் என்னிடத்தில் உண்டு; சிறிது கல்விச் செல்வமும் உண்டு. உணவை என் இரு கைகளால் அள்ளி வழங்கக் காத்திருக்கிறேன். என் ஒரு வாயால் உயிருள்ளவரை கன்னித் தமிழைக் கற்பிக்கிறேன்.

**சோழசிங்கன் :** வடிவேலன் விரைவுற்று ஏதேதோ சொல்லிவிட்டான். புலவரவர்களே! நாங்கள் சென்று வருகிருேம்.

[யாவரும் கலேகின்றனர்.]

## காட்சி 3

இடம்: மருதப்பரின் இல்லம்.

உறுப்பினர்: மருதப்பர், அவர் மனைவி.

நேரம்: இரவு.

[மருதப்பர் உண்டபின் கட்டிலில் அமர்ந்திருக்கிருர். மனைவியும் உடன் உள்ளார்.]

மனைவி: மாணவர்கள் தங்களிடம் தமிழ் கற்க இங்கு வந்து இன்ருேடு ஓராண்டு முடிந்துவிட்டது.

மருதப்பர்: இருக்கட்டுமே. அதற்கென்ன?

மனைவி: மாணவர்களின் முகம்கோணுது உணவளித்த தால் வருவாய்க்கும் மேற்பட்டுப் பொருள் செலவாகிவிட்டது.

மருதப்பர்: என் தந்தையாரும், பாட்டனும் நான் தமிழைக் கற்பிக்கவேண்டும் என்றே இப்பொருட்களைத் தேடி என்னிடம் ஒப்படைத்திருக்கிருர்கள்.

மனைவி: இருக்கலாம். ஆனல் அப்பொருள்கள் யாவும் தீர்ந்துபோய் இப்போது மிக்க கடன்களே ஏற்பட்டிருக்கின்றன.

மருதப்பர்: அக்கடன்களை, வீரசோழன் ஆற்று வெள்ளத்தால் விளையும் நெல்லாகக் கொடுத்து விடலாம்.

மனைவி: அந்த நிலங்களும் இப்போது நம்மிடம் இல்லை. கடன் கொடுத்தவர்களுக் குரியவையாகி விட்டன.

மருதப்பர்: அப்படியா! இனி இம்மாணவர்களுக்கு எவ்வாறு உணவளித்துக் கல்வி கற்பிப்பேன்?

மனைவி: அதற்குத்தான் தங்களிடம் அரிய ஒன்றை நினைவுகூர வந்தேன்.

மருதப்பர்: என்ன அது?

மனைவி: சோழவள நாட்டில் அரசுபுரியும் பல சிற்றரசர்களில் ஒருவரான இளம் பல்லவராயரைத் தாங்கள் காணவேண்டும். அவர் புலமையைப் போற்றும் புரவலர்; பாவலரைக் காக்கும் காவலர்!

மருதப்பர்: ஆ! இளம்பல்லவராயர்! சரியான நேரத்தில் கூறினாய்! இதோ புறப்படுகிறேன். தமிழ் காக்கத் துணைபுரியும் தக்கதோர் வள்ளல்.

[செல்கிறார்.]

## காட்சி 4

இடம்: திருபுவனம்—அரண்மனை வாயில்.

உறுப்பினர்: மருதப்பர்—வாயிற்காப்போன், வழிப் போக்கர்.

நேரம்: காலை.

மருதப்பர்: வாயிற் காவலனே! திருவிடை மருதூரிலிருந்து கவிராயன் ஒருவன் வந்துள்ளேன் என்பதை அறிவிப்பாய்!

வாயிற்காப்போன்: என்ன கவிராயரா! (ஏளனமாய்) சரிதான்! வீதி வழியே பாடிக்கொண்டு இரந்துண்ணும் கூட்டத்தைச் சேர்ந்தவரா? அரண்மனையில் ஏது உமக்கு இடம்? நிற்கவேண்டாம் இங்கே! நெடுவழியே போகலாம்!

மருதப்பர்: என்ன சொன்னாய்! நாவடக்கம் அற்றவனே! நயமொழி அறியாத பேதையே! தமிழின் பெருமை தெரியாத அறிவிலியே! கவிராயன் என்றால் புவியாளும் மன்னனும் போற்றும் பெருமை பெற்றவன்! நல்லதோர் இடத்தில் உன்னை வைத்தாலும், உடன்பிறந்த உன் புல்லறிவினால் பிதற்றுகிறாய்! புன்சொல்லும், வன்மொழியும் கூறுவது மிக எளிது; ஆனால் இன்சொற்கூறி மகிழ்விப்பது மிகக் கடிது. இதையேனும் அறிந்துகொள்.

வாயிற்காப்போன்: போம் ஐயா, போம்! வந்த வழி இதுதான்!

[மருதப்பர் முகவாட்டத்தோடு திரும்புகிறார்; வழிப்போக்கர் எதிர்ப்படுகிறார்.]

வழிப்போக்கர்: ஐயா! அக் காவலாளியின் கொடுஞ்சொற்களுக்காக என்னை மன்னியுங்கள். அதற்காக நான் மிக வருந்துகிறேன்.

மருதப்பர்: என்ன! தங்களையா? எதற்கு? என்ன செய்வது? உலகில் தீமை மிகுந்துவிட்டது; தீயோர் மலிந்துவிட்டனர்.

வழிப்போக்கர்: அப்படியன்று! காவலாளி கூறிய கடுமொழிகளையே கொண்டு உலகமே தீயதெனலாகாது. திருவிடை மருதூரில் வாழும் மருதப்பரைப் போன்ற அருந்தமிழ் ஆன்றோரும், சான்றோரும் இன்றும் வாழ்கிறார்கள். அதிருக்கட்டும். தாங்கள் யார்?

மருதப்பர்: நானா? ஓர் எளியன். என் உடைமைகளை எல்லாம் அறத்தின் வழியே செலவு செய்து

கடனாளியாகிவிட்டேன். ஆதலால், அரசரைக் கண்டு நலம்பெற எண்ணி வந்தேன். தாங்கள் யாரோ?

வழிப்போக்கர்: ஒரு வழிப்போக்கன், நான். தங்களைப் பற்றிக் கூறத் தாங்கள் தயங்குகிறீர்கள். அரசரைத் தாங்கள் காணவேண்டுமானல் இவ்வூர்க் கோவிலில் இரவில் காணலாம்.

மருதப்பர்: நன்றி. அப்படியே செய்கிறேன்.

[இருவரும் கலைகின்றனர்.]

## காட்சி 5

இடம்: திருபுவனக் கோவில்.

உறுப்பினர்: அரசர் இளம் பல்லவராயர், மருதப்பர்.

நேரம்: இரவு.

[கோவிலில் இறைவனை அரசர் வழிபட்டுக் கொண்டிருக்கிருர்.]

இளம் பல்லவராயர்:

“ தலையில் இரந்துண்பான் தன்னுடலிற் பாதி
மலைமகளுக் கீந்து மகிழ்வான்—உலையில் ”

... ... ... ...

(தமக்குள்) என்ன? இன்று வெண்பாவின் அடுத்த அடியைப் பாட முடியவில்லையே.

[மறுமுறை இரண்டடிகளையும் அரசர் சொல்கிருர்: மருதப்பர் கேட்டுக்கொண்டே நுழைகிருர்.]

மருதப்பர்:

“ இருப்பு வண்ண மேனியனுர் என்ருலோ”...

இளம் பல்லவராயர்: “ திருப்புவன நாதர் திறம் ”— தாங்கள் யார்? தக்க நேரத்தில் இறைவனுக்

குரிய வெண்பாவில் அடி தொடுத்துக் கொடுத் தீர்களே !

மருதப்பர் : திருவிடை மருதூரில் வாழும் ஒரு வறிய புலவன்.

இளம் பல்லவராயர் : அப்படியா ? இறை வழிபாட் டுக்குப்பின் தாங்களும் இன்று எம்மோடு உணவு கொள்ள வேண்டுகிறேன்.

மருதப்பர் : அரசர் ஆணை.

[யாவரும் செல்கின்றனர்.]

## காட்சி 6

இடம் : அரண்மனை உணவருந்துமிடம்.

உறுப்பினர் : இளம் பல்லவராயர், மருதப்பர், அரசி.

நேரம் : இரவு.

[அரசியார் உணவு படைக்கின்றார்.]

இளம் பல்லவராயர் : தாங்கள் மிகக் களைத்திருக்கிறீர் கள். பதறாமல் கூச்சமின்றி உணவருந்த வேண்டு கிறேன்.

மருதப்பர் : அரசரின் இனிய மொழிகளால் என் செவி நிறைந்ததுபோலவே என் வயிறும் நிறைந்து விட்டது.

இளம் பல்லவராயர் : கற்றோர்க்குரிய அடக்கமும், ஆழ்ந்த புலமையும் என்போன்றவர்களை மிக மகிழ்விக்கின்றன.

[உணவு முடிகிறது.]

இளம்பல்லவராயர் : தாங்கள் களைப்பு நீங்கக் கண் ணயருங்கள். காலையில் அளவளாவலாம்.

[மருதப்பர் கட்டிலில் படுக்கிறார்.]

மருதப்பர் : (தமக்குள்) மாலையில் நான் பார்த்த வழிப் போக்கரின் குரலைப்போலவே அரசரின் குரலும் இருக்கிறதே. அரசரே வழிப்போக்கரின் புனைவில் வந்தாரோ ? இருக்கலாம்.

[பின்பு அயர்ந்து உறங்குகிருர்.]

## காட்சி 7

இடம் : அரண்மனை-அரசரின் நூலகம்.

உறுப்பினர் : அரசர், மருதப்பர்.

நேரம் : பகல்.

[இளம் பல்லவராயர் தம ஐயப்பாடுகளை யெல்லாம் மருதப்பரிடம் கேட்டு அறிந்து கொள்கிருர்.]

இளம் பல்லவராயர் : முதன் முதலில் நாமிருவரும் கோயிலில்தானே கண்டோம் ?

மருதப்பர் : (தமக்குள்) வழிப்போக்கராக வந்தவர் இவராளுல், மாற்றுப்புனைவு தம்மைச் சரியாக மறைத்ததா என்ற ஐயப்பாட்டைப் போக்கவே இவ்வாறு கேட்கிருர்போலும். (அரசரிடம்) தங் களை இந்தக் கோலத்தில் நான் வேறெங்கும் பார்க்கவில்லையே !

இளம் பல்லவராயர் : அப்படியாளுல் மாற்றுப் புனை வில் பார்த்தீர்களோ ?

[மருதப்பர் மறுமொழி கூருமல் தயங்குகிருர்.]

இளம் பல்லவராயர் : புலவரே ! எவ்வாறு மறு மொழி கூறலாம் என்று எண்ண வேண்டாம். தங்களைப் பற்றியும் தங்கள் தமிழ்த் தொண்டு களைப் பற்றியும் பலமுறை கேள்வியுற்றிருக் கிறேன். நேற்றுத்தான் தங்களைக் கண்டேன்;

மிக மகிழ்ந்தேன். என் அரசுக்குரிய பகுதியில் தாங்கள் வாழ்வது எனக்குப் பெருமை தருகிறது. தங்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம். தங்களுக்குக் கடன்கள் இருப்பதை நானறிவேன். கடன்களுக்காக ஈடுசெய்யப்பட்ட நிலங்களையெல்லாம் மீட்டுத் தங்களிடமே கொடுக்கிறேன். தமிழ்மொழிக்குத் தாங்கள் காலமெல்லாம் அருந்தொண்டு செய்ய வேண்டும் என்பது என் பேரவா!

மருதப்பர்: அரசே! நீவிர் பல்லாண்டு வாழ்க!

## அருஞ்சொற்பொருள்

புல்லறிவு – சிறுமையான அறிவு. புரவலர் - பாதுகாப்பவர். உறையுள் - வீடு. ஐவகை இலக்கணம் = எழுத்து, சொல், பொருள், யாப்பு. அணி. இருப்புவண்ணம் - இரும்பின் நிறம். மாற்றுப்புனைவு - மாறுவேடம்.

## வினாக்கள்

1. சோழசிங்கன் முதலாயினர் மருதப்பர் இல்லத்துக்கு வந்த வரலாற்றைக் கூறுக.

2. மாணவர்கள் பாடங்கள் விரைவிலே முடியவில்லை என்று ஆசிரியரிடம் தெரிவித்துக் கொண்டது ஏன்?

3. மருதப்பர் மனைவியார் எதனை நினைவுறுத்தினர்?

4. இளம் பல்லவராயரின் அரண்மனை வாயிலில் மருதப்பருக்குக் கிடைத்த வரவேற்பு எத்தகையது?

5. மருதப்பரை அரசர் விருந்துக்கு அழைத்ததேன்?

6. மருதப்பரது விருப்பம் எவ்வாறு நிறைவேறியது?

## பயிற்சி

இந்த நாடகத்தை நடித்துப் பழகுங்கள்.

# செய்யுட் பகுதி

## I வாழ்த்து

*பொன்னர் மேனியனே!
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னர் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை அணிந்தவனே!
மன்னே! மாமணியே!
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே உன்னையல்லால்,
இனியாரை நினைக்கேனே! 1

—தேவாரம்

கீதம் இனிய குயிலே!
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின்
பாதாளம் ஏழினுக்(கு) அப்பால்;
சோதி மணிமுடி சொல்லின்
சொல் இறந்துநின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லான்
அந்தமி லான்வரக் கூவாய். 2

—திருவாசகம்

*தூணய் அதனூ(டு) அரியாய் வந்துதோன்றிப்
பேண அவுணன் உடலம் பிளந்திட்டாய்!
சேணர் திருவேங் கடமா மலைமேய
கோணகணையாய்! குறிக்கொள் எனையே! 3

—திவ்யப்பிரபந்தம்

*சீரிய உலகம் மூன்றும்
செய்தளித்து அழிப்ப வல்லாய் !
நேரிய எதிர் ஒப்பின்றி
நீத்தவோர் கடவுள் தூய
வேரிய கமல பாதம்
வினையறப் பணிந்து போற்றி
ஆரிய வளன்தன் காதை
அறமுதல் விளங்கச் சொல்வாம். 4

—தேம்பாவணி

*சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடர்இன்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே. 5

—சீறுப்புராணம்

## குறிப்புரை

வாழ்த்துச் செய்யுட்களாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளவை வெவ்வேறு சமயப் பெரியார்கள் கடவுளின்மீது வழிபாட்டுப் பாடல்களாக இயற்றியவையாகும்.

1. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் சிவபெருமானை வழிபட்டுப் பாடிய செய்யுட்களின் தொகுதிக்குத் தேவாரம் என்று பெயர். இங்குக் கொடுக்கப்பட்டுள்ள செய்யுள் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருமழபாடியில் கோயில்கொண்டுள்ள சிவபெருமான்மீது பாடப்பெற்றது.

அரைக்கு அசைத்து - இடுப்பில் அணிந்து. மின் ஆர் - ஒளிபொருந்திய. மிளிர் கொன்றை—விளங்குகின்ற கொன்றை மலரை. மன்னே ! - அரசே ! மழபாடி - ஒரு சிவத்தலம். மழபாடியுள் மாணிக்கம் - திருமழபாடித் தலத்தில் கோயில் கொண்டுள்ள விலையுயர்ந்த மாணிக்கம் போன்றவன்.

2. மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமான்மீது பாடிய பாடல்களின் தொகுதிக்குத் திருவாசகம் என்பது பெயர். திருவாசகப் பாடல்கள் அருட் சுவை நிரம்பி உளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை. கடவுளைக் கூவித் தம்மிடம் வரச் செய்யுமாறு குயிலை வேண்டிக்கொள்வதாக இச் செய்யுள் அமைந்துள்ளது.

கீதம் இனிய குயில் – இனிய பாடல்களை இசைக்கும் குயில். வினவின் – கேட்பாயாகில். பாதாளம் ஏழு-கீழேழு உலகங்கள். சோதி மணி முடி - ஒளிமயமான மணிகள் பதித்த முடிசூடிய தலை. சொல் இறந்து - சொல்லைக் கடந்து; சொற்களால் கூறமுடியாதபடி. தொன்மை – பழமையான இடம். அந்தமிலான் – முடிவு இல்லாதவன்.

3. திருமால் பத்தியிற் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்கள் இயற்றிய பிரபந்தங்களின் தொகுதிக்கு நாலாயிர திவ்யப்பிரபந்தம் என்பது பெயர். இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது திருமங்கையாழ்வார். திருவேங்கடமலை என்ற திருப்பதியில் கோயில்கொண்டுள்ள திருமாலைப் பாடியதாகும்.

அரி—சிங்கம்; திருமால் நரசிங்க உருவில் தோன்றிய அவதாரம். பேணு அவுணன்-மதியாத அரக்கன்; இரணியன். உடலம் – உடல். சேண் ஆர் – உயரம் மிகுந்த. மேய - பொருந்தி வாழ்கின்ற. கோள் நாகம் அணையாய் – வலிமையுடைய ஆதிசேடனென்ற பாம்புப் படுக்கையுடையவனே ! எனை குறிக்கொள் – எனக்கு அருள் செய்வாயாக.

4. தேம்பாவணி என்ற நூல் ஏசு கிறித்துநாதரின் வரலாற்றையும் கோட்பாடுகளையும் கூறும் பெருங்காப்பியம். வீரமாமுனிவர் என்ற புனை பெயருடன் தமிழ் நாட்டில் வாழ்ந்த இத்தாலி நாட்டுக் கிறித்தவப் பாதிரியார் ஜோஸப் பெஸ்கி

அவர்களால் இயற்றப்பெற்றது. இச் செய்யுள் தேம்பாவணி யின் வாழ்த்துச் செய்யுளாகும்.

செய்து - படைத்து; உண்டாக்கி. அளித்து – காத்து. அழிப்ப – அழிக்க. நேரியஎதிர் ஒப்புஇன்றி - நேர் எதிராக வைக்கத்தக்க ஒப்புமை இல்லாத. நீத்த ஓர் கடவுள் - (எல்லாவற்றையும்) கடந்து நிற்கும் கடவுள். வேரிய – நறு மணமுள்ள. வினை அற-(எமது) தீவினை அற்றுப்போகுமாறு போற்றி-தொழுது. ஆரியவளன் – ஏசு நாதருடைய தந்தை யான சூசையப்பர். காதை-வரலாறு. அறமுதல் விளங்க - அறத்தின் அடிப்படை நன்கு விளங்குமாறு.

5. முகம்மது நபிகளின் வாழ்க்கை வரலாற்றை அழகுற எடுத்துரைக்கும் காப்பியம் சீருப்புராணம். இதனை இயற்றிய வர் எட்டையபுரம் சமீனில் அவைப் புலவராயிருந்த உமறுப் புலவர் ஆவார்.

மெய்ப்பொருளை - உண்மைப் பொருளாகிய கடவுளை. துறந்தவர் இதய ஆசனத்து இருந்தவன்-உலகப் பற்றினை விட்ட துறவிகளின் உளமாகிற இருக்கையில் உள்ளவன்; கட வுள். தொடர் இன்ப துன்பம் அற்றவன் – கடவுள்; கடவுளுக்கு இன்பமும் துன்பமும் இல்லை. பிறப்பிறப் பென்றிலாதவன் – பிறப்பு என்றும் இறப்பு என்றும் இல்லாதவன்; கடவுள். சுவர்க்கப் பதி-வீட்டுலகம். மதி – அறிவு. கடவுளை மறந்தவர் அறிவற்றவர் என்பது கருத்து.

---

# II நீதிப் பகுதி

## 1. நீதிநெறி விளக்கம்

### கல்வியே உயிர்க்குத் துணை

*அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்(கு) உற்ற துணை. 1

### தம்மினும் கற்றவரிடம் அடங்கி நடத்தல்

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரி(து) என்று அகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்(து)அழிக கற்ற(து) எலாம்
எற்றே இவர்க்குநாம் என்று. 2

### மேலோர் பண்பு

கண்ணோக்(கு) அரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையார் அன்றே
சலியாத கற்ப தரு. 3

### கருமங் கண்ணுதல்

*மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார். 4

## ஈகை இன்மை

வள்ளன்மை யில்லாதான்செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான். 5

—குமரகுருபர சுவாமிகள்

## குறிப்புரை

குமரகுருபர சுவாமிகள் சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தவர். பிறவியில் ஊமையாயிருந்த இவர், திருச்செந்தூர் முருகப் பெருமானின் அருளினுல் ஊமைத் தன்மை நீங்கப் பெற்றுப் பல சிறந்த பத்திப்பிரபந்தங்கள் பாடினுர். அவர் இயற்றிய நீதிநெறி விளக்கம் என்ற இந்நூல், எல்லோரும் மேற்கொள்ளவேண்டிய நீதிகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது.

1. பயக்கும் - கொடுக்கும். புறம் கடை - தலைவாயில். இசை - புகழ். உறும் கவல் – வந்து சேரும் கவலை. உற்றுழி – வந்த இடத்து. கைகொடுக்கும் - உதவி செய்யும். ஊங்கு இல்லை - மேலானது இல்லை. சிற்றுயிர் – குறைந்த வாழ்நாட்களை உடைய உயிர்கள்; மக்கள். சிற்றுயிர்க்குக் கல்வியைக் காட்டிலும் மேலான துணை இல்லை என்பது பொருள்.

2. மெலியார் – எளியவர்; ஏழைகள். உடைமை – செல்வம். அம்மா! - வியப்புக் குறிப்பு. கருத்து அழிக – மனம் வருந்துக. எற்றே – எவ்வளவாகும்? தம்மினும் கற்றுரை நோக்கி, "நாம் கற்றதெல்லாம் இவர்க்கு எற்றே!" என்று கருத்து அழிக, என்று கூட்டிப் பொருள் உரைக்கவும்.

3. நோக்கு – பார்வை. நாள்மலர் - அன்று மலர்ந்த பூ. வாய்மை – உண்மை. தீம் – இனிய. பலம் - பழம். பண்பு – தன்மை. சலியாத – கொடுப்பதில் பின்வாங்காத. கற்பதரு - கற்பக மரம். கற்பக மரம் தேவருலகத்துள்ளதென்றும், ஒருவர் அதன் கீழிருந்து என்ன விரும்பினும் பெறுவர்

என்றும் புராணம் கூறும். மேற்கூறிய நற்பண்புடையவர் கற்பக மரம் போன்றவர் என்பது பொருள்.

4. மெய்வருத்தம் – உடலுக்கு ஏற்படும் துன்பம். பாரார் - கருதமாட்டார். துஞ்சார் – உறங்கமாட்டார். எவ்வெவர் - எவர் எவர். செவ்வி - காலம். அவமதிப்பும் கொள்ளார்–அவமானத்தையும் உளத்தால் நினைக்கமாட்டார். கருமமே கண்ணுயினர் - செயலிலேயே கவனத்துடனிருப்பவர். கருமமே கண்ணுயினர் இவற்றையெல்லாம் கருதமாட்டார் எனப் பொருளுரைக்க.

5. வள்ளன்மை – கொடுக்கும் பண்பு. மற்றையோன் - வள்ளன்மை உடையவன். நல்குரவு - வறுமை. நனி நல்ல – மிக நல்லது. கொன்னே – வீணுக. கண்ணறையன் – இரக்கமில்லாதவன். வறியவனிடம் செல்வமில்லாமையால் அவனிடம் கொடைப்பண்பில்லை என்று யாரும் இகழமாட்டார்கள். ஆனல் செல்வமிருந்து கொடைப்பண்பில்லாதவனைப் பலரும் இகழ்வார்கள். ஆகையால் பின்னவன் செல்வத்தைக் காட்டிலும் முன்னவன் வறுமையே மிக நல்லது.

## 2. நன்னெறி

*பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேரும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 1

* உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. 2

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவல்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்!
மொழியிலார்க் கேது முதுநூற் றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. 3

*கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவை நா விற்கு
விளைக்கு வலியனதா மென்று 4

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு. 5

—துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

## குறிப்புரை

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப் பெற்ற இந்த நீதிநூல் சிறந்த நீதிகளைத் தெளிவாகத் தொகுத்துக் கூறுகிறது.

1. 'பிறர்க்கு உதவி செய்யாக் கருங்கடல் நீர்' என்றது, கடல்நீர் குடிப்பதற்குத் தகுதியற்றிருப்பதால். புயல் – மேகம். முகந்து – மொண்டு. பெய்யா - பெய்து. மேகமானது கடல் நீரை முகந்து மழையாகப் பெய்து புகழ்பெற்றுவிடுகிறது. அதேபோல், பிறர்க்கு உதவி செய்யாதவருடைய பெருஞ் செல்வம், உதவி செய்யும் பிறரை அடைந்து, பின்னோருக்குப் புகழ் கொடுக்கும் பேருகிவிடுகிறது.

2. உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் - மனத்தைத் தன் வயப்படுத்திக் கொண்டு மேன்மேலும் மிகுகின்ற வெகுளி. சினம் காத்துக் கொள்ளும் குணம் - சினத்தைத் தடுத்து அடக்கும் பண்பு. தடம் கரை – குளத்தின் கரை. பேர்த்துவிடுதல் – உடைத்து (நீரை) வெளியேறவிடுதல். விளம்பு – கூறுவாயாக.

3. அன்பு இல்லானுக்கு என்று மாற்றிப் பொருள் உரைக்க. ஏவல் - ஏவலாட்கள். என் செய்யும் – என்ன பயன் ஏற்படும்? ஒரு பயனுமில்லை. நல்லாய்! - நற்பண்புடைய வளே! (மகடூஉ முன்னிலை). மொழியிலார் – ஊமைகள். முது

நூல் - பழைய சிறந்த நூல். ஊமைகளுக்குச் சிறந்த நூலி ஞலும் பயனில்லை. தெரியும் விழி – கண். விழியிலார் – குருடர். குருடர்க்கு விளக்கினல் பயனில்லை.

4. கைம்மாறு - செய்தவர்க்குச் செய்யும் நன்மை; உக வாமல் – விரும்பாமல். எயிறு - பற்கள். நா – நாக்கு. வலியன - வலிமையான (உணவுப்) பொருள்கள். மென்று - கடித்து மென்மையாக்கி. அம்மா! - வியப்புக் குறிப்பு. முதிர் சுவை விளைக்கும் - மிகுந்த சுவையை உண்டாக்கும்.

5. கொடும் கூற்றம் – கொடிய யமன். கொல்வான் - கொல்ல. குறுகுதன் முன் - நெருங்கி வருமுன்பே. அணை கோலிவையார் – கரையைக் கட்டி வைக்காதவர்கள். உள்ளம் கனிந்து – மனம் இளகி. உய்க – வீடு பெறுங்கள். பெருகு தற்கண் - வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும்பொழுது. என் செய் வார் – யாது செய்யமுடியும்? ஏதும் செய்ய முடியாதென்பது கருத்து. பேசு – சொல்வாயாக.

## 3. திருக்குறள்

* அறத்தி னூஉங்(கு) ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 1

* மகன் தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்ருன் கொல்என்னும் சொல். 2

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று. 3

* நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 4

* ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 5

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. 6

* தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 7

* ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 8

நல்லா(று) எனினும் கொளல்தீது மேல்உலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 9

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 10

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 11

* கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 12

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 13

* அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 14

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 15

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. 16

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 17

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 18

* உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 19

* உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்(று) எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 20

—திருவள்ளுவர்

## குறிப்புரை

சங்ககாலத்துப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்ருகக் கருதப்படும் திருக்குறள் தலைசிறந்த நீதிநூல்; இது உலகப் பெரு நூல்களில் ஒன்ருகும். இதனை இயற்றிய திருவள்ளுவர் 1800 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்திருந்தார். இவரது வாழ்க்கை வரலாறு பற்றி உறுதியாக ஏதும் கூறமுடியவில்லை.

1. ஊங்கு – மேலான. ஆக்கம் – உயர்வு.

2. ஆற்றும் – செய்யும். என்நோற்ருன்கொல் - என்ன தவம் செய்தானே.

3. புறத்ததா–வீட்டுக்கு வெளியிலிருக்க. சாவாமருந்து – சாவினின்றும் நீக்கும் மருந்து.

4. நன்றி - பிறர் செய்த உதவி. நன்று அல்லது – தீமையை.

5. விழுப்பம்–மேன்மை. ஓம்பப்படும் – பாதுகாக்கப்படும்.

6. ஏதிலார் – அயலார். காண்கிற்பின் – ஆராய்ந்தறிந்தால். மன்னும் – நிலைபெறும்.

7. பயத்தலால் - உண்டாக்குவதால்.

8. ஊருணி – குளம். உலகு – உயர்பண்புடையோர். அவாம் – விரும்புகின்ற. திரு – செல்வம்

9. நல்லாறு – நல்ல வழி. கொளல் – இரத்தல்.

10. சினம்காக்க - வெகுளி வராமல் தடுத்துக் கொள்க.

11. ஈனும் – தருகின்ற. இன்ன செய்யாமை - தீங்கு செய்யாதிருத்தல். மாசு - குற்றம். கோள் – கொள்கை.

12. கசடு - குற்றம். கற்பவை – கற்கத்தகுந்த நூல்கள்.

13. எண் - கணிதம். என்ப - என்று கூறப்படுவன. எழுத்து - இலக்கண இலக்கியங்கள். கண் என்ப – கண்கள் என்று கூறுவர்.

14. என் உடையரேனும் – எவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும். இலர் – வறியர்.

15. எரி – தீ. வை தூறு – வைக்கோல் போர்.

16. திரிந்து அற்று ஆகும் - மாறுபட்டு அத்தன்மையை அடையும்.

17. கரவா(து) – மறையாமல். கரைந்து - கூவி. நீரார்க்கே – தன்மை உடையவர்களுக்கே.

18. திருவினை – செல்வத்தை. முயற்று இன்மை – முயற்சி இல்லாமை. இன்மை - வறுமை.

19. உடுக்கை – ஆடை. இடுக்கண் - துன்பம்.

20. வாழ்வார் – சிறப்பாக வாழ்பவர். தொழுது-வணங்கி.

## 4. நான்மணிக் கடிகை

* இன்னுமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசை நடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 1

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கண் கூடி விடின். 2

திருவின் திறலுடைய தில்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையின் இன்னாத தில்லையில் லென்னாத
வன்மையின் வன்பாட்ட தில். 3

கண்டதே செய்பவாங் கம்மியர் உண்டெனக்
கேட்டதே செய்ப புலனுள்வார்—வேட்ட
இனியவே செய்ப அமைந்தார் முனியாதார்
முன்னியவே செய்யுந் திரு. 4

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கும் எவ்வூரு மூர். 5

—விளம்பி நாகனார்

## குறிப்புரை

நான்மணிக் கடிகை என்பது கடைச் சங்ககாலத்து இயற்றப்பட்ட பதினெட்டுக் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இந்த நூலின் செய்யுள் ஒவ்வொன்றிலும் நான்கு நீதிகள் அமைந்துள்ளன. நந்நான்கு மணிகளாகக் கோத்துச் செய்த ஓர் அணிகலன் போல இந்நூல் அமைந்திருப்பதால் இதற்கு நான்மணிக் கடிகை என்ற பெயர் பொருந்துவதாயிற்று.

இதனை இயற்றிய புலவரான விளம்பி நாகனார் கடைச் சங்க காலத்தைச் சேர்ந்தவர்.

1. இன்னாமை - இழிவு. வேண்டின் - விரும்பினால். இரவு எழுக - இரத்தலை மேற்கொள்க. மன்னுதல் – எக்காலத்தும் நிலைபெறுதல். தன்னொடு செல்வது - தன்னுடன் (இறந்தபின்) துணையாகச் செல்லும் பொருள். அறம் ஒன்றே இறந்தபின் துணையாக நிற்கும். வெல்வது - (பிறரை) வெல்லுதல். வெகுளி விடல் - சினத்தை விட்டுவிடுக. சினத்தை விட்டவர் எவரையும் தம்பாற்படுத்த வல்லவர் என்பது பொருள்.

2. மொய் – வலிமை. சிதைக்கும் - ஒழிக்கும்; கேடுறச் செய்யும். பொய் – பொய்யொழுக்கம். பெய்த கலம் – நிரப்பி வைத்த பாண்டம், பாண்டத்தில் கசடிருந்தால், பால் கெட்டு விடும் என்பது கருத்து. கூடார்கண் – சேரத் தகாதவரிடத்து. கூடிவிடின் – நட்புக்கொண்டால்.

3. திருவின் – செல்வத்தைப்போல். திறல் – வலிமை. வாய்த்த – தக்க வேளையில் பயன்படுவன. எற்றுள்ளும் – எதனுள்ளும். இன்மை – வறுமை. இன்னாதது – துன்பமுடையது.

இல் என்னுதவன்மை - (இரப்பவர்க்கு) இல்லை என்று கூருத உள்ள உறுதி. வன்பாட்டது - திட்பமானது.

4. கம்மியர் – கம்மாளர்; கலைத்திறமை பொருந்திய தொழில் செய்பவர். செய்ப - செய்பவர். உண்டு எனக் கேட்டது – பயனுண்டு எனக் கேள்வியால் தெளிந்த செயல். புலனுள்வார் - அறிவாளிகள். அமைந்தார் – (நற்பண்பு) அமைந்த சான்ருேர். வேட்ட இனியவே – (பிறர்) விரும்பிய இனிய செயல்களையே. முனியாதார் – சினங்கொள்ளாதவர். முன்னிய - எண்ணியவற்றை. திரு - திருமகள்.

5. நல்லார்க்கும் - கல்வியில் மிக்கவர்க்கு. நன்னெறிச் செல்வார்க்கு – தவநெறியில் ஒழுகும் பெரியோர்க்கு. கடைகட்கும் – கீழ்மக்களுக்கும். தம் கைத்து உடையார்க்கும் – தம்மிடம் பொருளுடைய செல்வர்க்கும். இந்த நால்வருக்கும் எல்லா வூர்களும் தம் ஊரேயாம். கீழ்மக்களுக்கு எந்த ஊரிலும் மதிப்பிராது. எனவே அவர்களுக்குத் தம்மூர் என்று ஏதுமில்லை. செல்வமுடையவர் எந்த ஊரிலும் விரும்பியதைப் பெற இயலும்.

## 5. ஆசாரக் கோவை

### நல்லொழுக்கங்கட்குக் காரணம்

நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னுத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1

### ஒழுக்கம் பிழையாதவர் அடையும் உறுதி

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர். 2

### எறும்பு முதலியபோற் செயலாற்றல்

நந்தெறும்பு தூக்கணம் புள்காக்கை யென்றிவைபோல்
தங்கரும நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க் காசாரம்
எப்பெற்றி யானும் படும். 3

### விருந்தினர்க்கு ஊணொடு செய்யுஞ் சிறப்பு

முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்
கிடைக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யுஞ் சிறப்பு. 4

### உதவிப் பயனுரையாமை முதலியன

உதவிப் பயனுரையார் உண்டி பழியார்
அறத்தொடு தானேற்ற நோன்பு வியவார்
திறத்துளி வாழ்துமென் பார். 5

—பெருவாயின் முள்ளியார்

### குறிப்புரை

ஆசாரக் கோவை என்னும் இந்த நூலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். அன்றாடம் செய்யவேண்டிய நீராடல், உண்ணல், உடுத்தல் முதலிய செயல்களை எவ்வாறு செய்தால் நன்மை பயக்கும், எவ்வாறு செய்தால் தீமை பயக்கும் என்று இந்நூல் தெளிவாக விளக்குகின்றது.

1. நன்றியறிதல் - பிறர்செய்த உதவியை மறவாமை. பொறை – பொறுமை. இன்னாத - துன்பந்தருவன. ஒப்புரவு – உலகநடை. நட்டல் – நட்புச் செய்தல். ஆசாரவித்து - நல்லொழுக்கத்திற்கு விதைபோன்ற காரணம்.

2. ஒழுக்கம் பிழையாதவர் – ஒழுக்கத்தில் தவறாதவர். நெடுவாழ்க்கை – நீண்ட வாழ்நாள். வனப்பு – அழகு. நிலக்

கிழமை – நிலத்துக்கு உரிமை. மீக்கூற்றம் – சொல்லின் மேன்மை. இலக்கணத்தால் – (அவற்றிற்குரிய) இலக்கணங் களுடன். எய்துப – அடைவர்.

3. நந்து எறும்பு – ஆக்கமுள்ள எறும்பு. தூக்கணம் புள் – தூக்கணங் குருவி. கடைப்பிடித்து – கைக்கொண்டு. அ பெற்றி ஆக – அந்த மூன்று உயிர்களின் தன்மைபோல். முயல்பவர்க்கு – செய்பவர்க்கு. ஆசாரம் – ஒழுக்கம். எ பெற்றி யானும் – எந்த வகையாலும். படும் – சிறப்புறும்.

4. தலைச் சென்றார்க்கு – தம்மிடத்து வரும் விருந் தினர்க்கு. ஊணொடு – உணவளித்தலோடு. செய்யும் சிறப்பு – சிறப்பாகச் செய்யவேண்டுவன. முறுவல் – புன்சிரிப்பு. இனி துரை – இனிதாகப் பேசுதல். கால்நீர் – கால் கழுவ நீர் அளித் தல். மணை – உட்கார ஆதனம். பாய் – படுக்கப் பாய். கிடக்கை – தங்க இடம்.

5. திறந்து உள்ளி – (பெரியோருடைய) ஒழுக்கத்தை உளத்திற் கொண்டு. வாழ்தும் – வாழக் கடவோம். என்பார் – என விரும்புவோர். உதவிப் பயன் – (தாம் செய்த) உதவியின் பயனை. உரையார் – (தாமே) எடுத்துக் கூறமாட்டார். உண்டி – உணவு. பழியார் – இகழ்ந்து கூறமாட்டார். நோன்பு – தன்னை ஒறுத்துக்கொள்ளுதல். வியவார் – (தாமே) புகழ்ந்து கூறமாட்டார்.

# III கதைப் பகுதி

## 1. குசேலோபாக்கியானம்

*'பந்தனை அகன்ற மேலோய்!
பற்பல நாட்குப் பின்பு
வந்தனை; எனக்கென் கொண்டு
வந்தனை? அதனை இன்னே
தந்தனை? யாயின் நன்று!
தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற(து)!' என்றான்
தெரிவரு வஞ்சக் கள்வன். 1

'இனியசிற் றுணவே தேனும்
இன்றிநீ வருவாய் கொல்லோ!
இனியநின் உள்ளம் இன்றே
எண்ணியான் அறிதல் வேண்டும்!
இனியநின் மனைவி, 'வாளா
ஏகிவா,' என்ப ளோ! மற்று
இனியஎற்கு அன்றி யார்க்குக்
கொண்டுவந் திருக்கின் றாயே? 2

'திருந்த இங்கு அளித்தி!' என்று
செங்கரம் அலர்த்தி நீட்டப்
'பொருந்தஇன் பாலுண் பான்பால்
புளித்தகா டியைக்கொடுத் திட்டு
'அருந்திடு,' என்(று) உரைத்தல் போன்ம்இவ்
வவற்கொடை,' என்று வாளா
இருந்தனன் குசேல மேலோன்;
இவன்உளம் அறிந்த கண்ணன். 3

நடலைதீர்ந் தவன்மெய்ப் போர்த்த
நாள்பல கண்ட கந்தைப்
படர்தலைச் சுருக்கி வாங்கிப்
பாங்குவைத்து இனிதின் ஆய்ந்து
விடலருங் கற்பு வாய்த்த
மின்னனார் வணங்கும் தெய்வம்
திடமுற முடிந்து வைத்த
சிறுபொதி கண்டு கொண்டான். 4

*மலிதரும் அன்பின் தந்த
வண்பொதி அவிழ்த்து நோக்கி
'வலிதரும் அவற்றுள் நன்று
வாய்த்தது நமக்கி தென்ன?
ஒலிதரு கழற்கால் ஐயன்
ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயில்
போகட்டுக் கொண்டான் மாதோ. 5

—வல்லூர் தேவராசப் பிள்ளை

## குறிப்புரை

இந்நூலை இயற்றியவர் வல்லூர் தேவராசப் பிள்ளை ஆவர். குசேலருடைய கதை, பாகவத புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. அக்கதையை விவரமாக இச்செய்யுள் நூல் எடுத்துரைக்கிறது.

குசேலர் என்பவர் இளமையில் ஆயர்ப்பாடிக்கண்ணனுடன் சாந்தீப முனிவரிடம் கல்வி பயின்றார். அவர்களிருவரும் நெருங்கிய நண்பர்களாயிருந்தனர். பிற்காலத்தில் குசேலர் இல்வாழ்க்கையில் மிகவும் வறிய நிலையில் துன்புற்றார். அவருக்கு இருபத்தேழு மக்கள் பிறந்தார்கள். வறுமையின் கொடுமையால் மக்கள் பசியால் வாடினர். குசேலரின் மனைவி தன் கணவரை, அப்பொழுது துவாரகையை ஆண்டுவந்த

கண்ணனிடம் சென்று செல்வம் பெற்று வருமாறு அனுப்பினுள். சிறிதளவு அவலை இடித்தெடுத்து ஒரு துணியில் முடிந்து கொடுத்தனுப்பினுள். குசேலரும் அவ்வாறு துவாரகையை அடைந்து கண்ணனைக் கண்டார். பழைய நண்பரைக் கண்ட கண்ணன் மிகவும் மகிழ்ந்து, அவரை நன்கு வரவேற்ற பிறகு, அவர் கொணர்ந்திருந்த அவலைத் தேடி, ஒரு பிடி எடுத்து உண்டார். உடனே குசேலருடைய வீடு பெரிய மாளிகை யாகிச் செல்வம் கொழித்தது.

முதலிரண்டு செய்யுட்கள் கண்ணன் குசேலரிடம் கூறி யவை.

1. பந்தனை அகன்ற மேலோய் – உலகப் பற்றுக்கள் நீங்கிய உயர் பண்பினனே; (குசேலர்). இன்னே – இப் பொழுதே. தரு சுவை பக்கணம் – சுவைதரும் தின்பண்டம். தெரிவரு வஞ்சக் கள்வன் – யாரும் அறிந்து கொள்ள முடியாத பொய்ம்மையுடைய கண்ணன்.

2. இன்றி – இல்லாமல். வருவாய் கொல் – வருவாயா? (வரமாட்டாய்). உள்ளம் – மனம். வாளா – வீணுக; ஒன்று மில்லாமல். எற்கு – எனக்கு.

3. அளித்தி – கொடுப்பாயாக. செங்கரம் – சிவந்த கை. அலர்த்தி – விரித்து. இன் – இனிய. பாலுண்பான்பால் – பாலுண்பவனுக்கு. அருந்திடு – உண்பாயாக. போன்ம் – போலும். அவற்கொடை – அவலைக் கொடுத்தல். வாளா – செயலற்று.

4. நடலை – பொய்ம்மை. மெய்ப்போர்த்த–உடலை மூடி யிருக்கும். நாள் பல கண்ட கந்தை – மிகப் பழைய கந்தல் ஆடை. பாங்கு – அருகில். ஆய்ந்து – தேடி. கற்பு வாய்த்த மின்னனுர்-கற்புடை மகளிர். வணங்கும் தெய்வம் – வணங்கு கிற தெய்வம் போன்றவள் (குசேலரின் மனைவி). சிறுபொதி– சிறிய முடிப்பு.

5. வண்பொதி – பரிசாகிய சிறு முடிப்பு. வலிதரும் – உடலுக்கு வலிமை தருகிற. வாய்த்தது – கிடைத்தது. காதல் பொலிதர – அன்புமிக. போகட்டுக் கொண்டான் – போட்டுக் கொண்டான். மாது, ஓ – அசைச் சொற்கள்.

## 2. காகம் நாகத்தைக் கொன்ற கதை

கோடுறு சினையிற் காகம்
கூடுவைத் தநேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்(கு)
அதுபெறு முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
நலிந்துளம் மெலிந்து வாடி. 1

தன்னுயிர்ப் பாங்க னான
சம்புகன் அருகுபோய், "இங்(கு)
என்னசெய் குவன் நான்?" என்ன,
"இதைக்கொலல் அரிதோ! நீபோய்
மன்னவன் தேவி யாடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
போடுக பொந்தில்" என்ன. 2

காகம் அப்படியே செய்யக்
காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
ஈர்த்தனர்; ஈரும் போதில்
நாகமங் கிருந்து சீற,
நறுக்கினர் இருதுண் டாக. 3

—பஞ்சதந்திரப் பாடல்

### குறிப்புரை

இக்கதை, பஞ்சதந்திரம் என்ற நூலில் உள்ளது. இதைத் தமிழ்ச் செய்யுட்களாக இயற்றியவர் வீரமார்த்தாண்ட தேவர்.

1. கோடு உறுசினை - கொம்பினுடன் இணைந்துள்ள கிளை. பேடு-பெட்டை. நாடி - ஆராய்ந்து தேடி. நலிந்து - வருந்தி.

2. பாங்கன் - நண்பன். சம்புகன் - நரி. ஆடும் - நீராடும். மஞ்சனச் சாலை - நீராட்ட அறை.

3. ஏகி - சென்று. ஈர்த்தனர் - இடித்தனர். மா மரம் - பெரிய மரம்.

# IV பல்சுவைப் பகுதி

## 1. முக்கூடற் பள்ளு

பங்க யந்தலை நீட்டிக் குரம்பினிற்
பச்சை இஞ்சியின் பார்சடை தீண்டும்;
தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்
தடவி மெள்ளத் தொடும்; அந்த மஞ்சள்
அங்க சைந்திடும் காய்க்கதிர்ச் செந்நெல்
அளாவி நிற்குமச் செந்நெலு மப்பால்
செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்
சீவல மங்கைத் தென்கரை நாடே.

### குறிப்புரை

இந்நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. பள்ளர்களின் வாழ்க்கையை நாடகம்போல் அழகுற இந்நூல் எடுத்துரைக் கிறது.

முக்கூடல் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிர பரணி என்ற பொருநையாற்றின் கரையில் உள்ளது. இவ்வூர் பொருநையாற்றின் வடகரையிலுள்ளது. இவ்வூருக்கு அருகே தென் கரையில் சீவலமங்கை என்ற ஓரூர் இருக்கிறது. இச் செய்யுளில், சீவலமங்கையின் வளத்தை ஒரு பள்ளி எடுத் துரைக்கிருள்.

பங்கயம் - தாமரை. குரம்பு - வரப்பு. பார் சடை - பருத்த சடை; இஞ்சியின் தொங்கும் இலைகள். தீண்டும் - தொடும்.

மஞ்சள் கழுத்து - மஞ்சள் செடியின் தண்டுப்பகுதி. அளாவிநிற்கும் - கலந்திருக்கும். கைதரும் - தொடும்.

சீவலமங்கை நாட்டில், குளத்தின் ஓரத்தில் வளரும் தாமரை, கரையில் வளரும் இஞ்சி, மஞ்சள், நெற்பயிர், கரும்புப் பயிர் இவை யெல்லாம் முறையே ஒன்றையொன்று தொடுமாறு நெருங்கியிருக்கும் என்பது கருத்து.

## 2. திருக்குற்ருலக் குறவஞ்சி

* முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்;
முற்றம் எங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக்
[கொண்டோடும்;
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்;
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்;
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்;
தேன் அலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்;
வழங்குகொடை மகராசர் குறும்பலவின் ஈசர்
வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே;

—மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர்

### குறிப்புரை

இந்நூல், குறவஞ்சி அல்லது குறம் என்ற சிறுநூல் வகையைச் சேர்ந்தது. குறவரின் வாழ்க்கையை நாடகம்போல் அமைப்பது. இச் செய்யுளில் குறத்தி குற்ருல மலையின் மலைவளங் கூறுகிருள்.

முழங்கு திரை - ஒலிக்கின்ற அலைகள். புனலருவி – நீர் வீழ்ச்சி. கழங்கு – பெண்டிர் ஆடுவதற்குப் பயன்படுத்தும் ஒரு காய். முற்றம் – வீட்டின் முன் பக்கம். சிற்றில் – சிறுமிகள் கட்டிய மணல் வீடு.

கிம்புரியின் கொம்பு-பூண்கட்டிய யானைக்கொம்பு. யானைக் கொம்பு, தினை இடிக்க உலக்கையாகப் பயன்படுகிறது. செழுங் குரங்கு-பெரிய குரங்குகள். தேமாவின் பழம் – இனிப்பான சுவையுடைய மாம்பழங்கள். தேன் அலர் சண்பகம் - தேன் துளிக்கும் சண்பகமலர். வாசம் – வாசனை. வெடிக்கும்-பரவும். குறும்பலவில் ஈசர் – குறும்பலா மரத்தடியில் அமர்ந்துள்ள திருக்குற்ருல நாதர். திரிகூடமலை – திருக்குற்ருல மலை.

## 3. பாரததேசம்

* வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்—அடி,
மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்; [எங்கள்
பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்—
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம். (1)

* சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்;
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்;
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம். (2)

* ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள் வைப்போம்;
ஓயுதல் செய்யோம்; தலைசாயுதல் செய்யோம்;
உண்மைகள் சொல்வோம்; பல வண்மைகள் செய்வோம்.

*'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றே
தமிழ் மகள் சொல்லியசொல் அமிழ்தம் என்போம்;
நீதி நெறியில் நின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர். (4)

—சுப்பிரமணிய பாரதியார்

### குறிப்புரை

இந்நூலாசிரியரான பாரதியார் உலகப் பெருங் கவிகளுள் ஒருவர். நம் விடுதலைப் போரில் மக்களை வீறுகொண்டெழச் செய்தவர். இவருடைய பாடல்கள் எளிமையும் இனிமையும் செறிந்து விளங்குபவை.

1. வெள்ளிப் பனிமலை – இமய மலை.

2. சிங்களத் தீவு – இலங்கை. சேது - இராமேசுவரம். வங்கத்தில் ஓடிவரும் நீர் – கங்கை யாறு.

3. ஆலைகள் – தொழிற் சாலைகள். ஓயுதல்–ஓய்ந்திருத்தல். தலைசாயுதல் – உறங்கல். வண்மை – வளம்.

4. தமிழ் மகள் - ஔவையார். நேர்மையர் - நேர்மை யான தன்மையுடையவர்.

## 4. கடமையுணர்ச்சி

இன்னிசை பாடுங் கருங்குயிலும் நல்ல
இன்மொழி பேசும் பசுங்கிளியும்
பொன்மலர் பூத்துக் குலுங்குங் கொடிதவழ்
பூங்கொம் பமர்ந்திடும் காடையுடன்
பன்னிறங் காட்டிப் பயின்றிடும் புள்ளினம்
பாடி யழைத்தன பாங்குடனே
மென்மலர்ச் சோலையில் எம்முடன் ஆடிட
மேவிடுவாய் சின்னத் தம்பியென்றே. 1

கள்ளவிழ் பூம்பொழில் கண்டு விளையாடும்
கால மெனக்கிலை இப்பொழுதே
உள்ளங் கிளர்நடை யோடுடன் பள்ளிசென்
றோங்குயர் கல்வி பயின்றிடுவேன்
துள்ளி விளையாடும் நேரமும் உண்டஃது
தோழர்களே நல்ல மாலை யென்றே
பள்ளிக்குச் சென்றிடும் சின்னத்தம்பி சொல்லும்
பாடி யழைக்கும் பறவைகட்கே. 2

பனிதுயில் புல்வெளி தன்னிற் பகலவன்
பரப்பிடச் செங்கதிர்ப் பார்த்து வெள்ளைத்
தனிமுயல் ஓடிடும் தாவிக் குதித்திடும்
தனக்கு நிகரெவர் என்று சொல்லி
கனிதரு சோலைக் கயலொரு வாவியில்
களிவண்டு தாமரை மீதுலவி
இனியவாய்ப் பாடிடும் எம்முடன் ஆடிட
ஏகிடுவாய் சின்னத் தம்பியென்றே. 3

* கண்ணுக் கினியகண் காட்சியையும் என்றும்
காதுக் கினியபண் பாட்டினையும்
உண்ணக் குழையுந்தன் உள்ளமென் றாலுந்தான்
ஓதத் தகுங்கல்வி கற்றிடவே
எண்ணங்கள் யாவையும் தன்வழி யாக்கியே
ஏற்ற கடமைகள் ஆற்றிடவே
வண்ணப்பை ஏந்திய சின்னத்தம்பி மகிழ்
வார்ந்த முகத்துடன் பள்ளிசென்றான். 4

—கவிஞர் அமுதநலன்

## குறிப்புரை

1. இனிமை + இசை = இன்னிசை. கருமை + குயில் = கருங்குயில். இனிமை + மொழி = இன்மொழி. பசுமை + கிளி = பசுங்கிளி. பொன்மலர்-பொன்போலும் மலர். பூங்கொம்பு-அழகிய கிளை. புள்ளினம்-பறவை இனம். மென்மை + மலர் = மென்மலர். மேவிடுவாய்-விரும்பி வருவாய்.

2. கள் அவிழ்பூம்பொழில்-தேனைச் சொரிகின்ற பூக்களையுடைய சோலை. கிளர் நடை-பொங்கு நடை. ஓங்குயர்-ஒரு பொருள் பன்மொழி.

3. பனிதுயில் - பனித்துளி பொருந்திய. பகலவன்-ஞாயிறு. செம்மை + கதிர் = செங்கதிர் நிகர்-ஒப்பு. சோலைக்கு + அயல் = சோலைக்கயல். அயல்-அருகில். வாவி-குளம். களிவண்டு-தேனைப்பருகி மயங்கிய வண்டு. ஏகிடுவாய்-சென்றிடுவாய்.

4. பண்பாட்டு - பண்ணையுடைய பாட்டு. உண்ணக் குழையும் - துய்க்க விரும்பும். ஓதத்தகுங் கல்வி - கற்கவேண்டிய கல்வி. எண்ணங்கள் - விருப்பங்கள். தன்வழியாக்கியே-தன்பாற்படுத்தி. மகிழ்வார்ந்த-மகிழ்ச்சி மிக்க.

இயற்கையின் கண் உள்ள அழகுப் பொருட்கள் யாவும் தன்னை விளையாட அழைத்தபொழுதும், மாணவனாகிய சின்னத்தம்பி கடமையுணர்ச்சியோடு பள்ளிக்குச் செல்கின்றான். ‘வேலை நேரம் வேலை; விளையாட்டு நேரம் விளையாட்டு’, ‘கடமை முதலில், இன்பம் பிறகு’ என்பதே கருத்தாகக் கொள்க.

## 5. புத்தகசாலை

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச் சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்.
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்.
அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்,
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூல்கள்,
சுமைசுமையாச் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல்
[வேண்டும்.

—பாரதி தாசன்

### குறிப்புரை

இச்செய்யுளை இயற்றிய பாரதிதாசனர் புரட்சிக் கவிஞர் என அழைக்கப்படுகிருர். எளிய நடையில் உணர்ச்சிமிக்க பாடல்களை இவர் இயற்றியுள்ளார்.

சுவடிச் சாலை – புத்தக நிலையம். அமுதம் – அமிழ்தம். துறை துறையாய்-வகை வகையாக. தமிழ் நாட்டில் நூலகங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இச்செய்யுள் உணர்த்துகின்றது.

## 6. குடியரசு வாழ்த்து

உண்ணும் உணவுக்(கு) ஏங்காமல்,
உடுக்கும் ஆடைக்(கு) அலையாமல்,
பண்ணும் தொழில்கள் பல காண்போம்;
பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்;
அண்ணல் காந்தி வழிபற்றி
அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்;
எண்ணும் அன்பர் உளம்தங்கும்
இறைவா! துணைசெய் தருள்வாயே.

—தேசிக விநாயகம் பிள்ளை

## குறிப்புரை

இச்செய்யுளை இயற்றிய தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் எளிய நடையில் இனிய செய்யுட்கள் பல இயற்றியுள்ளார். புத்தருடைய வரலாற்றை ஆசிய சோதி என்ற செய்யுள் நூலாக எழுதித் தமிழை வளம்படுத்தியுள்ளார். அண்மையில் இவ்வுலக வாழ்வை நீத்தவர்.

ஏங்காமல் – (கிடைக்காமையால்) வருந்தாமல். அலையாமல் – தேடித்திரியாமல். பண்ணும் தொழில் – செய்தொழில்; கைத்தொழில். காண்போம் - அமைப்போம்; ஏற்பாடு செய்வோம். பஞ்சப்பேய்-பஞ்சமாகிற பேய். அண்ணல் – பெருமையுடையவர். அகிலம்-எல்லா உலகங்களும். எண்ணும் அன்பர்-வழிபடுவோர். உளம்-மனம். இறைவா-கடவுளே! நம் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குக் கடவுளின் துணையை வேண்டுகிறார்.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் ★ சென்னை-600 008. ★
135629

Approved by the Text-Book Committee, Madras.
Vide Fort St. George Gazette Supplement to Part II
Section 3 Page 6 dated 10—5—61.

Used 10·9 Kg. Double Crown (51 × 76 cms.) White Printing

பதிப்பாளர்

வி. சூ. சுவாமிநாதன்

14, மேலக்கோபுரத் தெரு, மதுரை-1.

4206

3/27, பிராட்வே, சென்னை-1. | 128, வெரைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர்-1.

பதிப்புரிமை]

[விலை ரூ. 1–50